# 1

# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு

*இவ்வாண்டுப்பகுதியில் காணப்பட்ட தாழ்ந்த பணவீக்க சூழலுக்கிடையிலும் உண்மை பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட மிதமான விரிவாக்கத்துடன் உலகளாவிய மற்றும் உள்நாட்டுக் குழப்பங்களினால் இலங்கைப் பொருளாதாரத்தின் பாதிக்கப்படக்கூடியதன்மை 2018இல் அதிகளவிற்குப் புலனாகக் கூடியதொன்றாகவிருந்தது. 2018இல் உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி முன்னைய ஆண்டின் 3.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.2 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிக்கு 4.7 சதவீதத்தினால் விரிவடைந்த பணிகள் நடவடிக்கைகளும் 4.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளாண்மை நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீட்சியும் பெருமளவிற்கு ஆதரவாக அமைந்தன. கட்டடவாக்கம் சுருக்கமடைந்தமையின் முக்கிய விளைவாக இவ்வாண்டுப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகள் 0.9 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு மெதுவடைந்தன. செலவின அணுகுமுறையின்படி, நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் இரண்டும் வளர்ச்சிக்கு ஆதரவளித்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடு முன்னைய ஆண்டின் 28.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 28.6 சதவீதமாக விளங்கிய வேளையில் சேமிப்பு - முதலீட்டு இடைவெளி இவ்வாண்டுப்பகுதியில் விரிவடைந்து, பற்றாக்குறையினை நிரப்புவதற்கு வெளிநாட்டு மூலவளங்களின் மீது அதிகளவில் தங்கியிருப்பதனை எடுத்துக்காட்டியது. இலங்கைப் பொருளாதாரத்தின் மொத்த அளவு ஐ.அ.டொலர் 88.9 பில்லியனில் மதிப்பிடப்பட்ட வேளையில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2018இல் ஐ.அ.டொலர் 4,102 இல் பதிவுசெய்யப்பட்டது. இது முன்னைய ஆண்டினைவிடச் சிறிதளவு குறைவானதாகும். இவ்வாண்டுப்பகுதியில் பொருளாதார நடவடிக்கையில் மிதமான வளர்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் தொழிலின்மை வீதத்தில் சிறிதளவு அதிகரிப்பும் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் வீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டன.*

*உலகளாவிய மற்றும் உள்நாட்டுக் காரணிகள் இரண்டினதும் காரணமாக பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை இவ்வாண்டுப்பகுதியில் தளம்பலடைந்தது. உலகளாவிய ரீதியில், குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கை வழமையடைந்தமையானது உலகளாவிய நிதியியல் நிலைமைகள் இறுக்கமாக்கப்பட்டமைக்கு வழிவகுத்ததுடன் அதன் மூலம் அது தோற்றம்பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்தான குறிப்பாக, இரட்டைப் பற்றாக்குறைகளைக் கொண்ட பொருளாதாரங்களின் மூலதன வெளிப்பாய்ச்சல்களுக்குக் காரணமாகியதுடன், செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினையும் அதிகரித்தது. இலங்கை கூட, இப்பாதிப்புக்களை குறிப்பாக, 2018 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து அனுபவித்தது. இது, நான்காம் காலாண்டுப்பகுதியில் அரசியலின் நிச்சயமற்றதன்மை மற்றும் நாட்டின் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமை என்பனவற்றினைத் தொடர்ந்து மேலும் மோசமடைந்தது. உள்நாட்டு ரீதியாக, பெயரளவு நியதிகளில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி, ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சியை விஞ்சியமையின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை, வரலாற்றில் முதற்றடவையாக ஐ.அ.டொலர் 10 பில்லியனை விஞ்சிக் காணப்பட்டது. இவ்வாண்டுப்பகுதியில் பணிகளின் ஏற்றுமதிகள் கணிசமாக அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்ட போதும் வணிகப்பொருட்களின் வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை, மந்தமடைந்த தொழிலாளர் பணவனுப்பல்கள், உயர்வடைந்து செல்லும் வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் என்பன நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 3.2 சதவீதத்திற்கு விரிவுபடுத்தின. நிதியியல் கணக்கானது 2018இல் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டத்தினைப் பதிவுசெய்த அதிகரித்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளிலிருந்தும்*

அதேபோன்று குறிப்பாக நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஊடான வெளிநாட்டிலிருந்து கிடைத்த கடன்பாடுகளினூடாகவும் நன்மையடைந்தது. இவ்வபிவிருத்திகளின் இணைந்த பெறுபேறு யாதெனில் சென்மதி நிலுவையில் திரண்ட நிலுவையில் காணப்பட்ட பற்றாக்குறையாகும். 2018இல் மத்திய வங்கி, சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதக் கொள்கையைப் பின்பற்றியதுடன் ரூபாவின் கடுமையான தேய்வினை அனுமதித்ததெனினும், குறிப்பாக, பாரிய மூலதன வெளிப்பாய்ச்சல்கள் இடம்பெற்று நியாயமற்ற ஊகங்களின் காரணமாக சந்தையில் மிகையான தளம்பல்கள் காணப்பட்ட வேளையில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கியும் அரசாங்கமும் தீர்வையை அதிகரித்தமை, அளவுத் தேவைப்பாடுகளை விதித்தமை, தெரிந்தெடுக்கப்பட்ட கடன்வழங்கலின் மீது பெறுமதிக்கான கடன் விகிதத்தினை இறுக்கமாக்கியமை மற்றும் ஊர்திகளின் இறக்குமதிக்கான சலுகை உரிமப்பத்திரங்கள் மீதான நாணயக் கடிதங்களின் வழங்கலை இடைநிறுத்தியமை என்பனவற்றின் மூலம் அத்தியாவசியமான இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு தொடர்ச்சியான பல்வேறு வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தின. இவ்வழிமுறைகளுக்கு உலகளாவிய நிதியியல் சந்தைகள் குறைந்தளவிற்குச் சாதகமற்றவையாக மாறியமைக்கும் பதிலிறுத்தும் விதத்தில், 2018இன் பிற்பகுதியிலும் 2019இன் தொடக்கத்திலும் சென்மதி நிலுவை மற்றும் செலாவணி வீதம் என்பன மீதான அழுத்தம் குறைந்தமையுடன் 2019இன் முதற் காலாண்டுப்பகுதியில் இலங்கை ரூபா முக்கிய நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்ததன் மூலம் முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட அளவுக்கதிகமான செலாவணி வீத உயர்வு ஓரளவிற்குச் சீர்செய்யப்பட்டது. விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஒழுங்குகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான கலந்துரையாடல்கள் மீளத் தொடங்கப்பட்டமையும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் 2019 பெப்புருவரியில் அலுவலர்மட்ட உடன்படிக்கை எய்தப்பட்டமையும் முதலீட்டு மனோபாவத்தினை மேம்படுத்த உதவின.

ரூபாவின் கடுமையான தேய்வு மற்றும் உள்நாட்டு பெற்றோலிய விலைச் சீராக்கங்களுக்கான விலையிடல் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டமை என்பனவற்றிற்கிடையிலும் முதன்மை மற்றும் மையப் பணவீக்கங்கள் இவ்வாண்டுப்பகுதியில் தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்டமைக்கு முன்னோக்கிய நாணயக் கொள்கை வழிமுறைகள், மேம்பட்ட உள்நாட்டு வழங்கல் நிலைமைகள் மற்றும் குறைவடைந்த கூட்டுக் கேள்வி நிலைமைகள் என்பன ஆதரவளித்தன. ஆண்டுப்பகுதியில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக 2018இன் பெரும்பாலான காலப்பகுதியில் உணவு விலைகள் வீழ்ச்சியடைந்தவிடத்து உணவு வகைகள் விலை அசைவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் முதன்மைப் பணவீக்கம் பெருமளவிற்கு தளம்பலடைந்தது. குறிப்பாக எதிர்பார்க்கப்பட்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் முறைமையின் கீழ், நடுத்தர காலப்பகுதியில் பணவீக்கம் நடு ஒற்றை இலக்கிற்குள் சிறந்த முறையில் பேணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறைவடைந்த பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மற்றும் உண்மைப் பொருளாதார நடவடிக்கை அது இருக்க வேண்டியளவு வளர்ச்சியிலும் பார்க்கக் குறைவாக இருந்தமை என்பன துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினை 25 அடிப்படைப் புள்ளியினால் குறைத்தமையின் மூலம் 2018 ஏப்பிறலில் நாணய இறுக்கமாக்கல் சுழற்சிவட்டத்தினை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான சமிக்ஞைகளைக் காட்டுவதற்கு மத்திய வங்கியினைத் தூண்டின. அதன் பின்னர், உள்நாட்டுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைந்த செயலாற்றத்திற்கு மத்தியிலும் வெளிநாட்டுத் துறை மீதான தொடர்ச்சியான அழுத்தத்தினைக் கருத்திற் கொண்டு, மத்திய வங்கி ஆண்டு முழுவதும் நடுநிலையான நாணயக் கொள்கை நிலையினைப் பேணியது. இருப்பினும் கூட, குறிப்பாக 2018 செத்தெம்பரிலிருந்து உள்நாட்டுப் பணச் சந்தையில் பாரியளவிலும் விடாப்பிடியாகவும் காணப்பட்ட திரவத்தன்மைப் பற்றாக்குறை வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீதும் பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு விகிதத்தினை 1.50 சதவீதப் புள்ளியினால் குறைத்தமையின் வாயிலாக 2018 நவெம்பரில் நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்கு மத்திய வங்கியை நிர்ப்பந்தித்தது. எனினும், அதேநேரம், நியதி ஒதுக்கு விகிதக் குறைப்பின் தாக்கத்தினைச் சமநிலைப்படுத்துவதற்காகவும் அதன் நடுநிலைக் கொள்கை நிலையினைப் பேணுவதற்காகவும் மத்திய வங்கி துணைநில் வைப்பு வசதி வீதத்தினை 75 அடிப்படைப் புள்ளிகளினாலும் துணைநில் கடன்வழங்கல் வீதத்தினை 50 அடிப்படைப் புள்ளியியாலும் அதிகரித்தமையின் மூலம் கொள்கை வீத வீச்சு 100 அடிப்படைப் புள்ளிகளினால் மேலும் குறுக்கமடைந்தது. இதன்படி, 2018 இறுதியில், துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வீதமும் முறையே 8.00 சதவீதமாகவும் 9.00 சதவீதமாகவும் காணப்பட்டன. 2019இன் ஆரம்பத்தில் ரூபாத் திரவத்தன்மையில் பற்றாக்குறை விடாப்பிடியாகக் காணப்பட்டமையினால் மத்திய வங்கி 2019 மாச்சு 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நியதி ஒதுக்கு விகிதத்தினை மேலும் 1.00 சதவீதப் புள்ளியினால் 5.00 சதவீதத்திற்குக் குறைத்துக் கொண்டது. அதேவேளை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் விரிந்த பணத்தின் ($M_{2b}$) வளர்ச்சி 2018இல் குறைவடைந்தது. இதற்கு வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் சுருக்கமடைந்தமையே காரணமாகும். எனினும், விரிந்த பணத்தின் வளர்ச்சிக்குள், இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகள் மற்றும் உயர்ந்த பெயரளவு மற்றும் உண்மைச் சந்தை வட்டி வீதங்கள் என்பனவற்றிற்கு மத்தியிலும் 2018இல்

*வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் ஒட்டுமொத்த விரிவாக்கம் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் உயர்வாகக் காணப்பட்டது.*

*அதேநேரம், 2018இல் இறைத் தொழிற்பாடுகள், அரசிறைத் திரட்சிப்படுத்தலில் காணப்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும் உயர்ந்த ஆரம்ப மிகை மற்றும் குறைந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக சில முன்னேற்றங்களை எடுத்துக்காட்டின. அரச அரசிறை 2018இல் மொ.உ.உற்பத்தியின் 13.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் செலவினமும் தேறிய கடன்வழங்கலும், வீழ்ச்சியடைந்தமைக்கு ஆண்டின் இறுதிப்பகுதியில் நிலவிய அரசியல் பதட்டங்களினால் பாதிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளின் நடைமுறைப்படுத்தல் தாமதப்பட்டமையால் குறைந்த அரச முதலீடுகள் காரணமாக விளங்கியன. குறைவடைந்த மூலதனச் செலவினமும் பொருளாதார நடவடிக்கைகள் தளர்வுறுவதற்குப் பங்களித்தது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அதிகரித்து அரசாங்கத்தின் குறைச் சேமிப்புக்களைப் பிரதிபலித்தது. அரச அரசிறைக்கும் வட்டியல்லா செலவினத்திற்குமிடையிலான வேறுபாட்டினைக் காட்டுகின்ற ஆரம்ப நிலுவை 2017இல் மொ.உ.உற்பத்தியின் 0.02 மிகையுடன் ஒப்பிடுகையில் 2018இல் மொ.உ.உற்பத்தியின் 0.6 சதவீத மிகையினைப் பதிவுசெய்தது. மூலதனச் செலவினத்தில் காணப்பட்ட கணிசமான குறைப்பின் விளைவாக வரவு செலவுத்திட்டப் பற்றாகுறை 2017இன் மொ.உ.உற்பத்தியின் 5.5 சதவீதத்திலிருந்து 2018இல் மொ.உ.உற்பத்தியின் 5.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆனால் 2018இற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 4.8 சதவீதம் கொண்ட இலக்கிடல் மட்டத்திலிருந்து பிறழ்வொன்று அவதானிக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற படுகடன் 2017 இறுதியின் 76.9 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 82.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதற்கு இவ்வாண்டுப்பகுதியில் வெளிநாட்டுப் படுகடனின் ரூபாப் பெறுமதியினைப் பாதித்த ரூபாவின் தேய்மானம், ஒப்பீட்டு ரீதியில் குறைந்த பெயரளவு மொ.உ.உற்பத்தி மற்றும் உயர்ந்த தேறிய கடன்பாடுகள் என்பன காரணங்களாக விளங்கின. தொடர்ந்துவரும் இடர்நேர்வுகளை, தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயத்தினை அறிமுகப்படுத்துவதனூடாகவும் கட்டுப்படுத்த முடியும். இது, எதிர்காலத்தில் அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சியை நோக்கிய தொடர்ச்சியான கடப்பாடுகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் அரச படுகடன் கடப்பாடுகளை முகாமைப்படுத்த உதவும்.*

*வங்கித்தொழில் துறையின் மிதமான ஆனால் உறுதியான வளர்ச்சியின் உதவியுடன் 2018இல் நிதியியல் துறை தொடர்ந்தும் விரிவடைந்தது. எனினும், சொத்துக்களின் தரத்தில் ஏற்பட்ட ஓரளவு மோசமான தன்மை தொழிற்பாட்டுச் செலவில் ஏற்பட்ட உயர்வு மற்றும் உயர்ந்த வரிகள் என்பனவற்றின் முக்கிய காரணமாக வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கி பாசல் III இன் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்தியமை, இலங்கைக் கணக்கீட்டு நியமம் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றியமை உட்பட முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளை வலுப்படுத்தியது. அதேவேளை, சவால் நிறைந்த சூழ்நிலைக்கு மத்தியிலும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறைகள் ஓரளவு மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன், மத்திய வங்கி இடர்ப்பாட்டிலுள்ள நிதிக் கம்பனிகளைக் கலைத்துவிடுவதற்கும் இத்துறையில் காணப்பட்ட கரிசனைகளைக் கட்டுப்படுத்துவதற்குமான வழிமுறைகளை மேற்கொண்டது. முதலீட்டாளர் மனோபாவத்தினை பாதித்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்கள் மீதான மோசமான அபிவிருத்தியின் காரணமாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மோசமான செயலாற்றத்தினைக் கொண்ட இன்னொரு ஆண்டினைப் பதிவுசெய்தது.*

*கடந்த தசாப்தத்தில் விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்த வேளையில், உண்மைப் பொருளாதார செயலாற்ற நியதிகளில் முன்னேற்றம் அண்மைய ஆண்டுகளில் எதிர்பார்க்கப்பட்டமைக்கும் கீழே வீழ்ச்சியடைந்தமைக்கு தேவையான அமைப்பியல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட தாமதமும் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்பட்ட முரண்பாடானதும் ஊகிக்கப்பட முடியாததுமான கொள்கைகளும் தாக்கத்தினை ஏற்படுத்தின. இத்தகைய ஒழுங்கீனங்கள் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்தினை முடங்கச் செய்து அதன் மூலம் உயர்ந்த வருமானப் பொருளாதாரமொன்றிற்கு நாடு முன்னேறுவதனைத் தடை செய்தன. இத்தகைய பின்னணியில் வணிகப்பொருள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை மேம்படுத்துவதற்குமான தேசிய ஏற்றுமதி உபாயம் மற்றும் புதிய வர்த்தக கொள்கை, இறை ஒழுங்குகள் மற்றும் படுகடன் உறுதிப்பாட்டினை மேம்படுத்தும் விதத்தில் இறைத்திரட்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக 2020 அளவில் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பண இலக்கிடலைப் பின்பற்றுவதை நோக்கி மத்திய வங்கி நகர்வு என்பனவற்றை உள்ளடக்கிய ஏற்கனவே நடைமுறையில் உள்ள சீர்திருத்த நிகழ்ச்சிநிரலை விரைவுபடுத்துவதற்கு அனைத்து ஆர்வலர்களும் ஒன்றுதிரண்ட முயற்சியை மேற்கொள்வது இன்றியமையாததாகும். இச்சீர்த்திருத்தங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவது இலங்கையின் பொருளாதாரத் தோற்றப்பாட்டினை மேம்படுத்துவது மற்றும் இந்து சமுத்திரத்தின் உபாயம் மிக்க அமைவிடத்தில் நாடு*

அட்டவணை 1.1

**பேரண்டப் பொருளாதார செயலாற்றம் (2014-2018)**

| குறிகாட்டி | அலகு | 2014 | 2015 | 2016 | 2017 (அ) | 2018 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (இ)** | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 5.0 | 5.0 | 4.5 (அ) | 3.4 (ஆ) | 3.2 |
| நடைமுறை சந்தை விலையில் மொ.உ.உ. | ரூ.பில் | 10,361 | 10,951 | 11,996 (அ) | 13,418 (ஆ) | 14,450 |
| தலைக்குரிய மொ.உ.உ. (ஈ) | ஐ.அ.டொ. | 3,819 | 3,842 | 3,886 (அ) | 4,104 (ஆ) | 4,102 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -10.4 | -10.4 | -10.8 (அ) | -10.9 | -11.6 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -2.5 | -2.3 | -2.1 | -2.6 | -3.2 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | 1,369 | -1,489 | -500 | 2,068 | -1,103 |
| வெளிநாட்டு அலுவர்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 8,208 | 7,304 | 6,019 | 7,959 | 6,919 |
| **இறைத்துறை (இ) (உ)** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -1.2 | -2.3 | -0.6 | -0.7 | -1.2 |
| முதன்மை நிலுவை | மொ.உ.உ. இன் % | -1.5 | -2.9 | -0.2 | 0.02 | 0.6 |
| திரண்ட நிலுவை | மொ.உ.உ. இன் % | -5.7 | -7.6 | -5.3 | -5.5 | -5.3 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 71.3 | 77.7 | 78.3 | 76.9 | 82.9 |
| **நாணயத்துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஊ) | % | 13.4 | 17.8 | 18.4 | 16.7 | 13.0 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ( $M_{2b}$ இல்)(அ)(ஊ) | % | 8.6 | 25.0 | 21.6 | 14.7 | 15.9 |
| ஆண்டுச்சாராசரிப் பணவீக்கம் (எ) | % | 3.3 | 2.2 | 4.0 | 6.6 | 4.3 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2010 தள ஆண்டை அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது
(ஈ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 மார்ச்சு 19 கிடைக்கப்பெற்ற 2016 மற்றும் 2017ற்கான திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலானவை
(ஊ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(எ) 2014 வரையிலான தரவுகள் கொ.நு.வி.சு (2006/07=100) அடிப்படையாக கொண்டதுடன் 2015ற்குப் பின்னரான தரவுகள் கொ.வி.சு. (2013=100) அடிப்படையாகக் கொண்டவை

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

*அமைவு பெற்றுள்ளமையினையும் பரிசீலனையில் கொண்டு முதலீட்டிற்கான உயர் தன்மை கொண்ட நாடென்ற முறையில் அதன் செழிப்புமிக்க தன்மையினை மேம்படுத்துவதற்கு மட்டுமன்றி, அதன் ஒட்டுமொத்த வாழ்க்கைத்தரத்தினையும் அதன் மக்களின் வாழ்வினது தரத்தையும் மேம்படுத்துவதற்கும் இன்றியமையாததாக இருக்கும்.*


## 1.2 2018இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புக்கள்

### உண்மைத்துறை அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கம்

**இலங்கைப் பொருளாதாரம் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தற்காலிக மதிப்பீடுகளின்படி உண்மை நியதிகளில் 2017இன் 3.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2018இல் 3.2 சதவீத மிதமான வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.** கடந்த ஆண்டில் ஏற்பட்ட தீவிர வானிலை நிலைமைகளால் ஏற்பட்ட தாக்கத்திலிருந்தான மீட்சியை குறிக்கும் வகையில் வேளாண்மைச் செயற்பாடுகள் 2018இல் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதற்கிணங்க, ஏனைய தானியங்கள் மற்றும் மரக்கறிகள் என்பன 2018இன் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்த அதேவேளை அரிசி உற்பத்தியானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. வேளாண்மைத் துறையில் பதிவு செய்யப்பட்ட மேம்படுத்தப்பட்ட வளர்ச்சி, 2017இன் வரட்சியினால் பாதிக்கப்பட்ட வளர்ச்சியின் தள தாக்கத்தையும் பிரதிபலித்தது. அதேவேளை, கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சி வேகமானது இவ்வாண்டு காலப்பகுதியில் முன்னைய ஆண்டின் 4.1 சதவீதத்திலிருந்து 0.9 சதவீதத்திற்கு கணிசமாக மிதமடைந்தது. இவ்வாண்டு காலப்பகுதியில் கைத்தொழில் தொடர்பான நடவடிக்கைகளின் மெதுவடைவு குறிப்பாக கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளின் சுருக்கத்தால் ஏற்பட்டது. எனினும், உற்பத்தி, மின்சாரம், நீர் மற்றும் கழிவு சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் செயலாற்றம் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான

வரைபடம் 1.1

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு நடவடிக்கை வாரியான பங்களிப்பு**




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## சிறப்புக்குறிப்பு 01

## பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் பேரண்டப் பொருளாதாரக் கொள்கை வகுப்பு தொடர்பில் தேசிய கணக்குகள் மதிப்பீடுகளுக்கு அடிக்கடி செய்யப்படும் பாரிய திருத்தங்களின் தாக்கம்


பல்வேறு தீர்மானங்களை எடுக்கும் நோக்குடன் பொருளாதாரமொன்றின் போக்கினை அளவிடுவதற்காகப் பேரண்டப் பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்களினாலும் முதலீட்டாளர்களினாலும் ஏனைய ஆர்வலர்களினாலும் பயன்படுத்தப்படுகின்ற முக்கியமானதொரு அளவீடாக தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் காணப்படுகின்றன. ஆகவே, பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் பரிணாம அமைப்பினை அறிந்து கொள்வதற்காக கிரமமாக இற்றைப்படுத்தப்பட்டு வரும் துல்லியமான தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் நாட்டின் தேசிய புள்ளிவிபரவியல் முகவரினால் சரியான நேர அடிப்படையில் கிடைக்கச் செய்யப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2015இல் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் துல்லியத்தன்மையினை அதிகரிப்பதனையும் பொருளாதாரத்தின் உண்மையான அமைப்பினை பிரசன்னப்படுத்துவதனையும் நோக்கங்களாகக் கொண்டு, இலங்கையின் தேசிய புள்ளிவிபர முகவரான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மொ.உ.உற்பத்தியின் அடிப்படை ஆண்டினை 2002 இலிருந்து 2010 இற்கு மாற்றியமை தேசிய கணக்குகளை தொகுக்கும் முறைக்குச் செய்யப்பட்ட மிகப்பெரும் திருத்தமாகும். மீள்தளப்படுத்தும் செயன்முறையில் பன்னாட்டு வகைப்படுத்தல்கள் தேசிய கணக்குகளின் ஐக்கிய நாடுகள் முறைமை - 2008 தொகுப்பு முறையியல்கள் பின்பற்றப்பட்டமை போன்றவை தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல முன்னேற்றங்களாகும். இதன்படி, 2015இன் முதற் காலாண்டிலிருந்து இலங்கையின் தேசிய கணக்குகள் 2010 இனை அடிப்படை ஆண்டாகக் கொண்டு தொகுக்கப்பட்டதுடன், நாட்டில் இடம்பெற்று வருகின்ற புதிய பொருளாதார நடவடிக்கைகளை, குறிப்பாக மேம்பட்ட அளவீட்டு உள்ளடங்கல்களூடாக பெற்றுக்கொள்ளும் பொருட்டு தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் தேசிய கணக்குகளின் தள ஆண்டினை காலத்திற்குக் காலம் மீள்தளப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது[1].

தள ஆண்டில் செய்யப்பட்ட இம்மாற்றத்துடன் சேர்த்து தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் 2015 இலிருந்து தேசிய கணக்கு மதிப்பீடுகளின் திருத்தக் கொள்கையொன்றினையும் அறிமுகப்படுத்தியது. திருத்தக் கொள்கையின்டி 'தற்காலிக மதிப்பீடுகள்' முன்கூட்டியே வெளியிடப்பட்ட நாட்காட்டி ஒன்றினைப் பெருமளவிற்குப் பின்பற்றி தொடர்பான காலாண்டு முடிவடைந்து ஏறத்தாழ 75 நாட்களின் பின்னர் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. ஆண்டு மதிப்பீடுகள் வெளியிடப்படும் பொழுது அதே ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளுக்குமான மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குமான திருத்தப்பட்ட மதிப்பீடுகள் 'திருத்தப்பட்ட தற்காலிக மதிப்பீடுகள்' என வெளியிடப்படுகின்றன. இறுதித் தரவுகள் கிடைக்கத்தக்கதாக இருக்கும் பொழுது 'இறுதிக் காலாண்டு மற்றும் ஆண்டு தேசிய கணக்கு மதிப்பீடுகள்' வெளியிடப்படுகின்றன.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் திருத்தக் கொள்கையின்படி, தள ஆண்டுத் திருத்தங்களினதும் தற்காலிகமான தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் திருத்தங்களினதும் கோட்பாடுகள் பன்னாட்டின் மிகச் சிறந்த நடைமுறைகளுக்கிசைவாக[2] மேற்கொள்ளப்பட்ட போதும், அடிக்கடி செய்யப்படும் திருத்தங்கள் தரவுகளினால் பெறப்படும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை எடுக்கும் கொள்கை வகுப்போருக்கும் அதேபோன்று முதலீட்டாளர்களுக்கும் சவால்மிக்கதாகக் காணப்படுகிறது. இச்சவால்கள் பெரும்பாலான பொருளாதாரங்களுக்குப்[3] பொதுவானவை எனினும், நிறுவப்பட்ட பேரண்டப் பொருளாதார இணைப்புக்களைப் பயன்படுத்தி பாரிய திருத்தங்களுக்கு விளக்கமளிக்க முடியாததாகையால், குறிப்பாக, தேசிய கணக்குகளின் முதலாவது தற்காலிக மதிப்பீடுகள் வெளியிடப்படும் ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்த பின்னர் 2.5 இலிருந்து 3 மாதங்களின் பின்னர் வெளிப்படும் போது இது விரும்பத்தக்கனவாக இருப்பதில்லை.

வரைபடம் சி.கு. 1.1
காலாண்டு உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி
(ஆண்டுக்காண்டு)




*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

ஆண்டறிக்கை 2015இல் ஆராயப்பட்டவாறு, காலாண்டு உண்மை மொ.உ.உற்பத்தி வீதங்கள் மீதான தேசிய கணக்குகளின் பிந்திய மீள்தளப்படுத்தலின் தாக்கத்தினை வரைபடம் சி.கு.1.1 காட்டுகின்றது. உதாரணமாக, 2012இன் 1ஆம் காலாண்டில் 2002 அடிப்படை ஆண்டின் கீழ் 8.0 சதவீதத்தில் மதிப்பிடப்பட்ட உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதம் 2010 அடிப்படை ஆண்டின் கீழ் 16.1 சதவீதத்தினைப் பதிவுசெய்த வேளையில் 2002 அடிப்படையாண்டின் கீழ் 2013இன் 4ஆம் காலாண்டில் 8.2 சதவீதத்தில் மதிப்பிடப்பட்டிருந்த உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதம், 2010 அடிப்படையாண்டின் கீழ் 0.5 சதவீதமாக

1 அண்மைய ஆண்டுகளுக்கான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வளர்ச்சி தொடர்பான மதிப்பீடுகள், பொருளாதார ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள பல உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முகவர்களின் வளர்ச்சி எறிவுகளுக்கு குறிப்பிடத்தக்களவிற்குக் கீழே காணப்பட்டதுடன், அந்நேரத்தில், மற்றைய பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகளின் அசைவுடன் இணைந்து செல்வதாகவும் காணப்படவில்லை. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தரவுகளை உள்ளடக்குவதிலும் மொ.உ.உற்பத்தியின் தொகுப்பின் தரத்தில் காணப்படும் குறைபாடுகளையும் இனிச் செய்யப்படவுள்ள திருத்தங்களிலும் அதேபோன்று மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் எதிர்கால வெளியீடுகளிலும் காணப்படும் குறைபாடுகளையும் கட்டுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் கூட, இச்சிறப்பு குறிப்பின் நோக்கம் அக்குறைபாடுகளை ஆராய்வதல்ல. ஆனால் தேசிய கணக்கு மதிப்பீடுகளுக்கு அடிக்கடி செய்யப்படும் பாரிய திருத்தங்கள் காரணமாக பொருளாதாரம் எதிர்நோக்கும் சவால்களை எடுத்துக்காட்டுவதேயாகும்.

2 பார்க்கவும், Berry, F.; Iommi, M.; Stanger, M. and Venter, L. "The Status of GDP Compilation Practices in 189 Economies and the Relevance for Policy Analysis." IMF Working Papers, 2018, WP/18/37.

3 பார்க்கவும், for instance, Orphanides, A. "Monetary Policy Evaluation with Noisy Information." Journal of Monetary Economics, 2003, 50(3), pp. 605-31; Orphanides, A. and van Norden, S. "The Unreliability of Output-Gap Estimates in Real Time." The Review of Economics and Statistics, 2002, 84(4), pp. 569-83; and Giannone, D.; Reichlin, L. and Sala, L. "Monetary Policy in Real Time." NBER Macroeconomics Annual, 2004, 19, pp. 161-200.

அட்டவணை சி.கு. 1.1

**செலவின அடிப்படையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி, நடைமுறை விலைகளில் அவற்றின் பங்குகள்**

சதவீதம்

| கூறுகள் | | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *இறுதி நுகர்வுச் செலவினம்* | *2019 மார்ச்சில் தரவு வெளியிடப்பட்டது* | *76.9* | *79.8* | *72.8* | *75.4* | *75.8* | *76.4* | *79.4* | *78.3* | *78.8* |
| | *2018 யூலையில் தரவு வெளியிடப்பட்டது* | *76.9* | *79.8* | *72.8* | *75.4* | *75.8* | *76.4* | *72.4* | *70.5* | |
| *மொத்த மூலதன உருவாக்கம்* | *2019 மார்ச்சில் தரவு வெளியிடப்பட்டது* | *30.4* | *33.4* | *39.1* | *33.2* | *32.3* | *31.2* | *27.9* | *28.8* | *28.6* |
| | *2018 யூலையில் தரவு வெளியிடப்பட்டது* | *30.4* | *33.4* | *39.1* | *33.2* | *32.3* | *31.2* | *35.0* | *36.7* | |
| *மொத்த நிலையான மூலதன உருவாக்கம்* | *2019 மார்ச்சில் தரவு வெளியிடப்பட்டது* | *23.7* | *26.3* | *29.0* | *29.3* | *27.7* | *25.7* | *26.8* | *26.5* | *25.7* |
| | *2018 யூலையில் தரவு வெளியிடப்பட்டது* | *23.7* | *26.3* | *29.0* | *29.3* | *27.7* | *25.7* | *26.7* | *26.3* | |
| *இருப்புகளிலான மாற்றங்கள* | *2019 மார்ச்சில் தரவு வெளியிடப்பட்டது* | *5.9* | *5.1* | *9.2* | *3.2* | *4.1* | *5.1* | *0.4* | *1.3* | *2.2* |
| | *2018 யூலையில் தரவு வெளியிடப்பட்டது* | *5.9* | *5.1* | *9.2* | *3.2* | *4.1* | *5.1* | *7.6* | *9.3* | |
| பண்டங்கள் மற்றும் பணிக-ளின் வெளியக மீதி | 2019 மார்ச்சில் தரவு வெளியிடப்பட்டது | -7.3 | -13.2 | -11.9 | -8.6 | -8.1 | -7.5 | -7.3 | -7.2 | -7.3 |
| | 2018 யூலையில் தரவு வெளியிடப்பட்டது | -7.3 | -13.2 | -11.9 | -8.6 | -8.1 | -7.5 | -7.3 | -7.2 | |
| சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ/ மொ.உ.செ) | 2019 மார்ச்சில் தரவு வெளியிடப்பட்டது | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| | 2018 யூலையில் தரவு வெளியிடப்பட்டது | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மதிப்பிடப்பட்டது.

அட்டவணை சி.கு.1.1, 2018 யூலையிலும் 2019 மாச்சிலும் அதாவது எட்டு மாத இடைவெளிகளுக்குள் வெளியிடப்பட்ட தேசிய கணக்குகளை ஒப்பிடும் போது செலவின அணுகுமுறையின் அடிப்படையில், தேசிய கணக்குகள் (2010 அடிப்படையாண்டு) மீதான அண்மைய திருத்தங்களின் தாக்கத்தினைக் காட்டுகின்றது. இதன்படி, மொ.உ.உற்பத்தியின் நுகர்வு மற்றும் முதலீடு ஆகிய இரண்டு (மொத்த மூலதன உருவாக்கம்) பங்குகளும் 2016 இற்குப் பின்னரான காலப்பகுதிக்காக கணிசமானளவிற்குத் திருத்தப்பட்டுள்ளன. 2016இற்காக 72.4 சதவீதத்திலும் 2017இற்காக 70.5 சதவீதத்தில் மதிப்பிடப்பட்டிருந்த மொ.உ.உற்பத்தியின் பங்கொன்றாக நுகர்வு 2016இற்காக 79.4 சதவீதத்திற்கும் 2017இற்காக 78.3 சதவீதத்திற்கும் கடுமையாக மேல் நோக்கி திருத்தப்பட்ட வேளையில் இது 2018இற்காக 78.8 சதவீதத்தில் மதிப்பிடப்பட்டது. மறுபுறத்தில் 2016இற்காக 35.0 சதவீதத்திலும் 2017இற்காக 36.7 சதவீதத்திலும் மதிப்பிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீட்டின் பங்கு 2016 இற்காக 27.9 சதவீதத்திற்கும் 2017இற்காக 28.8 சதவீதத்திற்கும் மிகக் கடுமையாக கீழ் நோக்கித் திருத்தப்பட்டது. 2018 இற்காக இது 28.6 சதவீதத்தில் மதிப்பிடப்பட்டது. 2016 - 2018 காலப்பகுதிக்கான மொ.உ.உற்பத்தியில் முதலீட்டின் திருத்தப்பட்ட பங்குகள் பொருளாதாரத்தின் அண்மைய வளர்ச்சிப் பாதையுடன் பெருமளவு இணைந்து செல்வதாகக் காணப்படுகின்ற போதும் மொ.உ.உற்பத்திக்கான முதலீட்டின் பங்கு 2012இன் 39.1 சதவீதத்திலிருந்து 2015இல் 31.2 சதவீதத்திற்கும் 2018இல் மேலும் 28.6 சதவீதத்திற்கும் மிகக் கடுமையாக வீழ்ச்சியடைந்து காரணத்தை விளக்க முடியாததாக இருந்ததுடன் தேசிய கணக்குகளின் துல்லியத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் கேள்விக்குட்படுத்தக் கூடியதாகவும் காணப்பட்டது.

தீர்மானங்களை மேற்கொள்ளும் நேரத்தில் கிடைக்கத் தக்கதாகவுள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொண்ட பின்னர், ஏற்கனவே வெளியிடப்பட்ட தரவுகளுக்கு அதன் பின்னர் பாரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படினும் கூட, பெரும்பாலும் அடிக்கடிக் கொள்கைத் தீர்மானங்களை மாற்றிக் கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக, நாணயக் கொள்கை தீர்மானத்தினை எடுக்கின்ற செயன்முறைக்கான ஒரு முக்கிய உள்ளீடாக விளங்கும் வெளியீட்டு இடைவெளி பொருளாதாரத்தின் உண்மையான வெளியீட்டிற்கும் சாத்தியமான வெளியீட்டிற்குமிடையிலான வேறுபாடாகும். தேசிய கணக்கு மதிப்பீடுகளுக்கு அடிக்கடி செய்யப்படும் பாரிய திருத்தங்கள் சாத்தியமான வெளியீட்டினதும் அதேபோன்று வெளியீட்டு இடைவெளியீட்டினதும் மதிப்பீடுகளை செல்லுபடியற்றதாக்கி விடுவதுடன் நாணயக் கொள்கையினை இறுக்கமாக்குவதற்கு அல்லது தளர்த்துவதற்கு எடுக்கப்படுகின்ற அதேநேர தீர்மானம் பொருளாதாரத்திற்கு தீங்கினை விளைவிக்கவும் கூடும். திருத்தப்பட்ட தேசிய கணக்கு மதிப்பீடுகள் பின்னர் கிடைக்கத்தக்கதாக இருக்கும் பொழுது அதனைத் திருத்திக் கொள்ள முடியாமல் போய்விடும். இறைக் குறிகாட்டிகளைப் பொறுத்தவரை அரசிறை, செலவினம், முக்கிய இறை நிலுவைகள் மற்றும் படுகடன் மட்டங்கள் பொதுவாக மொ.உ.உற்பத்தியின் விகிதமாகவே குறிப்பிடப்படுவதுடன் இறைக் கொள்கைத் தீர்மானங்களும் பின்னர் கிடைக்கக்கூடிய தேசிய கணக்குகளுக்கான திருத்தங்களைக் கருத்திற் கொள்ளாது, நடைமுறையில் கிடைக்கக்கூடியதாகவுள்ள குறிகாட்டிகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. முதலீட்டாளர்களும் கூட மொ.உ.உற்பத்தியின் தரவுகளின் வெளியீடுகளையே நெருக்கமாகக் கவனிக்கின்றனர். ஏனெனில், அவை பொருளாதார நடவடிக்கைகளுக்கான மிக இன்றியமையாத குறிகாட்டிகளாகக் காணப்படுவதே காரணமாகும். அத்துடன் முதலீட்டாளர்கள் அப்பொழுது அதேநேர முதலீட்டுத் தீர்மானங்களை எடுக்கக்கூடியவர்களாக இருப்பதனால் ஆரம்பத் தரவுகள் வெளியிடப்பட்ட பல ஆண்டுகளின் பின்னர் பொருளாதாரம் விதிவிலக்காகச் சிறந்த முறையில் செயலாற்றியிருக்கின்றது அல்லது மாறாக செயலாற்றியிருக்கின்றது என்பதனை உணர்ந்து கொள்வதற்கு இது உதவாது.

ஆகவே, சரியான நேரத்தில் துல்லியமான தரவுகள் கிடைக்காமல் இருப்பதனால் பேரண்டப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் இழப்பு உயர்வானதாக இருப்பதுடன் எதிர்காலத் திருத்தங்களை மிக வெளிப்படையாக மேற்கொள்வதிலும் மீள்தளப்படுத்தல் நடவடிக்கைகளை வடிவமைக்கும் பொழுதும் முன்கூட்டியே நாட்காட்டிகளை வெளியிடும் போதும் பரிசீலனையில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய காரணியாக இது விளங்குகின்றது.

அட்டவணை 1.2

நடைமுறை சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வியும் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியும் (அ)(ஆ)

| விடயம் | ரூ.பில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 |
| 1. உள்நாட்டு கேள்வி | 14,381.1 | 15,511.8 | 11.7 | 7.9 | 107.2 | 107.3 |
| 1.1 நுகர்வு | 10,513.1 | 11,381.4 | 10.3 | 8.3 | 78.3 | 78.8 |
| தனியார் | 9,382.5 | 10,081.2 | 10.2 | 7.4 | 69.9 | 69.8 |
| பொது | 1,130.7 | 1,300.2 | 11.4 | 15.0 | 8.4 | 9.0 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) | 3,867.9 | 4,130.4 | 15.8 | 6.8 | 28.8 | 28.6 |
| 2. தேறிய வெளிநாட்டு கேள்வி | -962.8 | -1,061.9 | -10.1 | -10.3 | -7.2 | -7.3 |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி | 2,909.7 | 3,292.4 | 14.6 | 13.2 | 21.7 | 22.8 |
| பொருட்களினதும் பணிகளினதும இறக்குமதி | 3,872.5 | 4,354.3 | 13.4 | 12.4 | 28.9 | 30.1 |
| 3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ.) (1+2) | 13,418.3 | 14,449.9 | 11.9 | 7.7 | 100.0 | 100.0 |
| 4. உள்நாட்டு சேமிப்புகள் (3-1.1) | 2,905.1 | 3,068.5 | 17.8 | 5.6 | 21.7 | 21.2 |
| தனியார் | 3,001.3 | 3,238.3 | 18.2 | 7.9 | 22.4 | 22.4 |
| பொது | -96.2 | -169.7 | -34.1 | -76.5 | -0.7 | -1.2 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் (ஈ) | -352.9 | -391.9 | -10.4 | -11.1 | -2.6 | -2.7 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 964.3 | 999.5 | 2.6 | 3.6 | 7.2 | 6.9 |
| 7. தேசிய சேமிப்புக்கள் (4+5+6) | 3,516.6 | 3,676.1 | 13.9 | 4.5 | 26.2 | 25.4 |
| 8. சேமிப்பு முமலீடு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டு சேமிப்புக்கள் - முதலீடு (4-1.2) | -962.8 | -1,061.9 | | | -7.2 | -7.3 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7-1.2) | -351.3 | -454.3 | | | -2.6 | -3.1 |
| 9. வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவை (2+5+6) (ஈ) | -351.3 | -454.3 | | | -2.6 | -3.1 |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2010 தள ஆண்டை) அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதீப்பீடுகளின் வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்


*மூலங்கள் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

விரிவாக்கத்தை நோக்கிப் பங்களித்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாரிய உற்பத்தித் துறையாக விளங்கும் பணிகள்துறை, கடந்த ஆண்டின் 3.6 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.7 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. பணிகள் நடவடிக்கைகளுக்குள் நிதியியல் பணிகள் பொருளாதார விரிவாக்கத்திற்கு முக்கிய பங்காளராகவிருந்ததுடன், அதனைத் தொடர்ந்து மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் பங்களிப்புச் செய்தன.

**செலவின அணுகுமுறையின் அடிப்படையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின்படி, நுகர்வு அதேபோன்று முதலீட்டுச் செலவினத்தின் விரிவாக்கம் 2018இல் பெயரளவுப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்தது.** எவ்வாறாயினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 78.8 சதவீத பங்களிப்பைச் செய்யும் நுகர்வுச் செலவினம், 2017இன் 10.3 சதவீதத்திலிருந்து 2018இல் 8.3 சதவீதமானதொரு விரிவாக்கத்தைப் பதிவுசெய்தது. நுகர்வுச் செலவினத்தின் இம்மெதுவடைவு தனியார் நுகர்வுச் செலவினத்தின் மிதமான வளர்ச்சி காரணமாக ஏற்பட்ட அதேவேளை அரச நுகர்வுச் செலவானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்ததொரு வீதத்தில் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, 2017இல் 15.8 சதவீத விரிவாக்கத்தைப் பதிவுசெய்த முதலீட்டுச் செலவினம், இவ்வாண்டுப் பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகளின் மிதமான பெயரளவு வளர்ச்சியின் மத்தியில் 6.8 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. இவ்வபிவிருத்திகளுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஓர் சதவீதமாக முதலீடு கடந்த ஆண்டின் 28.8 சதவீதத்திலிருந்து 28.6 சதவீதமாக சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, 2018இல் உள்நாட்டுக் கேள்வி 7.9 சதவீதமாக வளர்ச்சியடைந்ததுடன் தேறிய வெளிநாட்டுக் கேள்வி 10.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு சேமிப்புக்கள் கடந்த ஆண்டின் 21.7 சதவீதத்திலிருந்து 21.2 சதவீதமாக சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2017இன் 26.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 25.4 சதவீதத்திற்குக்

வரைபடம் 1.2

சேமிப்புகள், முதலீடு மற்றும் சேமிப்பு-முதலீடு இடைவெளி
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

1

குறைவடைந்தது. இது உள்நாட்டு சேமிப்புக்களின் சிறிதளவான குறைவு மற்றும் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்களின் மிதமான விரிவாக்கத்திற்கு மத்தியில் தேறிய முதன்மை வருமானத்தின் தொடர்ச்சியான வீழ்ச்சியின் விளைவாக ஏற்பட்டது. அதற்கிணங்க, 2018 காலப்பகுதியில் உள்நாட்டுச் சேமிப்பு - முதலீட்டு இடைவெளி மற்றும் தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி என்பன முறையே 7.3 சதவீதம் மற்றும் 3.1 சதவீதத்தினால் சிறிதளவு விரிவடைந்தன.

**சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக 2018இல் வேளாண்மை நடவடிக்கைகள் மீட்சியடைந்ததுடன், கடந்த ஆண்டில் அவதானிக்கப்பட்ட 0.4 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 4.8 சதவீத ஓர் வளர்ச்சியைப் பதிவுசெய்தன.** நெல், தெங்கு, பழங்கள், கால்நடை வளர்ப்பு, காய்கறிகள் மற்றும் ஏனைய களப்பயிர்கள் உட்பட பல வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி 2018 காலப்பகுதியில் அதிகரித்த வேளையில் தேயிலை, இறப்பர், மீன்பிடி மற்றும் சீனி உற்பத்தி என்பன குறைவைப் பதிவுசெய்தன. 2017இல் மோசமான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்பட்ட நெல் உற்பத்தி 2018 காலப்பகுதியில் 64.9 சதவீத அதிகரிப்புடன் மீட்சியடைந்து 3.9 மில்லியன் மெட்ரிக் தொன்கள் உற்பத்தியை விளைவாக்கியது. இரண்டு பருவகாலங்களிலும் நெல் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மேம்பாடானது நெற்பயிர்ச் செய்கைக்கு உகந்த வானிலை நிலைமைகள் மற்றும் போதுமான நீர்க் கிடைப்பனவு என்பவற்றால் ஆதரவளிக்கப்பட்டது. உள்நாட்டு நெல் இருப்பின் கிடைப்பனவை பதிலிறுத்தும் வகையில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரிசி இறக்குமதிகள் 2018இல் 66.7 சதவீதமான கணிசமான வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. உள்நாட்டு அரிசி நிரம்பலானது கணிசமாக மேம்பட்டாலும் 2018 காலப்பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரிசி வகைகளின் சராசரி விலையானது உயர்ந்த மட்டத்திலேயே காணப்பட்டது. குறிப்பாக 2018இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் தேயிலை பயிரிடப்படும் பிரதேசங்களில் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகள் மற்றும் பெருந்தோட்டத் துறையில் மேற்கொள்ளப்பட்ட கூலி தொடர்பான தொழிற்சங்க நடவடிக்கைகள் என்பன தேயிலையின் குறைந்த சராசரி விலைகளுக்கு மத்தியில் தேயிலை உற்பத்தியைப் பாதித்திருந்தன. இறப்பர் பெருந்தோட்டப் பிரதேங்களில் பாலெடுக்கும் நாட்களில் காணப்பட்ட தொடர்ச்சியான மழைவீழ்ச்சி மற்றும் உயர் உற்பத்திச் செலவு காரணமாக இவ்வாண்டில் இறப்பர் உற்பத்தியும் குறைவடைந்தது. அதேவேளை, 2018 காலப்பகுதியில் போதுமான மழையின் ஆதரவுடன், தெங்கு உற்பத்தி ஓர் விரிவாக்கத்தைப் பதிவுசெய்தது. நாட்டின் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் ஏற்பட்ட படைப்புழுத் தாக்கமானது சோளம் மற்றும் குரக்கன் உற்பத்தியைக் கடுமையாக சேதப்படுத்தியிருப்பினும் ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியானது அதிகரித்திருந்தது. அதேவேளை, 2018இல் காய்கறிகள், பழங்கள் மற்றும் பால் உற்பத்தி என்பன ஓர் விரிவாக்கத்தை பதிவுசெய்திருந்த வேளையில் சீனி உற்பத்தி தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக சுருக்கமடைந்திருந்தது. 2018 காலப்பகுதியில் முட்டை உற்பத்தி சுருக்கமடைந்த வேளையில் இறைச்சி உற்பத்தி ஓர் மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மீன்பிடித்துறை 2017இல் பதிவுசெய்த சிறிதளவு விரிவாக்கத்தைத் தொடர்ந்து 2018இல் சிறிதளவு பின்னடைவை எடுத்துக்காட்டியது.

**2018 காலப்பகுதியில் கைத்தொழில் தொடர்பான நடவடிக்கைகள் குறிப்பாக கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளின் குறைதலுடன் ஒரு மெதுவடைவை அனுபவித்திருந்தன.** மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8 சதவீதம் பங்களிக்கும் கட்டடவாக்க நடவடிக்கைகள், கடந்த ஆண்டில் பதிவுசெய்த 4.3 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018 காலப்பகுதியில் 2.1 சதவீதம் சுருக்கமடைந்தது. கட்டடவாக்க நடவடிக்கைகளின் குறைவுடன் இணைந்து சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளும் இவ்வாண்டுப் பகுதியில் சுருக்கமடைந்தன. அதேவேளை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 15.5 சதவீத பங்குவகிக்கும் உற்பத்தி நடவடிக்கைகள், உணவு உற்பத்திகள், குடிபானங்கள், அணியும் ஆடைகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் புடவை போன்ற துறைகளின் அதிகரித்த உற்பத்தியால் ஆதரவளிக்கப்பட்டு, 2018இல் 3.0 சதவீதமான ஓர் மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், ஆய்வுக்குறிய காலப்பகுதியில் கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள், இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் தளபாட உற்பத்திகள் உள்ளடங்கலான துணைத் துறைகளின் உற்பத்திகள் எதிர்மறை வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. அதேவேளை, 2018 ஆண்டு காலப்பகுதியில் மின்வலு, நீர், கழிவுச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் 4.7 சதவீத ஓர் விரிவாக்கத்துடன் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. தனியார்துறை பங்களிப்பை அதிகரித்ததன் ஊடாக உள்நாட்டு மற்றும் உலக சந்தைகள் இரண்டினையும் பூர்த்தி செய்யும் வகையில் நாட்டின் கைத்தொழில் உற்பத்திக் கொள்ளளவு அதிகரிப்பில் கவனம் செலுத்தும், கைத்தொழில் துறையை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டு அரசாங்கம் பல கொள்கை வழிமுறைகளை எடுத்தது.

**பணிகள் தொடர்பான நடவடிக்கைகள் கடந்த ஆண்டில் பதிவாகிய 3.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.7 சதவீதம் விரிவடைந்தன. 2018 காலப்பகுதியில் பணிகள் துறையின் வளர்ச்சி குறிப்பாக நிதியியல் பணிகளின் நடவடிக்கையின் விரிவாக்கம் (11.8 சதவீதம்) மூலம் ஆதரவளிக்கப்பட்டது.** அதேவேளையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.8 சதவீத பங்களிப்பைக் கொண்ட மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் 5.0 சதவீதத்தால்

அட்டவணை 1.3

நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய வருமானம் (அ)(ஆ)

| பொருளாதார நடவடிக்கை | ரூ.மில்லியன் | | மொ.உ.உ இன் பங்கு (%) | | வளர்ச்சி (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி** | **642,366** | **672,923** | **6.9** | **7.0** | **-0.4** | **4.8** | **-0.7** | **10.2** |
| வேளாண்மை மற்றும் காடாக்கல் | 524,121 | 555,679 | 5.6 | 5.8 | -0.3 | 6.0 | -0.5 | 10.5 |
| மீன்பிடித்தொழில் | 118,245 | 117,244 | 1.3 | 1.2 | -0.5 | -0.8 | -0.2 | -0.3 |
| **கைத்தொழில்** | **2,495,721** | **2,518,964** | **26.7** | **26.1** | **4.1** | **0.9** | **32.0** | **7.8** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 237,381 | 225,321 | 2.5 | 2.3 | 9.1 | -5.1 | 6.4 | -4.0 |
| தயாரிப்பு | 1,448,383 | 1,491,654 | 15.5 | 15.5 | 3.3 | 3.0 | 14.9 | 14.4 |
| மின்வலு,எரிவாயு,நீர் மற்றும் கழிவு கையாளல் | 135,932 | 142,303 | 1.5 | 1.5 | 3.9 | 4.7 | 1.6 | 2.1 |
| கட்டடவாக்கம் | 674,025 | 659,687 | 7.2 | 6.8 | 4.3 | -2.1 | 9.1 | -4.8 |
| **பணிகள்** | **5,311,107** | **5,560,849** | **56.8** | **57.7** | **3.6** | **4.7** | **59.4** | **83.3** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், மற்றும் குடியிருப்பு மற்றும் உணவுப்பணிகள் நடவடிக்கைகள் | 2,158,118 | 2,244,056 | 23.1 | 23.3 | 3.6 | 4.0 | 24.1 | 28.7 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 57,870 | 63,021 | 0.6 | 0.7 | 9.5 | 8.9 | 1.6 | 1.7 |
| வதிவிட உரிமை உள்ளடங்கலாக நிதியில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகள் | 1,245,274 | 1,346,781 | 13.3 | 14.0 | 6.7 | 8.2 | 25.4 | 33.8 |
| தொழிற்தகமை பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கைகள் | 1,072,328 | 1,122,590 | 11.5 | 11.6 | 3.3 | 4.7 | 11.2 | 16.8 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 777,518 | 784,401 | 8.3 | 8.1 | -1.2 | 0.9 | -3.0 | 2.3 |
| **அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டல்** | **8,449,194** | **8,752,736** | **90.4** | **90.8** | **3.4** | **3.6** | **90.6** | **101.2** |
| மானியங்கள் நீங்கலாக உற்பத்தி மீதான வரி | 895,645 | 891,993 | 9.6 | 9.2 | 3.3 | -0.4 | 9.4 | -1.2 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **9,344,839** | **9,644,728** | **100.0** | **100.0** | **3.4** | **3.2** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -249,616 | -266,091 | | | -3.6 | -6.6 | | |
| **சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்** | **9,095,223** | **9,378,637** | | | **3.4** | **3.1** | | |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2010 தள ஆண்டை அடிப்படையாகக்) கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) திருத்தப்பட்டது


*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளவிபரத் திணைக்களம்

வளர்ச்சியடைந்த வேளையில் ஒத்த பங்கை கொண்டிருக்கும் போக்குவரத்து நடவடிக்கைகள் 2.8 சதவீத ஓர் விரிவாக்கத்தை பதிவுசெய்தன. மேலும், ஏனைய தனியாள் பணிகள் மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகள் முறையே 4.8 சதவீதம் மற்றும் 3.8 சதவீதம் வளர்ச்சியடைந்தது. அரச நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எடுத்துக்காட்டப்பட்ட 0.6 சதவீதமான சிறிதளவு சுருக்கம் 2018இல் பணி நடவடிக்கைகளின் வளர்ச்சியை குறிப்பிட்ட அளவிற்கு தளர்வுறச் செய்தது.

**தொழிலின்மை வீதம் 2017 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.4 சதவீதமாக சிறிதளவில் அதிகரித்தது.** ஆண் மற்றும் பெண் இருபிரிவினதும் தொழிலின்மை வீதங்கள் கடந்த ஆண்டின் முறையே 2.9 சதவீதம் மற்றும் 6.5 சதவீதத்திலிருந்து இவ்வாண்டுப் பகுதியில் முறையே 3.0 சதவீதம் மற்றும் 7.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, இவ்வாண்டுப் பகுதியில் 20-24 ஆண்டுகள் மற்றும் 25-29 ஆண்டுகள் வயதுடைய இளைஞர்கள் மத்தியில் தொழிலின்மை முறையே 20.1 சதவீதம் மற்றும் 10.4 சதவீதமாக உயர்ந்து காணப்பட்டது. உயர் கல்வி அடைவுடைய, அதாவது கல்விப் பொதுத்தராதர உயர்தரம் மற்றும் அதற்குமேல், பெண்களிடையே தொழிலின்மை 2017 காலப்பகுதியில் பதிவாகிய 11.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 13.2 சதவீத குறிப்பிடத்தக்க உயர்வைக் கொண்டிருந்தது. தொழிற்படை பங்கேற்பு வீதம் கடந்த ஆண்டுப் பகுதியின் 54.1 சதவீதத்திலிருந்து 2018இல் 51.8 சதவீதத்திற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. 2018இல் ஆண் மற்றும் பெண் இருபாலாருக்குமிடையிலான தொழிற்படை பங்கேற்பு வீதம் முறையே 73.0 சதவீதம் மற்றும் 33.6 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. 2018இல் தொழிலின்மை வீதத்தின் சிறிதளவு அதிகரிப்பிற்கு மத்தியில் தொழிற்படை பங்கேற்பு வீதத்தின் குறைவுடன் தொழிலிலுள்ளோர் குடித்தொகை 8.015 மில்லியனிற்கு 2.4 சதவீதமாக குறைவடைந்தது. அதேவேளை, இவ்வாண்டுப் பகுதியில் தொழிலிலுள்ளோர் குடித்தொகையில் வேளாண்மைத் துறை 25.5 சதவீதத்திற்குப் பங்களித்த வேளையில் கைத்தொழில் மற்றும் பணிகள்துறை முறையே 27.9 சதவீதம் மற்றும் 46.6 சதவீதம் பங்குகளைக் கொண்டிருந்தன.

வரைபடம் 1.3

தொழிலின்மை வீதம்





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

1

2018இல், வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான புறப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை பெண்களின் புறப்பாடுகள் அதிகரித்த வேளையிலும் ஆண்களின் புறப்பாடுகளின் ஓர் வீழ்ச்சியுடன் தொடர்ந்து குறைவடைந்தது.

**பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகள் மற்றும் ஏனைய நிர்வாக ரீதியாக முக்கிய நாணயங்களிற்கு எதிராக ரூபாவின் கடுமையான பெறுமானத் தேய்வு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் என்பவற்றிற்கான மேல் நோக்கிய திருத்தங்கள் காரணமாக ஏற்பட்ட தற்காலிக விலை அழுத்தங்கள் காணப்பட்ட போதும் மேம்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை கட்டமைப்பின் கீழான சிறந்த உறுதிநிலையான பணவீக்க எதிர்பார்ப்புக்களின் விளைவாக முதன்மைப் பணவீக்கம் மற்றும் மையப் பணவீக்கம் 2018இல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (கொ.நு.வி.சு. 2013=100) ஆண்டுக்காண்டு மாற்றத்தினால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கமானது, 2018இல் ஓர் கீழ்நோக்கிய பாதையில் பரந்திருந்தது. 2018இன் நடுப்பகுதியில் முதன்மைப் பணவீக்கத்தின் குறுகிய கால உயர்விற்கு உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளின் மேல்நோக்கிய சீராக்கங்கள் மற்றும் உணவு விலைகளின் தளம்பல்கள் மூலம் எழும் செலவுத் தூண்டல் காரணிகள் முக்கிய காரணமாகக் காணப்படுகின்றன. குறைந்தளவு உணவு விலைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட விலைகளின் கீழ்நோக்கிய சீராக்கங்கள் அதேபோன்று சிறப்புப் பண்டத் தீர்வை மற்றும் தொலைத்தொடர்புத் தீர்வை என்பவற்றின் குறைவு காரணமாக ஆண்டின் இறுதிப் பகுதியில் பணவீக்கமானது கணிசமாக மெதுவடைந்ததுடன் விரும்பப்பட்ட நடு ஒற்றை இலக்கத்தை விட குறைவான மட்டங்களை அடைந்தது. அதற்கிணங்க, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கமானது 2017இன் இறுதியின் 7.1 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதத்திற்கு 2018 இறுதியளவில் குறைவடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (தே.நு.வி.சு. 2013=100) ஆண்டுக்காண்டு மாற்றத்தினால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கமானது, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஒத்த போக்கைத் தொடர்ந்ததுடன் 2018 யூலையில் உச்ச மட்டத்தை அடைந்து அதன்பின்னர் தொடர்ந்து தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டத்திலே காணப்பட்டது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் ஆண்டுக்காண்டு மாற்றத்தினால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கமானது, 2017 இறுதியில் காணப்பட்ட 7.3 சதவீதத்திலிருந்து 2018 திசெம்பரில் 0.4 சதவீதத்திற்கு கடுமையாக குறைவடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டையும் அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கமானது, வீட்டு வாடகைகள் மற்றும் கல்வி போன்ற குறிப்பிட்ட

வரைபடம் 1.4
முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)





*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

பொருட்களின் மீதான அதிகரித்த செலவினத்தால் உந்தப்பட்ட உணவல்லாப் பண்டங்களின் உயர் பணவீக்கத்தின் விளைவாக 2019இன் முதலாம் காலாண்டில் சிறிதளவு உயர்வினைக் காட்டியது. அதற்கிணங்க கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்படும் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான முதன்மைப் பணவீக்கமானது 2019 மார்ச்சில் 4.3 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2019 பெப்புருவரியில் 2.4 சதவீதமாக உயர்வடைந்தது. 2018 முழுவதும் மையப் பணவீக்கம் குறைந்த ஒற்றை இலக்க மட்டங்களிலே காணப்பட்டது. கடந்த காலத்தில் பேணப்பட்ட ஒப்பீட்டளவில் இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினால் ஏற்பட்ட பின்தங்கிய விளைவை இது எடுத்துக்காட்டுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கமானது, 2017இன் இறுதியின் 4.3 சதவீதத்திலிருந்து 2018 இறுதியளவில் 3.1 சதவீதத்திற்கு மெதுவடைந்தமை குறைக்கப்பட்ட கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலிக்கின்றது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கமானது 2017இன் இறுதியில் காணப்பட்ட 2.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இன் இறுதிப்பகுதியளவில் 3.1 சதவீதமாக (ஆண்டுக்கு ஆண்டு) சிறிதளவில் விரைவடைந்தது. வீட்டலகு மற்றும் கல்வித் துறைகளில் 2019 சனவரியில் ஏற்பட்ட விலைச் சீராக்கங்கள் அடிப்படைப் பணவீக்க அதிகரிப்பிற்குப் பங்களித்ததன் விளைவாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கமானது 2019 மார்ச்சில் 5.6 சதவீதமாக விரிவடைந்ததுடன் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கமானது 2019 பெப்புருவரியில் 5.5 சதவீதமாக விரிவடைந்தது.

## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**குறிப்பாக உயர்ந்தளவான இறக்குமதி செலவினம் மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல்கள் என்பவற்றின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணிகளின் அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களுடன் இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது 2018 காலப்பகுதியில் பின்னடைவொன்றை அனுபவித்தது. வாகனங்கள் மற்றும் எரிபொருள் (அதேபோன்று 2018இன் ஆரம்பப்பகுதியில் தங்கம்) என்பவற்றின் கணிசமான அதிகரிப்பினால் தூண்டப்பட்ட இறக்குமதி செலவினத்தின் வளர்ச்சியானது ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சியை விஞ்சியமையினால் 2018 காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையானது விரிவாக்கமடைந்தது.** அரசாங்கத்தினால் வெளிநாட்டுக் கடன்கள் மீது செலுத்தப்பட்ட வட்டிக்கொடுப்பனவுகள் மற்றும் நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளால் மேற்கொள்ளபட்ட பங்கிலாபக் கொடுப்பனவுகள் என்பவற்றின் அதிகரிப்பினால் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை விரிவாக்கம் அடைந்தது. சுற்றுலாத்துறை, போக்குவரத்து மற்றும் கணனிச் சேவைகள் துறை என்பவற்றில் இருந்தான வருவாய்களின் முக்கிய தூண்டுதல்களினால் வர்த்தகப் பணிகள் கணிசமான மிகையினை ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வளர்ச்சியடைந்து காணப்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்கள் மத்திய கிழக்கு பிராந்தியங்களில் தற்போது இடம்பெற்றுவருகின்ற பூகோள அரசியலின் நிச்சயமற்ற தன்மை, எரிபொருள் விலைகளின் தளம்பல்கள் மற்றும் ஒட்டுமொத்த ஊழிய வெளிச்செல்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின் தாக்கத்தினால் 2018இன் இறுதிப்பகுதியில் மெதுவடைந்திருந்தது. இதன்விளைவாக, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2017இன் 2.6 சதவீதத்திலிருந்து 2018இல் 3.2 சதவீதத்திற்கு விரிவாக்கமடைந்தது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளியீடு, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது கட்டத்தின் பெறுகை, வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி என்பவற்றிலிருந்தான பெறுகைகள் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நீண்டகால குத்தகையிலிருந்தான பெறுகையை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் என்பவற்றின் காரணமாக நிதியியல் கணக்கானது குறிப்பிடத்தக்களவான உட்பாய்ச்சலை பதிவுசெய்திருந்தது. எனினும், அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை சந்தை என்பவற்றின் மீதான வெளிநாட்டு முதலீடுகள் 2018இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியிலிருந்து தேறிய வெளிப்பாய்ச்சலை பதிவுசெய்ததுடன் வெளிநாட்டுத் துறையின் மீது அழுத்தத்தை வழங்கியிருந்தது. மேலும், வங்கித்தொழில் துறையும் கணிசமானளவான பன்னாட்டு முறி முதிர்வுகளை ஆண்டுகாலப்பகுதியில் பதிவுசெய்திருந்தது. ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியில் வரலாற்றில் உயர்ந்த மட்டத்தினை அடைந்திருந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரித்த வர்த்தகப் பற்றாக்குறை, உயர்ந்தளவான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் செலாவணி வீதத்தில் ஏற்படும் நியாயமற்ற தளம்பல்களை கட்டுப்படுத்துவதற்காக உள்நாட்டு செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிகளின் விற்பனை என்பவற்றின் அதிகரிப்புடன் 2018இன் இறுதிப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவாக, சென்மதி நிலுவையின் ஒட்டுமொத்த மீதியானது 2018இன் இறுதியில் ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் பற்றாக்குறையைப் பதிவுசெய்தது. பரந்த அடிப்படையில் ஐ.அ.டொலர் வலுப்பெற்றமை, 2018இன் இறுதிகாலப்பகுதியில் ஏற்பட்டிருந்த அரசியல் நிச்சயமற்ற தன்மை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகள் என்பன இலங்கை ரூபாவின் மீது அழுத்தத்தை வழங்கியிருந்தன. செலாவணி வீதத்தின் கணிசமான தளம்பல்கள் மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம் என்பவற்றைக் கருத்திற்கொண்ட மத்திய வங்கி செலாவணி வீதத்தினை தீர்மானிப்பதில் அதிகரித்த நெகிழ்வுத்தன்மையை அனுமதித்ததுடன் உள்நாட்டு செலாவணிச் சந்தையின் மீது தலையீடு செய்வது தொடர்பில் எச்சரிக்கையுடன் கூடிய அணுகுமுறையுடன் சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீத கொள்கையை பின்பற்றியது. இதன் விளைவாக, தேறிய அடிப்படையில் மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு ஐ.அ.டொலர் 1,120 மில்லியனை நிரம்பல் செய்திருந்த அதேவேளை, இலங்கை ரூபாவானது ஐ.அ.டொலருக்கெதிராக 16.4 சதவீதம் தேய்வடைந்திருந்தது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீட்டின் ஊடாக உள்நாட்டு நாணயத்தின் மீதான பெறுமதித்தேய்வு அழுத்தமானது பகுதியளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டிருந்த அதேவேளை மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் என்பவற்றால் தங்கம், உந்து ஊர்திகள் மற்றும் குறிப்பிட்ட சில அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் அதிகரித்த கேள்வியின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணிகளின் வெளிப்பாய்ச்சல்களை கட்டுப்படுத்துவதற்கு மேலதிகக் கொள்கை வழிமுறைகள் எடுக்கப்பட்டன. அதேவேளை, உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச்

வரைபடம் 1.5
சென்மதி நிலுவை



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

சுட்டெண்ணானது 2018 செத்தெம்பர் மாதத்திலிருந்து அடியாண்டு மட்டத்திற்குக் கீழாக காணப்பட்டதுடன் அது இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.

**2018இல் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை விரிவாக்கமடைந்தது.** தங்கம், எரிபொருள் மற்றும் தனியாள் உந்து ஊர்திகள் என்பவற்றின் மீதான உயர்ந்தளவான இறக்குமதிச் செலவினம் மற்றும் மிதமான ஏற்றுமதி செயலாற்றம் என்பவற்றின் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையானது கணிசமாக விரிவாக்கமடைந்தது. எனினும், இறக்குமதிச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் என்பவற்றால் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகள் அதேபோன்று வர்த்தக நிலுவையின் முன்னேற்றத்திற்கு இட்டுச்செல்லக்கூடிய இலங்கை ரூபாவின் கணிசமான தேய்வு என்பவற்றின் விளைவாக ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையானது மெதுவடைந்திருந்தது. ஒட்டுமொத்த வர்த்தகப் பற்றாக்குறையானது 2017இன் ஐ.அ.டொலர் 9,619 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 10,343 மில்லியனுக்கு விரிவடைந்திருந்தது. வர்த்தகப் பற்றாக்குறை 2018இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2017இன் 10.9 சதவீதத்திலிருந்து 11.6 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

**2017இல் வலுவாக மீட்சிபெற்ற பண்டங்களின் ஏற்றுமதிகளின் மீதான வருவாய்கள் 2018இலும் தொடர்ச்சியான வளர்ச்சியடைந்தது.** அதற்கிணங்க, ஆண்டுக்காண்டு அடிப்படையில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017இன் ஐ.அ.டொலர் 11,360 மில்லியனிலிருந்து 2018இல் ஐ.அ.டொலர் 11,890 மில்லியனுக்கு 4.7 சதவீதம் வளர்ச்சியடைந்திருந்தது. ஐரோப்பிய ஒன்றிய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் முறைமை+ (ஜிஎஸ்பி+) வசதி, வலுவான நிறுவன ரீதியான ஆதரவுடனான உகந்த வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் மற்றும் மத்திய வங்கியினால் பேணப்பட்ட நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கொள்கை என்பன ஏற்றுமதி வருவாய்களின் செயலாற்றத்திற்கு ஆதரவளித்திருந்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018இல் ஏற்றுமதி வருவாய்களின் விரிவாக்கத்திற்குப் பங்களித்திருந்த அதேவேளை, வேளாண்மை மற்றும் கனிய ஏற்றுமதிகளின் மீதான வருவாய்கள் வீழ்ச்சியடைந்திருந்தன. 2018இல் மொத்த ஏற்றுமதியில் 78 சதவீதத்திற்கு வகைகூறிய கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆண்டுக்காண்டில் ஐ.அ.டொலர் 9,258 மில்லியனுக்கு 8.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. முக்கியமாக புடவை மற்றும் ஆடைகள் (5.7 சதவீதம்), பெற்றோலிய உற்பத்திகள் (43.2 சதவீதம்), உணவு, குடிபானம் மற்றும் புகையிலை (17.7 சதவீதம்), பொறிகள் மற்றும் இயந்திரவியல் உபகரணங்கள் (17.3 சதவீதம்) மற்றும் இறப்பர் உற்பத்திகள் (4.8 சதவீதம்) என்பவற்றிலிருந்தான அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் கைத்தொழில் ஏற்றுமதிகளின் முன்னேற்றமடைந்த செயலாற்றத்திற்கு பங்களித்திருந்தன. எனினும், போக்குவரத்துச் சாதனம் (-25.9 சதவீதம்), தோல், பயணப் பொருட்கள் மற்றும் பாதணிகள் (-6.8 சதவீதம்) மற்றும் அச்சுக் கைத்தொழில் உற்பத்திகள் (-35.2 சதவீதம்) என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து ஆண்டு காலப்பகுதியில் சுருக்கடைந்திருந்தது. மொத்த ஏற்றுமதிகளில் அண்ணளவாக 22 சதவீதத்திற்கு வகைகூறிய வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறிப்பாக தேயிலை (-6.6 சதவீதம்) வாசனைத் திரவியம் (-11.3 சதவீதம்) மற்றும் தெங்கு (-10.6 சதவீதம்) போன்ற பெரும்பாலான உபவகைகளின் மோசமான செயலாற்றம் காரணமாக ஆண்டுக்காண்டில் ஐ.அ.டொலர் 2,579 மில்லியனுக்கு 6.8 சதவீதத்தால் 2018இல் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், கடல் உணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான உயர்ந்தளவான ஏற்றுமதிகளுடன் 10.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேவேளை, சாம்பல் கட்டிகள் மற்றும் கற்கள் அதேபோன்று பெறுமதிமிக்க உலோகங்கள் என்பவற்றிலிருந்தான குறைவடைந்த வருவாய்களின் காரணமாக ஆண்டுக்காண்டில் கனிய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 0.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இலங்கைக்கான ஏற்றுமதி சேருமிடங்களில் ஐக்கிய அமெரிக்கா 25.9 சதவீதம் கொண்ட முக்கிய ஏற்றுமதி சேருமிடமாகக் காணப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (8.2 சதவீதம்), இந்தியா (6.5 சதவீதம்), யேர்மனி (5.2 சதவீதம்) மற்றும் இத்தாலி (4.8 சதவீதம்) என்பன காணப்பட்டன. அதேவேளை, ஏற்றுமதித் தொகைச் சுட்டெண் 2018இல் 0.5 சதவீதத்தால் சிறிதளவில் அதிகரித்திருந்த அதேவேளை, ஏற்றுமதி அலகு பெறுமதிச் சுட்டெண் திரண்ட அடிப்படையில் 4.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இது ஏற்றுமதியின் வளர்ச்சியானது, 2018இல் மிகப் பிரதானமாக தொகையினைக் காட்டிலும் உயர்ந்தளவான விலையின் காரணமாகவே தூண்டப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டுகின்றது.

**2018இன் முதலரைப் பகுதியில் கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்த இறக்குமதிச் செலவினமானது அதன்பின்னர் மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் என்பவற்றால் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகள் அதேபோன்று இலங்கை ரூபாவின் கடுமையான தேய்வு என்பவற்றின் காரணமாக படிப்படியாக மெதுவடைந்திருந்தது.** அதற்கிணங்க, 2018இன் முதல் ஒன்பது மாதங்களில் 10.4 சதவீத ஆண்டுக்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்த இறக்குமதி செலவினமானது ஆண்டின் 4ஆவது காலாண்டில் 5.9 சதவீதம் என்ற சுருக்கத்தன்மையைப் பதிவுசெய்திருந்தது. ஒட்டுமொத்தமாக, இறக்குமதி மீதான செலவினம் ஆண்டுக்காண்டில் 2017இன் ஐ.அ.டொலர் 20,980 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2018இல் ஐ.அ.டொலர் 22,233 மில்லியனுக்கு 6.0 சதவீத ஆண்டுக்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. இவ்வதிகரிப்பிற்குள், ஆண்டுகாலப்பகுதியில் எரிபொருள் அல்லாத இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 18,081 மில்லினுக்கு 3.0

சதவீதத்தில் அதிகரித்திருந்தது. மொத்த இறக்குமதிகளில் அரைவாசிக்கும் மேலாக வகைகூறிய இடைநிலைப் பண்டங்களின் இறக்குமதி முக்கியமாக எரிபொருள் (21.1 சதவீதம்), புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (4.9 சதவீதம்) மற்றும் வளமாக்கி (154.4 சதவீதம்) என்பவற்றின் மீதான அதிகரித்த செலவினத்துடன் ஐ.அ.டொலர் 12,488 மில்லியனுக்கு 9.2 சதவீதத்தால் அதிகரித்தது. ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினமும் உயர்ந்தளவான இறக்குமதி வளர்ச்சியின் மீது கணிசமாகப் பங்களித்திருந்தன. தங்கத்தின் இறக்குமதி தொடர்பில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையேயான தீர்வை வேறுபாடுகளின் காரணமாக ஏற்படக்கூடிய சாத்தியமான சட்டத்திற்கு மாறான வணிகத்தினைக் கருத்திற்கொண்டு 2018 ஏப்பிறலிலிருந்து தங்கம் இறக்குமதி மீது 15 சதவீத சுங்கத்தீர்வையை அரசாங்கம் மீண்டும் அமுற்படுத்தியது. அதன் விளைவாக, தங்கம் இறக்குமதி மீதான இறக்குமதி செலவினம் 2018 மே மாதத்திலிருந்து கணிசமாக வீழ்ச்சியடைந்ததுடன் ஆண்டின் எஞ்சிய எட்டு மாதங்களில் அண்ணளவாக ஐ.அ.டொலர் 1 மில்லியன் என்ற சிறிதளவான பெறுமதியைப் பதிவுசெய்திருந்தது. மேலும், இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் (-6.6 சதவீதம்) மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் (-14.0 சதவீதம்) என்பவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் 2018இல் வீழ்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, குறைவடைந்த அரிசி இறக்குமதியின் முக்கியமான துண்டுதலால் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் கணிசமானதொரு வீழ்ச்சியைப் பதிவுசெய்த போதிலும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான உயர்ந்தளவான செலவினத்தின் முக்கிய காரணமாக நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி 10.6 சதவீதத்தால் ஐ.அ.டொலர் 4,980 மில்லியனுக்கு அதிகரித்திருந்தது. மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான செலவினமானது உணவல்லா நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி தொடர்பில் பிரதானமாக பங்களிப்பு வழங்கியிருந்ததுடன் இது 103.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2018இன் வரவுசெலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வாகனங்கள் தொடர்பான வரிக் கட்டமைப்பு திருத்தத்தின் விளைவாக குறைந்த இயந்திர இயலளவைக் கொண்ட வாகனங்கள், கலப்பு மற்றும் இலத்திரனியல் வாகனங்கள் என்பவற்றின் அதிகரித்த இறக்குமதி காரணமாக ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான செலவினம் கணிசமாக அதிகரித்திருந்தது. வெளிநாட்டுத் துறையின் மீதான அழுத்தம் முக்கியமாக அதிகரித்த வாகனங்கள் இறக்குமதிகளிலிருந்து செலாவணி வீதம் மீதான அழுத்தம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு அத்தகைய இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 2018 ஓகத்திலிருந்து பல்வேறுபட்ட கொள்கை வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. அதன் விளைவாக, 2018இல் நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வாகனங்களின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், வாசனைத் திரவியம், கையடக்க தொலைபேசிகள் போன்ற அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியினை ஊக்கமிழக்கச் செய்வதற்கு மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளின் காரணமாக இவற்றுள் அநேகமான வகைகளின் மீதான இறக்குமதிச் செலவினம் 2018இல் வீழ்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, முதலீட்டுப் பொருட்களின் மீதான செலவினமும் 2018இல் வீழ்ச்சியடைந்திருந்தது. இந்தியா இறக்குமதிக்கான பாரிய மூலமாக விளங்கியதுடன் மொத்த இறக்குமதியில் 19.0 சதவிதப் பங்கினை வகித்திருந்தது. இதனை சீனா (18.5 சதவீதம்), ஐக்கிய அரபு இராச்சியம் (8.3 சதவீதம்), யப்பான் (7.1 சதவீதம்) மற்றும் சிங்கப்பூர் (6.2 சதவீதம்) போன்ற நாடுகள் பின்தொடர்ந்தன. அதேவேளை, 2018இல் இறக்குமதிச் சுட்டெண் மற்றும் இறக்குமதித் தொகைச் சுட்டெண் மற்றும் இறக்குமதி அலகு பெறுமதிச் சுட்டெண் என்பன முறையே 1.8 சதவீதம் மற்றும் 4.1 சதவீத்தில் அதிகரித்திருந்ததுடன் இவை ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிகளின் வளர்ச்சி முக்கியமாக தொகைத் தாக்கத்தினைக் காட்டிலும் விலைத் தாக்கத்தின் காரணமாக ஏற்பட்டதனை வெளிக்காட்டி நின்றன.

**2018 காலப்பகுதியில் பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக்கணக்கு என்பவற்றிற்கான ஆரோக்கியமான உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் அதிகரித்த வர்த்தக மற்றும் முதலாந்தர வருமானக்கணக்குப் பற்றாக்குறையினால் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையானது கணிசமாக விரிவாக்கமடைந்தது.** 2018 காலப்பகுதியில் இறக்குமதிச் செலவினம் ஏற்றுமதி வருவாயை விஞ்சியமையின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறையானது கணிசமாக விரிவாக்கமடைந்தது. உயர்ந்தளவான முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையுடனான இவ்வபிவிருத்தி நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை விரிவாக்கமடைவதற்கு இட்டுச்சென்றது. சுற்றுலாத்துறையிலிருந்தான அதிகரித்த வருவாய்களின் முக்கிய காரணமாக முன்னேற்றமடைந்த பணிகள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவலுப்பல்களின் உட்பாய்ச்சல்கள் என்பன விரிவாக்கமடைந்த நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை பகுதியளவில் எதிரீடு செய்திருந்தது. 2018 காலப்பகுதியில் சுற்றுலாப்பயணிகளின் வருகை 10.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த அதேவேளை சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2017இன் ஐ.அ.டொலர் 3,925 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2018இல் ஐ.அ.டொலர் 4,381 மில்லியனுக்கு 11.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்தன. தொழிலாளர் பணவனுப்பல்கள் முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 1.1 சதவீத வீழ்ச்சியைத் தொடர்ந்து 2018இல் ஐ.அ.டொலர் 7,015 மில்லியனுக்கு 2.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவாக, 2018இல் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை ஐ.அ.டொலர் 2.8 பில்லியனுக்கு விரிவாக்கமடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

1

**2018 ஆண்டுக்காலப்பகுதியில் அரசாங்க பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் படுகடன் பணிக்கொடுப்பனவு தேவைப்பாட்டின் கணிசமான வெளிப்பாய்ச்சலுக்கு மத்தியில் நிதியியல் கணக்கு உயர்ந்தளவான உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது.** ஆண்டு காலப்பகுதியில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்களிலிருந்தான பெறுகைகள், வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் கிடைப்பனவு, பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் ஐந்தாவது கட்டத்தின் கிடைப்பனவு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நீண்டகால குத்தகையிலிருந்தான வருவாய்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் என்பன நிதியியல் கணக்கிற்கு ஆதரவளித்திருந்தன. எனினும், அரசாங்கப் பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் இரண்டாந்தரச் சந்தை என்பவற்றிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல்கள் குறிப்பாக 2018இன் இரண்டாவது காலாண்டிலிருந்து சென்மதி நிலுவையின் மீது அழுத்தத்தை வழங்கியிருந்தது. உயர்ந்தளவான வெளிநாட்டு நாணயப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளுடன் இணைந்தான இவ்வபிவிருத்திகள் 2018இன் இறுதியில் திரண்ட மீதியில் ஐ.அ.டொலர் 1,103 மில்லியன் பற்றாக்குறையை பதிவுசெய்வதற்கு வழிவகுத்தது. இதேவேளை, 2019 சனவரியில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்வுக்கான ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் பெறுமதியான மீள்செலுத்தல்களுக்கு மேலாக அரசாங்க பிணையங்கள் சந்தை மீதான உட்பாய்ச்சல்கள் மற்றும் 2019 மார்ச்சில் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 2.4 பில்லியன் பெறுமதியான நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பவற்றின் காரணமாக 2019இன் முதல் காலாண்டுப்பகுதியில் நிதியியல் கணக்கானது குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சலை பதிவுசெய்திருந்ததுடன் இது முதலீட்டாளர்களின் மனோபாவத்தினை மேம்படுத்துவதற்கு பங்களித்திருந்தது.

**2018 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 9.9 பில்லியன் என்ற வரலாற்றில் உயர்ந்தளவான மட்டத்தை அடைந்த மொத்த அலுவல்கள் ஒதுக்குகள் அதன்பின்னர் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் என்பவற்றினால் மெதுவடைந்தது.** ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலிருந்தான பெறுகைகள் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நீண்டகால குத்தகையின் இரண்டாம் கட்ட பெறுகைகள் என்பவற்றுடன் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணிகளினை ஈர்த்தல் என்பவற்றின் ஊடாக ஒப்பீட்டு ரீதியில் உறுதியாக காணப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை போன்றவை மத்திய வங்கியானது பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு இயலச் செய்திருந்தன. எனினும், இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் சென்மதி நிலுவையில் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மீது தாக்கத்தை செலுத்தியிருந்ததுடன் மூலதன வெளிப்பாய்ச்சலுக்கும் இட்டுச் சென்றது. மேலும், உள்நாட்டுப் பக்கத்தில், இறக்குமதியாளர்களிடம் இருந்தான வெளிநாட்டுச் செலாவணிக்கான அதிகரித்த கேள்வி மற்றும் ஏற்றுமதியாளர்களின் குறைந்தளவான வெளிநாட்டுச் செலாவணி மாற்றங்கள் என்பன குறிப்பாக 2018 மே மாதம் தொடக்கம் இலங்கை ரூபாவின் நியாயமற்ற தேய்மானத்தை கட்டுப்படுத்துவதற்கு வெளிநாட்டு செலாவணிகளை உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையில் நிரம்பல் செய்வது தொடர்பில் மத்திய வங்கியை அவசியப்படுத்தியிருந்தன. இதன் விளைவாக, 2018இன் இறுதியில், மொத்த அலுவல்கள் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 3.7 மாதங்களுக்கான இறக்குமதியை மேற்கொள்வதற்குப் போதுமானதாகக் காணப்பட்டன. அதன் பின்னர், 2019இன் மாச்சு மாதத்தின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளியீட்டிலிருந்தான வருவாய்களின் பெறுவனவுடன் மொத்த அலுவல்கள் ஒதுக்கானது கணிசமானளவில் மேம்பாட்டையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**2018இல் முக்கியமாக மத்திய அரசாங்கம் மற்றும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகள் என்பவற்றின் அதிகரித்த வெளிநாட்டுப் படுகடன் காரணமாக இலங்கையின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் அதிகரித்திருந்தது.** ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் பிரதானமாக மொத்த ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் பெறுமதியான செயற்றிட்டக் கடனின் உட்பாய்ச்சல் மற்றும் ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் பெறுமதி கொண்ட வெளிநாட்டு நாணய வடிவிலான நிதியிடல் வசதிகள் என்பவற்றினால் நிதியிடப்பட்டன. மத்தியவங்கியின் வெளிநின்ற பொறுப்பானது பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது கட்டத்தின் பெறுகையுடன் அதிகரித்திருந்த அதேவேளை ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துடனான வெளிநின்ற பொறுப்பானது 2018இன் ஆரம்பத்துடன் ஒப்பிடுமிடத்து வீழ்ச்சியடைந்திருந்தது. மொத்தமாக இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் டிஎவ்சிசி வங்கி என்பவற்றால் வெளியிடப்பட்ட ஐ.அ.டொலர் 1.35 பில்லியன் பெறுமதியான பன்னாட்டு முறிகளின் முதிர்வுடன் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனானது குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மேலும், நேரடி முதலீட்டுத் தொழில் முயற்சிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன்பெறுகைகளின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் அதிகரிப்பொன்றைப் பதிவு செய்திருந்த அதேவேளை அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் வெளிநின்ற வெளிநாட்டு கடன்கள் 2018 காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்தன.


**மத்திய வங்கியானது செலாவணி வீதம் தொடர்பில் அதிகரித்த நெகிழ்வுத்தன்மையுடன் சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீத கொள்கையொன்றைப் பின்பற்றியது.** 2018இன் முதல் நான்கு மாதங்களில் ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்ட செலாவணி வீதமானது அதன்

பின்னரான காலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு காரணிகளினால் கணிசமான அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்தது. மத்திய வங்கி செலாவணி வீதத்தை தீர்மானிப்பது தொடர்பில் அதிகரித்த நெகிழ்வுத்தன்மையை அனுமதித்திருந்த அதேவேளை நியாயமற்ற மிகையான தளம்பல்களை கட்டுப்படுத்துவதற்காக மட்டுமே தலையிட்டிருந்தது. ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்தியவங்கியின் தலையீடானது ஐ.அ.டொலர் 1,120 மில்லியன் தேறிய நிரம்பலை ஏற்படுத்தியிருந்த அதேவேளை 2018இல் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 16.4 சதவீதத்தால் தேய்வடைந்திருந்தது. இது உள்நாட்டில் வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலான இறுக்கமான சூழல் மற்றும் உலகளாவிய நிதிச்சந்தையில் ஏற்பட்டு செல்லும் மாற்றம் என்பவற்றால் உருவாக்கப்பட்ட அழுத்தங்களின் அளவை வெளிப்படுத்தியிருந்தது. குறுக்கு நாணய செலாவணி வீதங்களின் அசைவுகளுடன் இணைந்து சில முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவு தேய்வுடன் 5-நாணயம் மற்றும் 24-நாணயம் கொண்ட பெயரளவுத் தாக்கமுள்ள நாணயமாற்று வீதச் சுட்டெண்கள் 2018 காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்தன. மேலும், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண் ஆண்டு முழுவதும் 100 சுட்டெண் புள்ளிக்குக் கீழாகவே காணப்பட்டதுடன் இது இலங்கையின் தொடர்ச்சியான வெளிநாட்டுப் போட்டித்தன்மையினைக் காட்டியிருந்தது. அதேவேளை, 2018 திசெம்பர் இறுதி மற்றும் 2019 ஆரம்ப காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாட்டைப் பிரதிபலித்து 2019 இன் முதல் காலாண்டுப் பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலர் மற்றும் ஏனைய முக்கிய நாணயத்திற்கெதிராக உயர்வடைந்திருந்தது.

**அத்தியாவசியமற்ற பண்டங்களின் இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகள் மற்றும் பாரியளவான அரசியல் உறுதிப்பாடு என்பவற்றால் உதவப்பட்டு 2018இன் இறுதிப்பகுதி மற்றும் 2019இன் முதல் காலாண்டுப் பகுதியில் வெளிநாட்டுத் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மை ஓரளவிற்கு முன்னேற்றமடைந்தது.** ஐக்கிய அமெரிக்காவின் பெடறல் றிசேர்வ் வங்கியின் மேலதிக வட்டிவீத அதிகரிப்பின் சாத்தியமான தாமதம், 2019 சனவரியில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் பெறுமதியான மீள்கொடுப்பனவுகளினால் ஏற்பட்ட சாதகமான முதலீட்டாளர் மனோபாவம், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் விரிவாக்கம் மற்றும் ஐ.அ.டொலர் 2.4 பில்லியன் பெறுமதியான நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெற்றிகரமான வெளியீடு என்பன வெளிநாட்டுத் துறையின் தோற்றப்பாட்டை முன்னேற்றுவதற்கு உதவியிருந்தன. இவ்வபிவிருத்திகள் 2019 சனவரி மாதத்திற்கான வர்த்தகப் பற்றாக்குறையின் மேலதிக வீழ்ச்சியினால் துணையளிக்கப்பட்டதுடன் 2019இன் முதல் காலாண்டுப் பகுதியில் இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்விற்கும் பங்களித்திருந்தது.

வரைபடம் 1.6

**உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செலாவணி வீதமும் மத்திய வங்கியின் தலையீடும்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


## இறைத் துறை அபிவிருத்திகள்

**2018இல் அரசாங்கத்தின் இறை உபாயமானது ஆரம்ப நிலையை கணிசமான மிகை வடிவில் உருவாக்குகின்ற அதேவேளை வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் வெளிநின்ற படுகடனை குறைப்பதற்கான இறைத் திரட்சி அளவீடுகளை தொடர்ந்தும் இலக்கிட்டது.** அரசின் அரசிறைச் சேகரிப்புக்களில் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் தாழ்ந்த மூலதன செலவினங்களின் பிரதான காரணமாக திரண்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையானது முன்னைய ஆண்டில் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.5 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.3 சதவீதத்திற்கு 2018ஆம் ஆண்டில் மேம்பட்டது. இதன் தொடர்ச்சியாக, திரண்ட நிலுவையிலிருந்து வட்டிக் கொடுப்பனவை நீக்குகின்ற ஆரம்ப நிலுவையானது 2018இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.6 சதவீத மிகையொன்றினை (ரூ.91.4 பில்லியன்) பதிவுசெய்ததன் மூலம் அரசின் இறைத்திரட்சி முயற்சிகளுக்குத் துணைபுரிந்ததுடன் படுகடன் மாற்றமடையும் தன்மையினையும் மேம்படுத்துகின்றது. அரசின் குறைச் சேமிப்பினைப் பிரதிபலிக்கும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2018இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.2 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்து, எதிர்பார்க்கப்பட்ட அரசிறைச் சேகரிப்பினைவிடக் குறைவினையும் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான அதிகளவு செலவினங்கள் காரணமாக மீண்டெழும் செலவினங்களில் எதிர்பார்க்கப்பட்டதைவிட பாரியளவிலான அதிகரிப்பினையும் குறித்துக் காட்டுகின்றது. அதேவேளை, ரூபாவின் தேய்வின் தாக்கம், ஒப்பீட்டளவில் தாழ்ந்த பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையின் தேறிய நிதியிடலின் பிரதான காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக மத்திய அரச படுகடனானது 2017இன் இறுதியில் காணப்பட்ட 76.9 சதவீதத்திலிருந்து 2018இன் இறுதியில் 82.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக அரசின் அரசிறையானது 2017இல் பதிவுசெய்த 13.6 சதவீதத்திலிருந்து 2018இல் 13.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான வரி வருமானத்தின் வீழ்ச்சி, பெறுமதிசேர் வரி, பெற்றோலிய உற்பத்தி மற்றும் மதுபானத்தின் மீதான கலால் வரி, பிடித்து வைத்தல் வரி மற்றும் செஸ் தீர்வை என்பன அரசிறைச் சேகரிப்புக்களின் குறைந்த செயற்றிறனுக்கு வழிவகுத்தன. வருமான வரிகள், புகையிலை மற்றும் சிகரெட்டுக்கள், பெறுமதிசேர் வரி மற்றும் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்தான வருமானங்களின் பெயரளவு அதிகரிப்பின் மூலம் துணைபுரியப்பட்ட பெயரளவு நியதிகளிலான மொத்த அரசிறையானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,831.5 பில்லியனிலிருந்து 2018இல் ரூ.1,920.0 பில்லியனுக்கு 4.8 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்தது. இறக்குமதித் தீர்வைகள், பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் வரி, பிடித்து வைத்தல் வரி மற்றும் செஸ் தீர்வை என்பன 2017உடன் ஒப்பிடுகையில் 2018இல் முறையே 28.9 சதவீதம், 10.4 சதவீதம், 13.0 சதவீதம் மற்றும் 10.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மத்திய வங்கியின் மூலமான இலாப மாற்றல்கள் மற்றும் அளவீடுகள் மற்றும் கட்டணத்திலிருந்தான வருமான அதிகரிப்புக் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமொன்றாக வரியல்லா அரசிறை 2017இன் 1.2 சதவீதத்திலிருந்து 2018இன் 1.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கலின் வீழ்ச்சி காரணமாக மொத்தச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கலானது 2017இல் 19.2 சதவீதத்திலிருந்து 2018இல் மொ.உ.உற்பத்தியின் 18.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினமானது 2017இன் 14.4 சதவீதத்திலிருந்து 2018இன் 14.5 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்ததுடன் 2017இன் ரூ.1,927.7 பில்லியனிலிருந்து 2018இன் ரூ.2,089.7 பில்லியனிற்கு 8.4 சதவீதத்தின் பெயரளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இயற்கை அனர்த்தத்துடன் தொடர்புடைய வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் செலவினங்களின் அதிகரிப்பானது மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். பெயரளவு நியதிகளில் மொத்த வட்டிச் செலவினமானது 2017இன் ரூ.735.6 மில்லியனிலிருந்து 2018இல் ரூ.852.2 பில்லியனுக்கு 15.9 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை, செலாவணி வீத வேறுபாடுகளின் தாக்கம் மற்றும் உலக வட்டி வீதங்களின் அதிகரிப்பு என்பவற்றைப் பிரதிபலிக்கின்ற வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2018இல் ரூ.212.7 பில்லியனுக்கு 29.0 சதவீதத்தினால் அதிகரித்தது. மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் 2017இன் ரூ.645.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக் காலப்பகுதியில் ரூ.603.5 பில்லியனிற்கு பெயரளவு நியதிகளில் 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல்களும் 2017இன் 4.8 சதவீதத்திலிருந்து 2018இன் 4.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, அரச முதலீடானது முன்னைய ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.9 சதவீதத்திலிருந்து (ரூ.657.4 பில்லியன்) 2018இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.3 சதவீதத்திற்கு (ரூ.625.0 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 1.7
இறைத்துறை திரட்டு
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)





*மூலம்:* நிதி அமைச்சு

**2018இற்கான அரைவாசிக்கும் அதிகமான வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை உள்நாட்டு மூலங்கள் மூலம் நிதியிடப்பட்டது.** 2018இல் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையின் மொத்த நிதியிடலில் 57.5 சதவீதம் உள்நாட்டு மூலங்கள் மூலமும் எஞ்சியவை வெளிநாட்டு மூலங்கள் மூலமும் பெறப்பட்டது. 2017இன் 36.2 சதவீதத்துடன் (ரூ.1,065 பில்லியன்) ஒப்பிடுகையில் மொத்தத் தேசிய உள்நாட்டு நிதியிடலின் 75.0 சதவீதத்திற்கு (ரூ.327.8 பில்லியன்) வகை கூறுகின்ற உள்நாட்டு வங்கியல்லா மூலங்களில் 2018இல் அரசாங்கம் பெரிதும் தங்கியிருந்தது. இதன் விளைவாக, வங்கித்தொழில் துறைகளிலிருந்தான கடன் பெறுகைகள் 2017இன் ரூ.187.7 பில்லியனிலிருந்து (63.8 சதவீதம்) 2018இல் ரூ.109.5 பில்லியனுக்கு (25.0 சதவீதம்) குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் திறைசேரி முறிகளின் உயர் தேசிய மீள் கொடுப்பனவுகள் காரணமாக வர்த்தக வங்கிகளிலிருந்தான நிதியிடல் 2017இன் ரூ.375.7 பில்லியன் கடன் பெறுகைகளுடன் ஒப்பிடுகையில் ரூ.136.6 பில்லியன் தேறிய மீள்கொடுப்பனவொன்றினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், உள்நாட்டுச் சந்தைகளின் இறுகிய திரவத்தன்மை நிலைமைகளின் பிரதான காரணமாக மத்திய வங்கியின் மூலமான அதிகரித்த திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு காரணமாக மத்திய வங்கியிலிருந்தான கடன்பெறுகைகள் 2017இன் ரூ.187.9 பில்லியன் தேறிய

மீள்கொடுப்பனவிலிருந்து 2018இல் ரூ.246.1 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் வெளிநாட்டு உடமைகளிலிருந்தான குறிப்பிடத்தக்க வெளிப்பாய்ச்சல்களின் தாக்கத்தினைப் பகுதியளவில் பிரதிபலிக்கின்ற வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கான வெளிநாட்டு நிதியிடல் 2017இன் ரூ.439.2 பில்லியனுக்கு ஒப்பிடுகையில் 2018இல் ரூ.323.5 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளினூடான தேறிய கடன்பெறுகைகள் 2018இல் ரூ.390.4 பில்லியன் (ஐ.அ.டொலர்கள் 2.5 பில்லியன்) பெறுமதியாக இருந்தது. அதேவேளை, வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள் மற்றும் வெளிநாட்டு செயற்றிட்டக் கடன்கள் என்பவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய கடன் பெறுகைகள் 2018இல் முறையே ரூ.66.6 பில்லியன் மற்றும் ரூ.7.7 பில்லியனாகக் காணப்பட்டது.

**மத்திய அரச படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2017இன் இறுதியில் 76.9 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் 82.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.** 2018இல் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் விகித அதிகரிப்பானது ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுகின்ற தேறிய கடன் பெறுகைகள், பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் தேய்மானத்தின் கூட்டான விளைவாகும். பெயரளவு நியதிகளில், மத்திய அரச படுகடன் 2017இன் இறுதியின் ரூ.10,313.0 பில்லியனிலிருந்து 2018இன் இறுதியில் ரூ.11,977.5 பில்லியனிற்கு அதிகரித்தது. இதில், மொத்த வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் ரூ.6,018.0 பில்லியனிற்கு 7.6 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் ரூபாய்ப் பெறுமதியானது 2018இன் இறுதியில் ரூ.5,959.5 பில்லியனுக்கு 26.3 சதவீதத்தினால் கணிசமானளவு அதிகரித்தது. இலங்கை ரூபாவின் தேய்வானது ரூபா நியதிகளில் அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயப் படுகடன் இருப்புக்களில் அதிகரிப்பினை பிரதிபலித்த போதிலும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் இருப்பானது வெளிநாட்டு நாணய நியதிகளில் தொடர்ந்தும் மாறாது காணப்பட்டது. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் அரசாங்கத்திற்கான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களை தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படுவதனால் ரூபாவின் தேய்வின் காரணமாக வெளிநின்ற நிலுவையின் அத்தகைய பெயரளவு அதிகரிப்பின் தாக்கம் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் கவர்ச்சிகரமான போதுமானளவு உட்பாய்ச்சல்களைப் பேணுகின்றார்கள் என்றும் உறுதியினை வழங்கி படுகடன் தீர்ப்பனவிற்கான ஒரு பொருட்டாக கருதப்படமாட்டாது. வெளிநாட்டு நாணயப் படுகடன் மீதான சராசரி வட்டி வீதமானது அதன் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட படுகடனைவிட தாழ்வானது என்பதால் இவ்வட்டிவீத

வரைபடம் 1.8
மத்திய அரச படுகடன்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




வேறுபாடுகள் அத்தகைய வெளிநாட்டு நாணய கடன்களின் முதிர்வுக் காலங்களின் மீது ரூபாய் அடிப்படையிலான வட்டிக் கொடுப்பனவுகளின் பெறுமதித்தேய்வைப் பெரிதளவில் ஈடுசெய்யும்.


## நாணயத் துறை அபிவிருத்திகள்

**2015இன் இறுதியில் நிலவிய நாணயக்கொள்கை நிலை இறுக்கமாக்கல் நோக்கம் தளர்த்தப்பட்டதன் மூலம் மத்திய வங்கியானது 2018 ஏப்பிறலில் நாணய இறுக்கமாக்கல் வட்டத்தினை முடிவுறுத்துவதற்கான சமிக்ஞையைக் காட்டியதுடன் அதன்பின்னர் நடுநிலையான நாணயக் கொள்கை நிலையொன்றினைப் பேணியது.** பணவீக்கத்தின் சாதகமான அபிவிருத்திகள், பணவீக்கத் தோற்றப்பாடு அதேபோன்று உண்மைப் பொருளாதாரத்தின் குறைவான செயலாற்றம் என்பன மத்திய வங்கி அதன் கொள்கை வீதங்களை 2018 ஏப்பிறலில் குறைப்பதற்கு ஊக்குவித்தது. அதன்படி, 2018 ஏப்பிறலில் மத்திய வங்கியானது துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தை 25 அடிப்படைப் புள்ளிகளினால் 8.50 சதவீதத்திற்கு குறைத்ததனால் கொள்கை வீத வீச்சு 125 அடிப்படைப்புள்ளிகளுக்கு ஒடுக்கமடைந்தது. உலகளாவிய பொருளாதார அபிவிருத்திகளுடன் இணைந்து செல்லும் வகையில் ஐக்கிய அமெரிக்க பெடறல் றிசேர்வினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான வழிமுறைகள், நாணயக் கொள்கை வழமைப்படுத்துதல் மீதான அதன் நிலை மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாடு மீதான அதனது தாக்கம் என்பனவற்றுக்கு மத்தியில் 2018 ஏப்பிறலிலிருந்து மத்திய வங்கி நடுநிலையான நாணயக் கொள்கை நிலையொன்றைப் பேணியது. குறிப்பாக 2018 செத்தெம்பரிலிருந்து, உள்நாட்டு பணச்சந்தையில் நிலவிய பாரியளவானதும், விடாப்பிடியானதுமான திரவத்தன்மைப் பற்றாக்குறையானது மத்திய வங்கிக்கு

கொள்கை தலையீடுகளைத் தேவைப்படுத்தியிருந்தது. இதன்படி, நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையை உட்புகுத்தும் நோக்கில் வர்த்தக வங்கிகளின், அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களின் மீது பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதமானது 2018 நவெம்பர் நடுப்பகுதியில் 1.50 சதவீதப் புள்ளிகளால் 6.00 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. எனினும், நியதி ஒதுக்கு விகிதக் குறைப்பின் தாக்கத்தை நடுநிலைப்படுத்துவதற்கு துணைநில் வைப்பு வசதி வீதம் 75 அடிப்படைப்புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டதுடன், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் 50 அடிப்படைப்புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டு கொள்கை வீத வீச்சினைக் குறுக்கமடையச் செய்தது. 2018 நவெம்பரில் திரவத்தன்மை உள்ளீர்க்கப்பட்ட போதிலும், உள்நாட்டு பணச்சந்தையில் திரவத்தன்மை பற்றாக்குறையானது விடாப்பிடியான உயர்மட்டங்களிலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. அதற்கிணங்க, 2019 மாச்சு 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், நியதி ஒதுக்கு விகிதம் மேலும் 1.00 சதவீதப் புள்ளிகளால் 5.00 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதுடன், துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 8.00 சதவீதம் மற்றும் 9.00 சதவீதமாகத் தொடர்ந்தும் மாற்றமின்றிப் பேணப்பட்டன.

**இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகள் 2018 ஏப்பிறல் வரை பேணப்பட்டு வந்த இறுக்கமான நாணயக் கொள்கை நிலை என்பவற்றுக்கு மத்தியிலும் 2018 காலப்பகுதியில், வர்த்தக வங்கிகளின் அனேகமான சந்தை கடன்வழங்கல் மற்றும் வைப்பு வட்டி வீதங்கள் பெயரளவு மற்றும் உண்மை நியதிகளில் தொடர்ந்தும் உயர்ந்தளவிலேயே காணப்பட்டன.** 2018 ஏப்பிறலில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வட்டி வீத சீராக்கங்களுடன் சில வைப்பு வீதங்கள் குறைவடைந்த போதிலும், வர்த்தக வங்கிகளின் அனேகமான வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்கள் 2018இல் அதிகரித்திருந்தன. அதன்படி, வர்த்தக வங்கிகள் வசமுள்ள அனைத்து வெளிநின்ற வட்டி உழைக்கின்ற வைப்புக்கள் மீதான வட்டி வீதங்களின் அசைவுகளை வெளிப்படுத்துகின்ற சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம், 2017இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 9.07 சதவீதத்திலிருந்து 2018இன் இறுதியில் 8.81 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. தொடர்ச்சியாகக் காணப்பட்ட இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளுக்கிடையிலும் கொடுகடன்களுக்கான உயர் கேள்வியினால் 2018இல் வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் வீதங்கள் தொடர்ந்தும் உயர்வாகவே காணப்பட்டன. அதன்படி, வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்ட சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம், 2017 இறுதியின் 13.88 இலிருந்து 2018 இறுதியில் 14.40 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, 2018ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கலப்பான அசைவினைக் காட்டிய அரச பிணையங்கள் மீதான விளைவுகள்

வரைபடம் 1.9
**துணைநில் வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளுக்கிடையிலும் சந்தை மனோபாவத்திலான மாற்றங்கள் அதேபோன்று அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாட்டினைப் பிரதிபலிக்கும் வகையில் 2018ஆம் ஆண்டின் இறுதிக்காலாண்டில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. அதன்படி, 2018இல் 91 நாட்கள், 182 நாட்கள் மற்றும் 364 நாட்கள் மீதான முதலாம் தரச் சந்தையின் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகள் முறையே 232, 169 மற்றும் 230 அடிப்படைப்புள்ளிகளால் அதிகரித்தன. மேலும், முதலாந்தரச் சந்தையின் திறைசேரி முறிகள் மீதான விளைவுகளும் 2018 காலப்பகுதியில் கலப்பான அசைவுகளையே காட்டியுள்ளன. அரச பிணையங்கள் மீதான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையியானது சில மிதமடைவுகள் காணப்பட்ட போதிலும், 2018 காலப்பகுதியில் மேல்நோக்கி நகர்வடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில் கம்பனிப் படுகடன் பிணையங்கள் மீது பிரயோகிக்கப்படும் வட்டி வீதங்கள் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டன. அதேவேளை, உலகளாவிய சந்தையின் அதிகரித்துவரும் வட்டி வீதங்களுக்கு மத்தியிலும் வர்த்தக வங்கிகளுடன் பேணப்படுகின்ற வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது பிரயோகிக்கப்படுகின்ற வட்டி வீதங்கள் கலப்பான அசைவுகளைக் காட்டுகின்றன. அதேவேளை, 2019 மாச்சில் மேற்கொள்ளப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்குதலுடன் இணைந்து உள்நாட்டுச் சந்தையில் நிலவிய திரவத்தன்மைப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கைகளுக்கு பதிலிறுத்தும் விதத்திலும் மேம்பட்ட சந்தை மனோபாவத்தின் விளைவினாலும் 2019 ஆரம்பப் பகுதியில் அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தையின் விளைவு வளையியில் கீழ் நோக்கிய நகர்வொன்றும் அதேபோன்று முதலாந்தரச் சந்தையின் விளைவுகளில் குறைவொன்றும் அவதானிக்கப்பட்டது.

**2018 நவெம்பரில் நியதி ஒதுக்கு விகிதத்தில் மேற்கொள்ளப்பட்ட கீழ் நோக்கிய சீராக்கத்தினால் 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் குறிப்பாக ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒதுக்குப் பணம் மிதமான வளர்ச்சியொன்றைப்**

**பதிவுசெய்தது.** பெயரளவு நியதிகளில், ஒதுக்குப் பணமானது 2017இன் ரூ.83.6 பில்லியன் விரிவாக்கத்துடன் ஒப்பிடும்போது 2018 ஆண்டுகாலப்பகுதியில் ரூ.21.3 பில்லியனால் மட்டும் ரூ.961.1 பில்லியனுக்கு அதிகரித்தது. பொறுப்பு நியதிகளில், நாணயச்சுற்றோட்டத்திலுள்ள அதிகரிப்பானது ஒதுக்குப் பணத்தின் விரிவாக்கத்திற்கு முழுமையாகப் பங்களிப்புச் செய்திருந்த அதேவேளையில், 2018 நவெம்பரில் நியதி ஒதுக்கு விகிதம் குறைக்கப்பட்டதால் 2018 ஆண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு மீதியானது குறைவடைந்தது. சொத்துப்பக்கத்திலிருந்து நோக்கும் போது 2018 ஆண்டுகாலப்பகுதியில் ஒதுக்குப் பணத்தில் ஏற்பட்ட விரிவாக்கமானது மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பின் மூலம் முழுமையாக உந்தப்பட்டது. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகளின் அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் வகையில், மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கமானது மத்திய வங்கியால் தேறிய அடிப்படையில் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கொடுகடன்களின் குறிப்பிடத்தக்களவான விரிவாக்கத்தின் விளைவால் ஏற்பட்டது. 2017 இறுதியின் ரூ.304.5 பில்லியனால் ரூ.25.6 பில்லியனுக்கு சுருக்கமடைந்திருந்த மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகளானது (தேறிய மீள்கொள்வனவு நடவடிக்கைகள்) 2018இல் ரூ.247.4 பில்லியனால் ரூ.273.0 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. இது முக்கியமாக, உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையை உள்ளீர்க்கும் நோக்கத்திற்காக மத்திய வங்கியின் அரச பிணையங்களின் கால மற்றும் உடனடிக் கொள்வனவின் காரணமாக ஏற்பட்டதாகும். எனினும், தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் கடுமையான அதிகரிப்பான ரூ.287.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2018ஆம் ஆண்டில் ரூ.95.6 பில்லியனால் குறைவடைந்தது. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் குறைவானது குறிப்பாக பன்னாட்டு நிறுவனங்களின் ஊடான வெளிநாட்டுப் பொறுப்புக்களின் அதிகரிப்பு மற்றும் ஆண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டுச் சந்தையின் வெளிநாட்டுச் செலாவணி வழங்கல் போன்றவற்றின் விளைவால் ஏற்பட்டது.

**2017ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியிலிருந்து படிப்படியாக மிதமடைந்த விரிந்த பண ($M_{2b}$) வளர்ச்சியானது, வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் சுருக்கத்திற்கு பெருமளவில் வகைகூறியதுடன் ஆண்டு முழுவதும் அதன் குறைவடைந்து செல்லும் போக்கினைப் பேணியது.** விரிந்த பணத்தின் ஆண்டுக்காண்டு வளர்ச்சியானது 2017 இறுதியின் 16.7 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் 13.0 சதவீதத்திற்குக் குறைவடைந்திருந்தது. ஆண்டுகாலப்பகுதியில் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் சுருக்கமடைந்த போதிலும் விரிந்த பண வளர்ச்சிக்கு வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கமே முழுமையான காரணமாகும். மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் செலாவணி வீதத்தின் மீதான அதிகரித்து வரும் அழுத்தங்கள் என்பனவற்றுக்கு மத்தியிலும் மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் மற்றும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய நிதியிடல் நிலைமை என்பவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவால் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 ஆண்டுகாலப்பகுதியில் ரூ.188.5 பில்லியனாகக் குறைவடைந்தது. அதேவேளை, முக்கியமாக தனியார் துறையின் கொடுகடன் பாய்ச்சல்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு அதேபோன்று அரசாங்கம் மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சி நிறுவனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றால் வங்கித்தொழில் துறையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் 2018இல் ரூ.1,008.8 பில்லியனால் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகளிடமிருந்தான கொடுகடனின் விரிவாக்கத்தால் உந்தப்பட்டு தேறிய உள்நாட்டு சொத்துக்களுக்கிடையிலான அரசிற்கான தேறிய கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ.196.4 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2018இல் ரூ.346.7 பில்லியன் கணிசமானளவால் அதிகரித்தது. இதன்படி, மத்திய வங்கியிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் 2017இன் ரூ.187.9 பில்லியன் கொண்ட கணிசமானளவான சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018 காலப்பகுதியில் ரூ.246.3 பில்லியனால் அதிகரித்த அதேவேளை வர்த்தக வங்கிகளிடமிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் 2017இன் ரூ.384.3 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்களவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018 காலப்பகுதியில் ரூ.100.5 பில்லியனால் அதிகரித்தது. அதேவேளை, வங்கித்தொழில் முறைமையில் இருந்து அரச கூட்டுத்தாபனங்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடனானது 2017இன் ரூ.23.2 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.218.4 பில்லியனால் விரிவடைந்தது.


வரைபடம் 1.10
விரிந்த பண வளர்ச்சி மற்றும் பங்களிப்பு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

1

வரைபடம் 1.11
**தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன்**



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கொடுகடன் 2018 இன் முதல் எட்டு மாதங்களில் மெதுவான வேகமொன்றில் வளர்ச்சியடைந்த வேளையில் 2018 இன் இறுதி நான்கு மாதங்களில் சில அதிகரிப்புக்கள் காணப்பட்டுள்ளன.** தனியார் துறைக்கான கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி 2017 இறுதியின் 14.7 சதவீதத்திலிருந்து 2018 ஓகத்து இறுதியில் 14.3 சதவீதத்திற்கு மிதமடைந்திருந்தது. எனினும், இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு அரசு மற்றும் மத்திய வங்கியின் கொள்கைகளின் எதிர்பார்ப்பில் அதேபோன்று நாணயங்களின் தேய்வுடனான இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு தனியார் துறையின் கடன்பாடுகள் அதிகரித்ததன் மூலம் தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி 2018 இன் இறுதியில் 15.9 சதவீதத்திற்கு விரிவடைந்தது. பெயரளவு நியதிகளில், தனியார் துறைக்கான கொடுகடன் 2017இன் ரூ.613.4 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 2018 காலப்பகுதியில் ரூ.762.1 பில்லியனால் விரிவடைந்தது. 2018 காலப்பகுதியில் பணிகள் துறை மற்றும் தனியார் கடன் மற்றும் முற்பணங்கள் என்பனவற்றிற்கான வழங்கப்பட்ட கொடுகடனானது விரிவடைந்த போதிலும், கைத்தொழில் துறை மற்றும் வேளாண்மை மற்றும் மீன்பிடித்துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சியில் சில மிதமடைவுகள் அவதானிக்கப்பட்டன. அதன்படி, கட்டுமானத்துறைக்கான கொடுகடனில் காணப்பட்ட பாரியளவான மெதுவடைவு காரணமாக கைத்தொழில் துறைக்கான கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி 2017 இறுதியின் 19.6 சதவீதத்திலிருந்து 2018 இறுதியில் ஆண்டுக்காண்டு 15.3 சதவீதத்திற்கு மிதமடைந்தது. அதேவேளை, வேளாண்மை மற்றும் மீன்பிடி மற்றும் பணிகள் துறைகளுக்கான கொடுகடன் 2017இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 14.1 சதவீதம் மற்றும் 8.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2018இன் இறுதியில் முறையே 14.0 சதவீதம் மற்றும் 17.8 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. அடகுபிடித்தல் முற்பணங்கள், கடனட்டைகள் அதேபோன்று நீண்ட கால நுகர்வுப் பொருட்களின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கடன்கள் போன்றவற்றின் கொடுகடன் விரிவாக்கத்தின் காரணமாக தனியார் கடன்கள் மற்றும் முற்பணங்களும் 2017 இறுதியின் 18.5 சதவீத ஆண்டுக்காண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 2018 இறுதியில் 20.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

## நிதியியல் துறை அபிவிருத்திகள்

**உலகளாவிய மற்றும் உள்நாட்டு ரீதியில் நிலவிய சவால்மிக்க சந்தை நிலைமைகளுக்கு மத்தியிலும் 2018இல் நிதியியல் துறையானது மிதமானதொரு விரிவாக்கத்தினைப் பதிவுசெய்திருந்தது.** நிதியியல் துறையில் ஆதிக்கஞ்செலுத்துகின்ற வங்கித்தொழில் துறையானது மொத்தச் சொத்துக்களில் மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்ததுடன் மூலதனம் மற்றும் திரவத்தன்மை மட்டங்களில் அதன் குறைந்தளவு நியதித் தேவைப்பாட்டிற்கு நன்கு மேலாகவே காணப்பட்டது. சொத்துக்களின் வளர்ச்சியானது முக்கியமாகக் கடன் சொத்துப்பட்டியலின் விரிவாக்கத்தினால் உந்தப்பட்டதுடன் இது 2018இன் இரண்டாம் அரைப்பகுதியில் கணிசமானளவால் அதிகரித்தமைக்கு இலங்கை ரூபா தேய்வடைந்தமையும் பகுதியளவான காரணமாக அமைந்துள்ளது. 2018 ஆண்டுகாலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்களின் வளர்ச்சியில் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது 84.1 சதவீதத்திற்கு வகைகூறியது. வங்கித்தொழில் துறையின் மொத்தப் பொறுப்புக்களின் 72.0 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிதியிடலின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் வைப்புக்களே காணப்படுகின்றன. செயற்படா கடன்விகிதங்களின் அதிகரிப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் சவால்மிக்க உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சந்தை நிலைமைகளின் காரணமாக, வங்கித்தொழில்துறை சொத்துக்களின் தரமானது தேய்வடைந்தது. 2017இன் இறுதியில் வரலாற்று ரீதியிலேயே குறைவான வீதமொன்றான 2.5 சதவீதத்தினைப் பதிவு செய்திருந்த திரண்ட செயற்படாக்கடன்களின் விகிதமானது 2018இன் இறுதியில் 3.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. தேய்வடைந்த சொத்துக்களின் தரம், தொழிற்பாட்டு கிரயங்களின் உயர்வு மற்றும் வரிகளின் அதிகரிப்பு என்பனவற்றால் வங்கித்தொழில்துறையின் இலாபத்தன்மையானது 2018ஆம் ஆண்டில் மிதமடைந்திருந்தது. 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில், துறையின் தாழ்வான இலாபமானது சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமையின் மீதான வருவாய் போன்றவற்றில் ஏற்பட்ட குறைவினால் பிரதிபலிக்கப்பட்டது. மத்திய வங்கியானது, வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மையை வலுப்படுத்துவதற்கான முன்மதியான கொள்கை வழிமுறைகளையும் ஒழுங்குபடுத்தல்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

**ஆண்டுகாலப்பகுதியில் கொடுகடன் வளர்ச்சி மற்றும் இலாபத்தன்மை என்பவற்றின் வீழ்ச்சியுடன் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் வளர்ச்சியானது 2018இல் மெதுவடைந்திருந்தது.** உந்து ஊர்திகளின் இறக்குமதி

மற்றும் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுகடன் வசதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட, முக்கியமாக அண்மைய இறை மற்றும் பேரண்ட முன்மதியுடைய கொள்கை வழிமுறைகள், போன்றவற்றால் துறையின் கடன்வழங்கல் செயற்பாடுகளானது மெதுவடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில் துறையின் இலாபத்தன்மையானது, முக்கியமாக அதிகரித்த நிதியிடல் கிரயம் மற்றும் செயற்படாக் கடன்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட உயர்வான கடனிழப்பு ஏற்பாடுகள் போன்றவற்றால் குறைவடைந்தது. துறையின் இலாபத்தன்மையை நோக்கிய நெருக்கடியின் அறிகுறிகளானது ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமையின் மீதான வருவாய் என்பனவற்றின் குறைவினால் பிரதிபலிக்கப்பட்டது. மத்திய வங்கியானது உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதைத் தொடர்ந்தும் மேற்கொண்டதுடன், நலிவடைந்த உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளை மீட்டெடுப்பதற்கான அல்லது அவற்றை மூடுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. ஓய்வூதிய நிதியங்கள், காப்புறுதி மற்றும் முதனிலை வணிகர்கள் என்பவை உள்ளடங்கலான நிதியியல் முறைமையின் ஏனைய துறைகள் 2018 காலப்பகுதியில் மிதமாக விரிவடைந்தன. எனினும், ஆண்டுகாலப்பகுதியில் கூறு நம்பிக்கைத் துறையின் செயலாற்றமானது மோசமான நிலையொன்றைப் பதிவுசெய்திருந்தது.

**2018இன் செத்தெம்பர் நடுப்பகுதிவரை கலப்பான அசைவுகளை வெளிப்படுத்தியிருந்த உள்நாட்டு பணச்சந்தையின் ரூபாய் திரவத்தன்மையானது முக்கியமாக மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் காரணமாக விடாப்பிடியான பற்றாக்குறை மட்டங்களுக்குத் திரும்பியது.** உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான நாணயக் கடிதங்களின் எல்லைத் தேவைப்பாட்டினை விதித்தல் மற்றும் அத்தகைய வைப்புக்கள் மீது மத்திய வங்கியில் பேணப்பட வேண்டிய நியதித் தேவைப்பாட்டின் மூலம் திரவத்தன்மை பற்றாக்குறைக்கு குறிப்பிட்டளவில் பங்களிப்புச் செய்துள்ளது. 2018 நவெம்பரில், நியதி ஒதுக்கு விகிதக் குறைப்பின் மூலமான திரவத்தன்மை உட்புகுத்தலுடன் உள்நாட்டுப் பணச்சந்தையின் மீதான அழுத்தம் குறிப்பிடத்தக்களவு இலகுவாக்கப்பட்ட போதிலும் இது பகுதியளவில் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகளின் காரணமாக 2018இன் இறுதியில் உள்நாட்டுப் பணச்சந்தையின் திரவத்தன்மையானது பற்றாக்குறை மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில், மத்திய வங்கியானது குறிப்பாக 2018 மே மாதத்திலிருந்து செலாவணி வீதத்தின் மீதான தொடர்ச்சியான அழுத்தத்தை இலகு நிலைக்கு கொண்டுவருதல் மற்றும் கணிசமான மூலதன வெளிப்பாய்ச்சலிலிருந்து தோன்றும் மிகையான தளம்பலைத் தடைசெய்தல் மற்றும் இறக்குமதிக்கான கேள்வியை அதிகரித்தல் போன்றவற்றில் தலையீடு செய்தது. அதேவேளை, கொழும்புப் பங்குப்பரிவர்த்தனை 2018ஆம் ஆண்டுகாலத்தில் பொலிவற்ற செயலாற்றத்தைப் பதிவுசெய்ததுடன் இது உள்நாட்டு மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளின் காரணமாக செலாவணி வீதம், நிச்சயமற்ற அரசியல் நிலைமை மற்றும் முதலீட்டாளர்களின் மனோபாவ மாற்றம் என்பவற்றின் மீதான அதிகரித்த அழுத்தம் என்பனவற்றினால் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவான வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களின் விளைவாலேயே ஏற்பட்டது. ஆண்டு முழுவதும் பங்கு விலைகள், புரள்வு, சந்தை மூலதனமயமாக்கல் மற்றும் விலை வருவாய் விகிதம் என்பனவற்றை உள்ளடக்கிய பெரும்பாலான குறிகாட்டிகளின் குறைவினால் எதிர்மறையான அபிவிருத்திகள் பிரதிபலிக்கப்பட்டன. அதேவேளை, பொருளாதார நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்காக குடியிருப்பாளர்கள் மற்றும் கம்பனித் துறைக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில் மத்திய வங்கியானது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையுடன் தொடர்புடைய ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை ஆண்டுகாலப்பகுதியில் மேலும் விரிவுபடுத்தியது.

## 1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

**பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதார தோற்றப்பாடு தொடர்பில் 2019 சனவரி மாதத்திற்கான இற்றைப்படுத்தலுக்கு அமைவாக சர்வதேச ரீதியில் அதிகரித்துள்ள பொருளாதார மற்றும் அரசியல் சிக்கல்களின் காரணமாக உலகப் பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்தில் ஒரு மெதுவடைவினை 2018இல் அவதானிக்க முடிந்தது.** அமெரிக்காவினைத் தவிர்த்து ஏனைய முக்கிய பொருளாதாரங்களின் பொருளாதார நடவடிக்கைகளில் மெதுவடைவு காணப்பட்டமையினால் 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 காலப்பகுதியில் உலகப் பொருளாதார வளர்ச்சியானது அதிகரித்திருந்தது. 2018 காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார நடவடிக்கைகளின் கணிசமானளவான வளர்ச்சிக்கு மத்தியில் ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய வலயம் மற்றும் யப்பான் போன்ற நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு மேலாக அதிகளவில் மெதுவடைந்ததுடன் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் மெதுவான பொருளாதார வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. அதேவேளை, அதிகரித்து செல்லும் வர்த்தக பதற்றம் மற்றும் இறுக்கமான நிதியியல் நிலைமைகள் என்பவற்றால் தூண்டப்பட்ட சவால்மிக்கதான உலகப் பேரண்டப் பொருளாதார சூழலுக்கு மத்தியில் தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் அபிவிருத்தி பொருளாதாரங்கள்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் குறைவான வளர்ச்சியை அனுபவித்தன. இதற்கு முன்னேற்றமடைந்த உள்நாட்டு கேள்வி மற்றும் எண்ணெய் ஏற்றுமதி பொருளாதாரங்களை நன்மையடையச் செய்த உயர்ந்தளவான எரிபொருள் விலைகள் என்பன காரணமாயிருந்தன. மேலும், 2018 காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டனின் வெளியேற்றத்துடனான நிச்சயமற்றதன்மை மற்றும் சீனா - அமெரிக்கன் வர்த்தக யுத்தத்திலிருந்தான அதிகரித்த பதற்றங்கள் என்பன உலகளாவிய வர்த்தகத்தின் மெதுவடைவிற்கு இட்டுச்சென்றன. அதேவேளை, 2018இன் முதல் ஒன்பது மாதங்களில் அதிகரித்த போக்கினை காட்டி நின்ற எரிபொருள் விலைகள் ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் பணவீக்கம் மீது சில வேகமான பணவீக்க விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன.

**உலகப் பொருளாதார சூழலின் அதிகரித்து செல்லும் நிச்சமற்ற தன்மைக்கு மத்தியில் 2018 காலப்பகுதியில் பெரும்பாலான முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் நாணயக்கொள்கையின் வழமைப்படுத்தல் அணுகுமுறையினைப் படிப்படியாக மேற்கொண்டன.** இது உள்நாட்டு சந்தை நிலமைகளில் சாதகமான அபிவிருத்திகளை காட்டி நின்றதுடன் அத்தகை வழமைப்படுத்தல் நிகழ்விலிருந்தான பாதகமான பரம்பல் தாக்கங்களுக்கு பதிலிறுத்தும் வகையில் தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களை தேவைப்படுத்தியிருந்தது. முன்னேற்றமடைந்த உள்நாட்டுக் கேள்வி மற்றும் பலப்படுத்தப்பட்ட தொழிற் சந்தைகள் என்பவற்றுக்கு பதிலிறுத்தும் வகையில் 2015இன் இறுதியில் ஐக்கிய அமெரிக்காவின் பெடறல் றிசேர்வினால் ஆரம்பிக்கப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை 2018 காலப்பகுதியில் நான்கு தடவைகள் பெடரல் நிதி இலக்கு வீதத்தினை அதிகரித்து அதனது நிலையினை மேலும் இறுக்கப்படுத்தியிருந்தது. எனினும், ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் மெதுவடைகின்ற அதேவேளை பணவீக்க அழுத்தங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதை சமிக்ஞைப்படுத்தியிருந்ததுடன் பெடறல் றிசேர்வானது 2019 சனவரியிலிருந்து அதிகரித்த எச்சரிக்கையான அணுகுமுறையைப் பின்பற்றியிருந்தது. அதேவேளை, இங்கிலாந்து வங்கியானது உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் உத்வேகத்தினை அடைந்தமை மற்றும் பணவீக்கம் இலக்கு மட்டங்களுக்கு மேலாக காணப்பட்டமை என்பவற்றுக்கு மத்தியில் அதனது கொள்கை வீதங்களை 2018 ஓகத்தில் அதிகரித்திருந்தது. எனினும், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான பிரிட்டனின் விலகலுடன் தொடர்புடைய பதற்றத்தின் தீவிரத்தன்மை என்பவற்றுடன் இணைந்தான கட்டுப்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் உலகப் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் காரணமாக இங்கிலாந்து வங்கியானது அதிகரித்தவகையில் அமைதியாக இருந்தது. அதிகரிக்கும் பணவீக்க உத்வேகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வு என்பன பரந்தளவில் சமமானதாக காணப்பட்டதனால் ஐரோப்பிய மத்திய வங்கி அதனது கணியம்சார் இலகுபடுத்தல் நடவடிக்கைகளை படிப்படியாக முடிவுக்கு கொண்டுவந்தது. அதற்கிணங்க, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான பிரிட்டனின் விலகல் தொடர்பான இன்னல்கள் மற்றும் அதிகரித்த வர்த்தக பதற்றங்களின் காரணமாக ஏற்பட்ட அதிகரித்த உலக இடர்பாடுகள் காணப்பட்டமைக்கிடையில் ஐரோப்பிய மத்திய வங்கியானது அதனது நாணயக்கொள்கை தொடர்பில் தளர்த்தப்பட்ட நிலையினை தொடர்ந்திருந்ததுடன் 2018இன் இறுதியில் தேறிய சொத்துக் கொள்வனவானது முடிவுறுத்தப்பட்டது. பணவீக்க இலக்கிடலின் அடைவு தொடர்பில் சிறிதளவான வெற்றியை அனுபவித்திருந்த யப்பான் வங்கியானது 2018 காலப்பகுதியில் அதனது தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினை தொடர்ந்திருந்தது. அதேவேளை, தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் முக்கிய முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகள் மற்றும் தொடர்ச்சியான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் அதேபோன்று அதிகரித்துச் செல்லும் வர்த்தக பதற்றங்கள் என்பவற்றின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்தன. இத்தகைய பொருளாதார சிக்கலுக்கு பதிலிறுத்தும் வகையில் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் பல்வேறுபட்ட மத்திய வங்கிகள் வட்டிவீதங்களை அதிகரித்திருந்ததுடன் இந்திய றிசேர்வ்

அட்டவணை 1.4

### உலக பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)

| விடயம் | 2017 | 2018 | 2019 (தற்) | 2020 (தற்) |
|---|---|---|---|---|
| **உலக வெளியீடு** | **3.8** | **3.7** | **3.5** | **3.6** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 2.4 | 2.3 | 2.0 | 1.7 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.2 | 2.9 | 2.5 | 1.8 |
| யூரோ பகுதி | 2.4 | 1.8 | 1.6 | 1.7 |
| ஐக்கிய இராச்சியம் | 1.8 | 1.4 | 1.5 | 1.6 |
| யப்பான் | 1.9 | 0.9 | 1.1 | 0.5 |
| தோற்றம்பெற்று வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 4.7 | 4.6 | 4.5 | 4.9 |
| தோற்றம்பெற்று வரும் அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 6.5 | 6.5 | 6.3 | 6.4 |
| சீனா | 6.9 | 6.6 | 6.2 | 6.2 |
| இந்தியா | 6.7 | 7.3 | 7.5 | 7.7 |
| **உலக வர்த்தக அளவு** | **5.3** | **4.0** | **4.0** | **4.0** |
| **(பொருட்கள் மற்றும் பணிகள்)** | | | | |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.7 | 2.0 | 1.7 | 2.0 |
| தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 4.3 | 4.9 | 5.1 | 4.6 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ.) | | | | |
| எண்ணெய் | 23.3 | 29.9 | -14.1 | -0.4 |
| எரிபொருள் அல்லாதவை | 6.4 | 1.9 | -2.7 | 1.2 |
| **ஐ.அ.டொ வைப்புக்கள் மீதான ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்)** | **1.5** | **2.5** | **3.2** | **3.8** |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்

*மூலம் :* உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (சனவரி 2019), ப.நா.நிதியம்

வங்கியும் 2018 காலப்பகுதியில் இரண்டு தடவைகள் அதனது வட்டிவீதங்களை குறைத்ததுடன் தனது கொள்கை வட்டிவீதங்களை அதன் பின்னர் 2019இன் ஆரம்பப் பகுதியில் மீள்திரும்பச் செய்திருந்தது. 2018 காலப்பகுதியில் குறைந்தளவான பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீட்டாளர் நம்பகத்தன்மை மற்றும் நிதியியல் உறுதிப்பாடு தொடர்பில் அதிகரித்த இடர்பாடுகள் என்பன சீனா தனது இறை மற்றும் நாணயக் கொள்கையை தளர்த்துவதற்கு தேவைப்படுத்தியிருந்தன. உலகப்பொருளாதார மற்றும் நிதிச்சந்தைகளின் அபிவிருத்தி மற்றும் உள்நாட்டு தாக்குபிடிக்கும் தன்மை என்பவற்றின் காரணமாக தோற்றம் பெற்றுவரும் பல்வேறுபட்ட சந்தைப் பொருளாதாரங்களின் நாணயங்கள் 2018 காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலரிற்கு எதிராக கணிசமானளவு தேய்வடைந்திருந்தன.

**உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் 2019 சனவரிக்கான இற்றைப்படுத்தலில் குறித்துக்காட்டப்பட்டவாறு உலகப் பொருளாதார வளர்ச்சிக்கான இடர்நேர்வின் சமனிலையானது கீழ்நோக்கி சாய்ந்திருந்ததுடன் முன்னோக்கிச் செல்கையில் உலகப் பொருளாதாரத்தின் சில மெதுவடைவுத் தன்மையின் சாத்தியப்பாட்டை வெளிக்காட்டியிருந்தது.** சாதகமான பொருளாதார தோற்றப்பாடு, வலுவான தொழிற்சந்தை மற்றும் அதனைத் தொடர்ந்தான கேள்வியின் அதிகரித்த உற்சாகம் என்பவற்றிலிருந்தான நியாயமற்ற பணவீக்க அழுத்தங்களை கட்டுப்படுத்துவதற்கு பெரும்பாலான முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்கள் 2018 காலப்பகுதியில் தமது நாணயக்கொள்கை இறுக்கப்படுத்துவதற்கு பல்வேறுப்பட்ட வழிமுறைகளை எடுத்திருந்தன. எனினும், உலக மற்றும் உள்நாட்டு பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகளுடனான அதிகரித்த நிச்சயமற்ற தன்மை மற்றும் பணவீக்க அழுத்தங்கள் ஓரளவிற்கு முடக்கப்பட்டிருந்ததுடன் முக்கிய மத்திய வங்கிகளின் கொள்கை நிலைப்பாடு 2019இன் ஆரம்பத்திலிருந்து அதிகரித்த அளவில் தளர்த்தப்பட்டிருந்தது. இருப்பினும், உலகப் பொருளாதார வளர்ச்சியின் வாய்ப்புக்களை நலிவுறச் செய்யக்கூடிய பல்வேறுபட்ட இடர்நேர்வுகள் தொடர்ந்து காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்கா - சீனா என்பவற்றுக்கிடையிலான தொடர்ச்சியான வர்த்தகப் பதற்றங்கள் பொருளாதாரங்களுக்கிடையே அதிகரித்த கொள்கை நிச்சயமற்ற தன்மையை கொண்டுவரக்கூடுமென்பதுடன் இது உலக வர்த்தகத்தினை கட்டுப்படுத்தி அதனூடாக உலக வளர்ச்சி வாய்ப்புக்களை பலவீனப்படுத்தக் கூடும். மேலும், சீனப்பொருளாதாரத்தின் மேலதிக மெதுவடைவானது அவற்றின் இறை மற்றும் நாணய ஊக்கப்படுத்தலை தேவைப்படுத்தியுள்ளதுடன் இதனை நடைமுறைப்படுத்த தவறும் பட்சத்தில் தற்போது இடம்பெற்றுவருகின்ற சரிவு நிலையானது பொருளாதாரத்தின் அதிகரித்த பாதிக்கக்கூடிய தன்மையை கொண்டுவரக்கூடும். இது பண்டங்களுக்கான கேள்வியை கட்டுப்படுத்துவதுடன் விலைகள் மீதான வீழ்ச்சிக்கு இட்டுச்சென்று பரந்தளவில் பண்டங்களை ஏற்றுமதி செய்யும் பொருளாதாரங்கள் மற்றும் உலகப் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை பாதிக்கக்கூடும். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான பிரிட்டனின் விலகலுடன் தொடர்புடைய தற்போதைய நிச்சயமற்ற தன்மை ஐக்கிய இராச்சியம், யூரோ வலயம் மற்றும் ஏனைய பிராந்திய பொருளாதாரங்களின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை தாமதப்படுத்தக்கூடும். அதேவேளை, குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் நிலக்கீழ் எண்ணெய் உற்பத்தி மற்றும் பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கிடையேயான குறைந்தளவான ஒத்துழைப்பு என்பவற்றின் காரணமாக ஏற்படக்கூடிய சாத்தியமான நிரம்பல் தேக்கம் என்பவற்றின் காரணமாக எண்ணெய் விலைகள் குறைந்தளவில் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மெதுவான எண்ணெய் விலைகள் உலகப் பணவீக்க அழுத்தங்களைக் குறைவடையச்செய்யுமென எதிர்பார்க்கப்பட்டாலும் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் பொருளாதாரங்கள் பாதகமாக பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை எண்ணெய் உற்பத்தி செய்யும் கூட்டுத்தாபனங்கள் அவற்றின் இலாபங்கள் தொடர்பில் ஒரு மந்தப்போக்கினை அனுபவிக்கக்கூடும்.

**உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார சூழலில் அதிகரித்துச் செல்லும் நிச்சயமற்றதன்மை இலங்கை பொருளாதாரத்தின் மீது கணிசமான சவால்களை ஏற்படுத்தியுள்ளதுடன் உறுதிப்பாட்டை பேணுகின்ற அதேவேளை உள்நாட்டு பொருளாதார வளர்ச்சி முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு நேரகாலத்துடனானதும் சாத்தியமானதுமான கொள்கை வழிமுறைகளை அமுல்படுத்த வேண்டியதை அவசியப்படுத்தியிருந்தது.** பலவீனமான பொருளாதார தோற்றப்பாடானது கட்டுப்படுத்தப்பட்ட உலக கேள்வியை வெளிப்படுத்துவதுடன் இலங்கையின் வர்த்தகத்தை 2019 காலப்பகுதியில் பாதிக்கக்கூடும். மேலும், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா அதேபோன்று ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பிய வலயம் என்பவற்றுக்கிடையேயான அதிகரித்து செல்லும் வர்த்தக பதற்றங்கள் இத்தாக்கத்தை மேலும் அதிகரித்ததுடன் நாட்டின் சென்மதி நிலுவையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எனினும், உள்நாட்டு கேள்வியை அதிகரிக்கும் நோக்கம் முக்கிய பொருளாதாரங்களினால் அதிகரித்த வகையில் பின்பற்றப்படும். தளர்வுடைய நாணயக்கொள்கைகளுடன் இத்தாக்கமானது ஓரளவிற்கு இலகுபடுத்தப்படும். இருப்பினும், உலக சந்தையில் வட்டிவீதங்களில் ஏற்படும் எந்தவொரு அதிகரிப்பும் அரசாங்கம் மற்றும் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றின் படுகடன் பணிக்கொடுப்பனவுகளை அதிகரிக்கக்கூடுமென்பதுடன் நாட்டின் பெருமளவான நிதியியல் உறுதிப்பாடின்மைகளும் பலவீனமான இடர்நேர்வு தோற்றப்பாட்டிற்கும் இட்டுச்செல்லக்கூடும். எனவே, வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகளின் காத்திரமான ஒன்று சேகரிப்பும் வெளிநாட்டுப் படுகடனின் கவனமான முகாமைத்துவமும் முன்னோக்கிப் பார்க்கையில்

1

அத்தியாவசியமானதாகும். உலக எண்ணெய் விலைகள் தற்போதைய கட்டுப்படுத்தப்பட்ட மட்டத்தில் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதனால் 2019 காலப்பகுதியில் உள்நாட்டு பணவீக்கம் மீதான அவற்றின் தாக்கம் குறைந்தளவில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.4 நடுத்தரகால பேரண்டப்பொருளாதார தோற்றப்பாடு

**அண்மைய வருடங்களில் குறைந்தளவான வளர்ச்சி உத்வேகத்தை கொண்டிருந்த பொருளாதாரமானது நடுத்தர காலத்தில் படிப்படியாக முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி 2018இல் 3.2 சதவீதம் என்ற மெதுவான மட்டத்தில் காணப்பட்ட உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2023ஆம் ஆண்டளவில் அண்ணளவாக 5.0 சதவீதத்திற்கு படிப்படியாக முன்னேற்றமடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிப் பாதையின் அடைவானது பொதுக்கொள்கை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வளர்ச்சிக் கட்டத்தின் வெற்றிகரமான அமுல்படுத்தல் அவற்றுடன் இணைந்ததான தனியார் துறையின் உயர்ந்தளவான பங்குபற்றல் என்பவற்றில் தங்கியுள்ளது. அடிக்கடி திருத்தங்களுக்கு உள்ளாக்கப்படாத சீரான கொள்கை வழிமுறைகளின் அமுலாக்கமானது பொருளாதாரத்தின் அதிக உற்பத்தித்திறன் வாய்ந்த துறைகளின் மீது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்தான, முதலீடுகளை கவருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய முதலீடுகளுடன், மிதமான மட்டத்தில் காணப்பட்ட தயாரிப்புத்துறையின் வெளியீடானது உள்நாட்டுச் சந்தையில் காணப்படும் கேள்வியை பூர்த்தி செய்யக்கூடிய உயர் பெறுமதிசேர் பண்டங்களை நோக்கி படிப்படியாக நகர்வடையுமென்பதுடன் வர்த்தக உடன்படிக்கைகளினை வினைத்திறனாக பயன்படுத்துவதன் ஊடாக பன்னாட்டு சந்தைகளை அணுகமுடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, பணிகள் துறையிலிருந்தான பெறுமதி சேர் பங்களிப்பானது அறிவினை அடிப்படையாகக் கொண்ட பணிகளின் விரிவாக்கத்துடன் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வர்த்தகரீதியில் ஆற்றல்வாய்ந்த வேளாண்மைத்துறையை அபிவிருத்திசெய்வதனை நோக்கியதான முயற்சிகளும் பொருளாதாரத்தில் வளங்களின் வினைத்திறனான ஒதுக்கீட்டிற்கு ஆதரவளிக்கும் மேலும், பொருளாதார உட்கட்டமைப்பு மீதான தொடர்ச்சியான முதலீடுகள் நடுத்தரகாலத்தில் வளர்ச்சிக்கான உந்துதலை வழங்கக்கூடும். இது (நாட்டிற்கான உற்பத்தி இயலளவிற்கு ஆதரவளிக்கும் நோக்கில்) வலு, பொதுப்போக்குவரத்து, மற்றும் வீதி அபிவிருத்தி போன்ற துறைகள் மீதான பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை உள்ளடக்குகின்றது. இதற்கு மேலாக, கொழும்பு துறைமுக நகர் செயற்றிட்டம் மற்றும் மேற்கு பிராந்திய பெருநகர் முதன்மைத்திட்டம் என்பன தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் வெற்றிகரமான நிறைவும் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வபிவிருத்திகளுடன் இணைந்து அதிகரித்த திறன்வாய்ந்த தொழிற்படை தொடர்பில் தோற்றம் பெற்றுவரும் துறைகளில் இருந்தான கேள்வியை பூர்த்திச் செய்யும் வகையில் நாட்டின் கல்வித்தரம் முன்னேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், ஆய்வு மற்றும் புத்தாக்கம் என்பவற்றை மேம்படுத்தும் வகையில் உயர் கல்வித்துறையின் பலப்படுத்தலும் உயர்ந்தளவான வளர்ச்சிப் பாதையை நிலைப்படுத்துவதை நோக்கி பங்களிப்பு செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பினை அதிகரிக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படும் வழிமுறைகளும் வளர்ச்சித் தூண்டல்களுக்கு ஆதரவளிக்கும் இவ்வபிவிருத்திகள் மற்றும் இவற்றுடன் இணைந்து நிலையான பேரண்டப் பொருளாதார சூழலை பேணும் நோக்கில் மேற்கொள்ளப்படும் கொள்கைகள் இலங்கையின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 2023 ஆண்டளவில் ஐ.அ.டொலர் 5,000இற்கு மேலாக முன்னேற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**2018இன் பிற்பகுதியிலிருந்து மேம்பட்டுக் காணப்பட்ட வெளிநாட்டுத் துறையின் தோற்றப்பாடானது நடுத்தர காலத்தில் சாத்தியமான உள்ளார்ந்த கீழ்நோக்கிய இடர்நேர்வுகளுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் மீளெழுச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.** நெகிழ்ச்சி வாய்ந்ததும், போட்டித்தன்மை மிக்கதுமான செலாவணி வீதம், இலங்கையின் ஏற்றுமதி நாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி, இருபுடை வர்த்தக உடன்படிக்கைகள் நிறுவப்பட்டமை, தேசிய ஏற்றுமதி உபாயம் நடைமுறைப்படுத்தப்பட்டமை என்பவற்றின் ஆதரவால் ஏற்றுமதிகள் முன்னேற்றமடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. நடுத்தர கால வளர்ச்சி உத்வேகத்தின் ஆதரவால் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் அதிகளவான இறக்குமதியினால் நடுத்தரகாலத்தில் இறக்குமதிகளும் மிதமானளவில் அதிகரிக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, குறிப்பாக சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், வியாபாரச் செயன்முறைகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்பவற்றிலான உயர்ந்த உட்பாய்ச்சல்களின் மூலம் பணிகள் கணக்கின் மிகை முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகள் வருகைகளில் எறிவு செய்யப்பட்டுள்ள அதிகரிப்பு, புதிய நட்சத்திர வகுப்பு விடுதிகளின் அபிவிருத்தி, தீவிரமடைந்த ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் என்பவற்றினால் நடுத்தர காலத்தில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வலுவடைந்த வெளிநாட்டு வர்த்தகம், அம்பாந்தோட்டை துறைமுகத்தின் அதிகரித்த அபிவிருத்தி மற்றும் கொழும்புத் துறைமுக நடவடிக்கைகளில் மேலும் ஏற்பட்ட வளர்ச்சி என்பவற்றின் மூலம் போக்குவரத்திலிருந்தான

அட்டவணை 1.5

**நடுத்தரகால பேரண்டப்பொருளாதாரக் கட்டமைப்பு (அ)**

| குறிகாட்டி | அலகு | 2017 (ஆ) | 2018 (இ) | எறிவுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
| **உண்மைத்துறை (ஈ)** | | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 3.4 (இ) | 3.2 | 4.0 | 4.5 | 5.0 | 5.0 | 5.0 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 13,418 (இ) | 14,450 | 15,855 | 17,389 | 19,170 | 21,131 | 23,297 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 4,104 (இ)(ஊ) | 4,102 | 4,001 | 4,262 | 4,530 | 4,816 | 5,122 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 28.8 (இ)(ஊ) | 28.6 | 29.1 | 29.6 | 30.1 | 30.6 | 31.1 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 21.7 (இ)(ஊ) | 21.2 | 22.9 | 23.9 | 25.1 | 26.7 | 28.4 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 26.2 (இ)(ஊ) | 25.4 | 26.8 | 27.5 | 28.1 | 28.8 | 30.1 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | | | |
| வர்த்தக இடைவெளி (ஈ) | மொ.உ.உ. இன் % | -10.9 | -11.6 | -11.6 | -11.5 | -11.2 | -10.6 | -9.9 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.மில் | 11,360 | 11,890 | 12,935 | 14,075 | 15,390 | 16,875 | 18,557 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ.மில் | 20,980 | 22,233 | 23,070 | 24,825 | 26,620 | 28,250 | 29,891 |
| நடைமுறை கணக்கு நிலுவை (ஈ) | மொ.உ.உ. இன் % | -2.6 | -3.2 | -2.3 | -2.1 | -2.0 | -1.8 | -1.0 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 4.6 | 3.7 | 4.1 | 4.3 | 4.5 | 4.7 | 4.8 |
| **இறைச்துறை (ஈ) (எ)** | | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 13.7 (ஏ) | 13.4 | 15.1 | 16.1 | 16.8 | 17.0 | 17.5 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ. இன் % | 19.2 (ஏ) | 18.6 | 19.5 | 19.6 | 20.3 | 20.5 | 20.7 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.7 (ஏ) | -1.2 | 0.2 | 1.1 | 1.7 | 1.8 | 2.2 |
| முதன்மை நிலுவை | மொ.உ.உ. இன் % | 0.02 (ஏ) | 0.6 | 1.5 | 2.4 | 2.5 | 2.5 | 2.8 |
| திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை | மொ.உ.உ. இன் % | -5.5 (ஏ) | -5.3 | -4.4 | -3.5 | -3.5 | -3.5 | -3.2 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 76.9 (ஏ) | 82.9 | 82.6 | 81.0 | 75.0 | 72.0 | 70.0 |
| **நாணயத் துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஐ) | % | 16.7 | 13.0 | 12.0 | 12.5 | 12.5 | 12.5 | 12.5 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஐ) | % | 14.7 | 15.9 | 13.5 | 13.3 | 13.7 | 13.6 | 13.5 |
| ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் (ஒ) | % | 6.6 | 4.3 | 4.8 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 |

(அ) 2019 மார்ச்சு வரை கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2010 தள ஆண்டை அடிப்படையாகக்) கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது
(உ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(ஊ) 2017இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு, உள்நாட்டு சேமிப்புக்கள் மற்றும் தேசிய சேமிப்புக்கள் என்பனவற்றை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் முறையே 36.5%, 29.3% மற்றும் 33.9 % ஆக திருத்தியது.
(எ) நடுத்தர கால இறைக் கட்டமைப்பானது 2019இன் மூன்றாம் காலாண்டில் திருத்தப்படும்
(ஏ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 மார்ச்சு 19இல் தரப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பதி மதிப்பீடுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டவை 2017இற்கான பயன்படுத்தப்பட்டுள்ளது.
(ஐ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஒ) கொ.நு.வி.சு (2013=100) அடிப்படையிலானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

வருவாய்கள் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட ஏற்றுமதிகள் தொடர்ந்தும் அவற்றின் வலிமையான வளர்ச்சியை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய கிழக்கில் நிலவிய சாதகமற்ற பூகோள அரசியல் அபிவிருத்திகளுடன் இணைந்து தேர்ச்சியற்ற மற்றும் பகுதியளவில் தேர்ச்சிபெற்ற புலம்பெயர்வுகளை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்கில் வழங்கப்பட்ட மேம்பட்ட உள்நாட்டுத் தொழில்வாய்ப்புக்கள் மற்றும் முன்னெடுப்புக்களால் ஊழியர் புலம்பெயர்வில் ஏற்பட்ட சாத்தியமான மெதுவடைவின் காரணமாக நடுத்தர காலத்தில் தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்தும் தற்போதைய மட்டங்களிலேயே காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை அதிகரித்துச்செல்லும் உலகளாவிய வட்டி வீதங்களுக்கு மத்தியில் உயர்ந்தளவான வட்டிக் கொடுப்பனவுகளுடன் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையானது நடுத்தர காலத்தில் விரிவாக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், இவ்வபிவிருத்திகளின் இணைந்த தாக்கமானது நிலையான மட்டத்தில் முன்னேற்றமடைவதற்கு இட்டுச்செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, குறிப்பாக கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம் என்பவற்றில் மேற்கொள்ளப்படும் நீண்டகால அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மீதான உயர்ந்தளவான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் அதேபோன்று அரசாங்கத்தின் தனியார் அரச பங்குடமை முயற்சிகளின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பவற்றின் காரணமாக சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கானது முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், சர்வதேச சந்தைகளில் வட்டிவீத அதிகரிப்பின் தாமதத்துடன் கொழும்புப் பங்குப்பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தை என்பவற்றிற்கான வெளிநாட்டு முதலீடுகளும் நிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலாக, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவாக்கமும் வெளிநாட்டுத்துறைத் தோற்றப்பாட்டை முன்னேற்றுவதை நோக்கி பங்களிப்பு செய்வதுடன் அதனூடாக முதலீட்டாளர் மனோபாவத்தை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையுடனான எதிர்பார்க்கப்பட்ட

1

சீராக்கங்கள் மற்றும் படுகடனுடன் தொடர்புடைய உட்பாய்ச்சல்கள் மீது தங்கியிருத்தல் தொடர்பில் படிப்படியான வீழ்ச்சி என்பவற்றுக்கு மத்தியில் எதிர்பார்க்கப்பட்ட நெகிழ்ச்சித்தன்மையுடைய பணவீக்க இலக்கிடல் முறைமைக்குள் நெகிழ்ச்சித்தன்மையானதும் போட்டித்தன்மை வாய்ந்ததுமான செலாவணி வீதத்தைப் பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது பன்னாட்டு ஒதுக்கினை வலுப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்கின்ற அதேவேளை நடுத்தர காலத்தில் ஒதுக்குப் போதுமாந்தன்மையானது திருப்தியளிக்கக்கூடிய மட்டத்தில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 2018 ஆம் ஆண்டுக்கான 08ஆம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவ சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் நடுத்தரகாலப் படுகடன் முகாமைத்துவ தந்திரோபாயம் என்பவற்றின் வெற்றிகரமான அமுலாக்கமானது நாட்டிற்கான நீண்டகால பன்னாட்டு முறிகளின் முதிர்வினை உள்ளடக்கியதும் வெளிநாட்டு நாணயப் படுகடன் பணிக்கொடுப்பனவுகளிலிருந்து தோற்றம் பெறுகின்ற மீள்நிதியிடல் தேவைப்பாட்டுடன் தொடர்புடைய சாத்தியமான பாதிப்புக்களுக்கு தீர்வாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையிலான திரவத்தன்மை தொடர்பில் எதிர்பார்க்கப்படுகின்ற படிப்படியான முன்னேற்றம் காரணமாக வணிக வங்கிகளின் நிதியியல் நிலைமையும் பலப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**அரசாங்கத்தின் இறைத் தந்திரோபாயமானது வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி வழிமுறைகளின் தொடர்ச்சியுடன் நடுத்தரகாலத்தில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் அதனூடாக நிலைத்து நிற்கும் மட்டத்திற்கு வெளிநின்ற படுகடனை குறைத்தல் என்பவற்றை முன்னுரிமையாக கொண்டிருந்தது.** வரி அடித்தளத்தை விரிவாக்குதல், வரிச்சட்டங்களை எளிமையாக்கல் மற்றும் வரி நிர்வாகத்தை முன்னேற்றல் போன்ற கொள்கை வழிமுறைகளால் உதவப்பட்டு 2023 ஆண்டளவில் அரசாங்கத்தின் வருமானமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அண்ணளவாக 17 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அரசாங்கம் நடுத்தர காலத்தில் பொது நிதியியல் முகாமைத்துவம் தொடர்பில் உச்சவரம்புகளை அமுல்படுத்தல் மற்றும் வினைத்திறனை முன்னேற்றல் என்பவற்றின் ஊடாக செலவினத்தை கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது. நலக்கவனிப்பு நன்மைகள் சபையினூடாக முன்னேற்றப்பட்ட இலக்கிடலுடனான சமூக பாதுகாப்பு வலையமைப்பின் தொடர்ச்சி, நிகழத்தக்க வரவுசெலவுத்திட்டத்தின் அமுலாக்கம் மற்றும் இயற்கை அனர்த்தம் மீதான இறைச்செலவுகளை முகாமை செய்தல் தொடர்பில் காப்பீட்டுத் திட்டங்களை பலப்படுத்தல் என்பவற்றுடன் மீண்டெழும் செலவினத்தை கட்டுப்படுத்துதல் தொடர்பாக தற்போது இடம்பெற்றுவரும் முன்னேற்றங்கள் எதிர்பார்க்கப்பட்ட செலவின முகாமைத்துவத்திற்கு ஆதரவளிக்கக்கூடும். இதன் விளைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது 2020இல் 3.5 சதவீதமாகவும் 2023இல் 3.2 சதவீதமாகவும் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னேற்றமடைந்த அரசிறை மற்றும் செலவு முகாமைத்துவம் என்பவற்றால் உதவப்பட்டு அரசாங்கத்தின் இறைத் தந்திரோபாயமானது நடுத்தர காலத்தில் முதன்மை நிலுவையைப் பலப்படுத்தக்கூடும். எனவே 2023ஆம் ஆண்டளவில் அரசாங்கத்தின் முதன்மை நிலுவையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.8 சதவீதம் கொண்ட மிகையினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 2019இல் நடைமுறைக் கணக்கும் ஒரு மிகையினைப் பதிவுசெய்வதற்கும் அதன் பின்னர் தொடர்ந்தும் மிகையாகவிருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் முதன்மை மீதி என்பவற்றில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மத்திய அரச படுகடன் விகிதமானது 2023இல் அண்ணளவாக 70 சதவீதமாக காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலே குறிப்பிட்ட நடுத்தரகால இலக்குகளின் அடைவானது சவால்மிக்கதொன்றாகக் காணப்படுவதுடன் அதனது வெற்றிகரமான அமுல்படுத்தலுக்கு அரசாங்கத்தின் அனைத்து ஆர்வலர்களிடம் இருந்தான பலமான அர்ப்பணிப்பு மற்றும் தியாகம் என்பன தேவைப்படுகின்றன. அதேவேளை 2018ஆம் ஆண்டின் 08ஈம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் மற்றும் நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ தந்திரோபாயம் என்பவற்றில் காணப்படும் ஏற்பாடுகளின் வெற்றிகரமான அமுலாக்கமானது நடுத்தர காலத்தில் படுகடன் முகாமைத்துவ தந்திரோபாயத்தினை மேலும் முன்னேற்றும் மற்றும் பலப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட இறைத்திரட்சியின் கட்டியெழுப்பலுடன் அரசாங்கமானது பொது முதலீட்டை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.5 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதுடன் அதனூடாக பொருளாதாரத்தின் நடுத்தர கால வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு ஆதரவளிக்கவுள்ளது. மேலும், 2003ஆம் ஆண்டுக்கான இலக்கம் 3 இறை முகாமைத்துவம் (பொறுப்பு) சட்டத்தின் மீதான பொருத்தமான அமுலாக்கம் என்பன முன்னேற்றமடைந்த இறை ஒழுங்குடன் இறைத்துறை தொடர்பான எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்களின் அடைவினை நிச்சயப்படுத்தும்.

**எதிர்பார்க்கப்பட்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் காலப்பகுதியின் கீழ் நடுத்தர காலப்பகுதியில் பணவீக்க எதிர்பார்க்கைகள் நடு ஒற்றை இலக்க மட்டங்களுக்குள் உறுதிப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புள்ளது.** உலகளாவிய மற்றும் உள்நாட்டு பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகளிலிருந்து உருவாகக்கூடிய பணவீக்க இடர்நேர்வுகளுக்கு மத்தியில் அதிகரித்த முன்னோக்கிய மற்றும் தரவுகளால் தூண்டப்பட்ட கட்டமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நாணயக்கொள்கைத் தீர்மானங்கள் மொத்தக் கேள்வி நிலைமைகளை பொருத்தமான மட்டங்களில் பேணுமென

எதிர்பார்க்கப்படுகின்றது. உலகப் பக்கத்தில் நோக்குகின்ற போது குறிப்பாக வலு விலைகளுடன் தொடர்புடைய நிரம்பல்பக்க தடைகள் காலத்திற்கு காலம் பணவீக்கத்தின் மீது அழுத்தங்களை வழங்கக்கூடிய அதேவேளை உள்நாட்டு நிரம்பல் நிலைமைகளின் முன்னேற்றம் மற்றும் அத்தகைய பிரச்சினைகளை முன்கூட்டியே தீர்க்கக்கூடிய வகையில் மேற்கொள்ளவேண்டிய குறுங்கால இறை சீர்த்திருத்தங்கள் காணப்படாவிடின் உள்நாட்டில் காணப்படும் உணவுப்பொருட்கள் நிரம்பலின் தளம்பல் தன்மையானது பணவீக்க இலக்கிடலினை அடைவது தொடர்பில் அச்சுறுத்தலை வழங்கக்கூடும். அதேவேளை, பணவீக்கத்தை விரும்பிய மட்டத்தில் நிலைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இறைத்திரட்சியை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். நாணயக் கொள்கை தீர்மானங்கள் கேள்வியினால் தூண்டப்பட்ட பணவீக்கம் மற்றும் வெளியீட்டு இடைவெளி என்பவற்றுக்கு பதிலிறுத்துமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை நெகிழ்ச்சித்தன்மையான நாணயமாற்றுவீத கொள்கையானது நாணயமாற்றுவீதம் சந்தை அடிப்படைகளினால் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கின்றதுடன் வெளிநாட்டு அதிர்வுகளின் தாக்கத்தை குறைப்பதற்கான முதல் வரிசை பாதுகாப்பு அரணாக செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மத்திய வங்கியானது எதிர்பார்க்கப்படுகின்ற பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கக்கூடிய வகையில் போதுமான பணம் மற்றும் கொடுகடன் பாய்ச்சல்கள் என்பவற்றை உறுதிப்படுத்தும், அதற்கிணங்க, நடுத்தர காலத்தில் விரிந்த பணநிரம்பல் (ஆ2டி) மற்றும் தனியார் துறைக்கான கொடுகடன் என்பன ஆண்டுதோறும் முறையே அண்ணளவாக 12.5 சதவீதம் மற்றும் 13.5 சதவீதமாக வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.

## 1.5 பிரச்சினைகளும் கொள்கைகளும்

**கடந்த பல ஆண்டுகளாக நாட்டின் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை பேணிக்கொள்வதற்கான முயற்சிகளுக்கு மத்தியில் அத்தகைய தேவைப்படுகின்ற சீர்திருத்தங்கள் பிற்போடப்பட்டமை இலங்கைப் பொருளாதாரத்தினை மிதமான வளர்ச்சிப் பாதையில் தள்ளியிருக்கின்றது.** ஏறத்தாழ ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இலங்கை நடுத்தர வருமான மட்டத்திற்கு உயர்ந்ததுடன் நடுத்தர வருமானப் பொறி என அழைக்கப்படுகின்ற நிலையினைத் தவிர்ப்பதன் மூலம் உயர்ந்த வருமான அந்தஸ்தினை நோக்கிய நகர்விற்கு முக்கிய விளைவுகளைக் கொண்ட கொள்கைச் சீராக்கங்களை வேண்டி நிற்கின்றது. எனினும், வளர்ச்சிக்கானத் தடைகளைத் தீர்த்துக்கொள்ளல் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு, நேரடி முதலீடுகளைக் கவருதல் போன்ற விடயங்களில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தல், வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைகளையும் படுகடன் மட்டங்களையும் குறைத்தல் காரணிச் சந்தைகளைச் சீர்திருத்தம் செய்தல், பொது நிர்வாகத்தினை வலுப்படுத்தல் மற்றும் சட்டவிதிகளை உறுதிப்படுத்தல் போன்றவற்றிலான தாமதங்கள் இலங்கையின் வளர்ச்சி மந்தநிலைக்குப் பங்களிப்புச் செய்துள்ள வேளையில் சக பொருளாதாரங்கள் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் சீர்திருத்தங்களின் விளைவாக விரைவாக முன்னேற்றமடைந்துள்ளன. எனவே, இலங்கையை ஒரு உயர்ந்த வருமானப் பொருளாதாரமாக வெற்றிகொள்வதற்கும் நலன்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் உற்பத்தித்திறனையும் பொருளாதாரத்தின் செயற்றிறனையும் மையமாகக் கொண்டு தேவைப்படுகின்ற அமைப்பியல் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவதன் மூலம் தொடர்ச்சியான தாழ்ந்த பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணங்களை நிவர்த்திசெய்வது இன்றியமையாததாகும். குடித்தொகையிலிருந்தான கன்மைகளின் முடிவுறுத்தல் இதற்கான தேவையினை மீளவலியுறுத்துகின்றது.

**இலங்கை போதுமானளவு இயற்கை வளங்களிற்கு உரித்து உடையாதாகவிருந்து செயற்றிறனாகப் பயன்படுத்துதலினால் உயர்ந்த பொருளாதார வளர்ச்சிப் பாதைக்கு ஆதரவளிப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றலினைக் கொண்டுள்ளது.** இந்து சமுத்திரத்தின் ஒரு தீவு நாடாக இலங்கை எண்ணற்ற சமுத்திர வளங்களினைக் கொண்டுள்ளது. எனினும், உள்ளூர் நுகர்வோர் இன்னமும் தகரத்தில் அடைத்த இறக்குமதி செய்யப்பட்ட மீனினை நுகர்வதுடன் இது மீன்பிடித் துறைக்கு ஆதரவளிக்க வேண்டியதன் வலுவான தேவையினைப் பிரதிபலிக்கின்றது. கடல் நீரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பொதுவான உப்பு கோஸ்டக் சோடா, குளோரின், ஹைரோகுளோரிக் அமில், சோடியம் காபனேட், சோடியம் பைகானனேட், வெளுக்கவைக்கும் தூள், பொலி வினில் குளோரைட் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பல கைத்தொழில் மூலம் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. எனினும், இலங்கை தற்பொழுது இத்தகைய மூலப்பொருட்களை இறக்குமதிச் செய்வதற்கு கணிசமானளவு வெளிநாட்டுச் செலாவணியினை செலவழிக்கின்றது. இலங்கை அதன் பரிமாணத்துடன் ஒப்பிடுமிடத்து நவீன தொழில்நுட்பங்களிற்கு இன்றியமையாத பல கனிப்பொருட்களைக் கொண்டுள்ளது. இலங்கையில் கனிப்பொருள் மணல் 1904இல் கண்டுபிடிக்கப்பட்டதுடன் கைத்தொழில் ஆரம்பம் 1950 இற்குப் பின்னோக்கியுள்ள போதிலும் ஆறு தசாப்தங்களாக இல்மனைட், உரூற்றைல், ஸிர்க்கோன் போன்ற வர்த்தக ரீதியாக ஆற்றல்மிக்க கனிப்பொருளுக்கு எவ்வித கணிசமான பெறுமதிகூட்டலும் இடம்பெறவில்லை. மேலும், வளமாக்கித் தயாரித்தலிலும் ஏனைய கைத்தொழில் உள்ளீடுகளிலும் பயன்படுத்தக்கூடிய எப்பாவலையிலுள்ள பொசுப்பேற்று வைப்புக் குறைப்பயன்பாட்டினைக் கொண்டுள்ளது. எனவே, ஏற்றுமதி வருவாய்களை மேம்படுத்துவதில் பங்களிப்புச் செய்யும் அதேவேளை புதிய தொழில்வாய்ப்புக்களையும் உருவாக்குவதனால் கனிப்பொருட்களின் பெறுமதி கூட்டலுக்கு வசதியளிக்கின்ற ஒன்றிணைந்த தேசிய கொள்கையினை நடைமுறைப்படுத்துவது ஒரு முன்னுரிமையாகவிருந்தது. இதற்கு மேலதிகமாக இலங்கையின் காரீயத்தினைப் பயன்படுத்தி சூரிய மின்கலங்கள், ஒளி உமிழ் இருமுனையக்

1

குமிழ்கள் (எல்.ஈ.டி), தொடுகைத்தட்டுகள் மற்றும் பற்றரிகள் போன்றவற்றின் உற்பத்திக்குப் பயன்படும் காரீயம் உற்பத்தி செய்வதற்கான உள்ளார்ந்த ஆற்றலினை முற்றுமுழுதாகப் பயன்படுத்துவதற்கான தற்பொழுது நடைபெற்றுவரும் முயற்சிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். மேலும், இலங்கையின் பெற்றோலியம் கண்டறிதல் 1960களின் பிற்பகுதியில் தொடங்கியதுடன் கடந்த அண்மைக்காலத்தில் பல்வேறு முன்னணி பன்னாட்டு பெற்றோலியக் கம்பனிகள் இலங்கையின் நீர்ப்பரப்பில் எண்ணெய் மற்றும் வாயுவைக் கண்டறிவதற்கான விருப்பத்தினைக் காட்டியுள்ளன. இறக்குமதி செய்யப்படுகின்ற பெற்றோலியத்தில் இலங்கையின் முற்றுமுழுதான தங்கியிருத்தல் மற்றும் இயற்கை வாயுவினை நோக்கிய இலங்கையின் வலுப்பொறிகளின் நகர்விற்கான அரசாங்கத்தின் திட்டம் என்பவற்றின் பின்னணியில் வர்த்தக ரீதியான ஆற்றல்வாய்ந்த பெற்றோலிய வைப்புக்களைக் கண்டுபிடிப்பதன் மூலமான நன்மைகள் அதனுடன் தொடர்புபட்ட செலவுகளை விட மிகவும் அதிகமாகவிருப்பதனால் எண்ணெய் மற்றும் வாயுவின் கண்டறிதல் முயற்சிகளினைத் தொடர்வது இன்றியமையாததாகும். மேலும், வளமான நீர்ப்பாசனப் பாரம்பரியத்தினால் உந்தப்பட்டு இலங்கைக்கு நீரியல் நாகரீகம் வரலாற்று ரீதியான கொடையாகவுள்ளது. உண்மையில் 'எலங்க கமன' அல்லது வரண்ட பிரதேசத்தில் நீர்வீழ்ச்சி - தாங்கி - கிராம முறைமை எனும் இலங்கையின் வேளாண்மை முறைமை 2018இல் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த வேளாண்மை பாரம்பரிய முறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த வளமான பாரம்பரியத்திற்கு புறம்பாக போதுமற்றதான நீர் வளங்களின் முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் தற்போதுள்ள ஒழுங்குவிதிகளினை நடைமுறைப்படுத்துவதிலான தாமதங்கள் போன்றவை உள்நாட்டு கழிவு நீர், கைத்தொழில் கழிவுகள் மற்றும் வேளாண்மை கழிவுகள் போன்றவற்றினாலான மாசடைதல், நிலக் கீழ் நீரின் உயிரியல் காரணங்களினாலான மாசடைதல் குறிப்பாக குழாய்க் கிணறுகளினூடாக நீரின் மிதமிஞ்சிய பயன்பாடு போன்றவற்றினால் நீர் வளங்கள் அருகிச் செல்லுதலும் தரங்குன்றுதலும் உள்ளடங்கலாக சிக்கலான பிரச்சனைகளுக்கு இட்டுச் சென்றுள்ளன. அரசாங்கத்தின் எண்ணற்ற முயற்சிகளுக்கு மத்தியில் கடந்த பல தசாப்தங்களாக நாட்டின் இயற்கை வளங்களின் காத்திரமான முகாமைத்துவத்தினை நோக்கி எந்தவொரு முன்னேற்றமுமின்றி அல்லது சிறிதளவு முன்னேற்றம் அடையப்பட்டள்ளது. இதன்படி, தனியார் துறையின் ஆதரவினையும் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்கு மையப்படுத்தப்பட்டதும், முன்னோக்கியதுமான கொள்கை முயற்சிகள் இலங்கையின் இயற்கை வளங்களிலிருந்து நிலைத்துநிற்கும் வகையில் முழு உள்ளார்ந்த ஆற்றலினை பயன்படுத்துவதில் இன்றியமையாததாகும்.

**அண்மைக் காலங்களில் சில உற்பத்திகள் தொடர்பிலான சில முன்னேற்றத்திற்கு புறம்பாக, இலங்கையின் பண்ட ஏற்றுமதித்துறை உள்ளகப் பொருளாதாரத்திலும் உலக வர்த்தகத்திலும் விரைவாக வீழ்ச்சியடைந்துவரும் அதன் பங்கினை நிவர்த்தி செய்வதற்கு சிறந்த முயற்சிகளை வேண்டிநிற்கின்றது.** பணிகளின் ஏற்றுமதி ஒரு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைக் காட்டிய போதிலும் பண்ட ஏற்றுமதிகளின் வளர்ச்சி கடந்த இரண்டு தசாப்த காலத்தில் கணிசமானளவு மெதுவடைந்தது. பண்ட ஏற்றுமதிகளின் இந்த மெதுவடைதல் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையினை விரிவடையச் செய்ததுடன் இந்தப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு வெளிநாட்டுக் கடன்பாடுகளில் அதிகளவிற்கு தங்கியிருப்பதற்கு நாட்டினைத் தேவைப்படுத்தியது. பண்ட ஏற்றுமதிகளின் மோசமான செயலாற்றத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் சந்தைப் பன்முகப்படுத்தல், போட்டித்தன்மை போதாமை, சில வேளைகளில் ஒருநிலைப்படுத்தப்படாத செலாவணி வீதம், உலகளாவிய மற்றும் பிராந்திய வழங்கல் சங்கிலியின் அணுகுதலைத் தடைசெய்கின்ற தீர்வைக்கு மேலதிகமாக விடுக்கப்படும் மற்றுமொரு தீர்வைகள், போதுமான புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின்மை அளவுச் சிக்கனத்தின் பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற பல்வேறு அமைப்பியல் பிரச்சினைகளினைக் காரணப்படுத்தக் கூடும். இந்தப் பின்னணியில் துறைகள் ஊக்கப்படுத்தப்பட வேண்டிய அதேவேளை, ஏற்றுமதி ஊக்குவிப்பு உபாயங்கள் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தின் மீது மையப்படுத்தப்பட வேண்டும். தென்கொரியா மற்றும் வியட்நாம் போன்ற பிராந்திய சகாக்கள் ஏற்றுமதி ஊக்குவிப்பினை நோக்கி ஒருமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறையினை பின்பற்றியதன் மூலம் ஏற்றுமதிகளில் கணிசமானதொரு உயர்வினை அடைந்து கொண்டுள்ளன. இந்த வகையில் ஏற்றுமதித் துறையில் அடையாளம் காணப்பட்ட சில பிரச்சினைகளை நிவர்த்தி செய்தவதற்கு பல்வேறு கொள்கை வழிமுறைகள் அரசாங்கத்தினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்தப் பொருளாதார சீர்திருத்தங்களை வலியுறுத்துகின்ற புதிய வர்த்தகக் கொள்கை மற்றும் தேசிய ஏற்றுமதி உபாயம் போன்றவை மிக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட திருப்புமுனையான வழிமுறைகளாகும். தேசிய வர்த்தகக் கொள்கை பொருத்தமான சட்டப் பொறிமுறைகள், நியமங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் காப்புவிதிகள் போன்றவற்றை உருவாக்குகின்ற அதேவேளையில் தீர்வைகள், தீர்வைக்கு மேலதிகமாக விதிக்கப்படும் மற்றமொரு தீர்வைகள், தீர்வையல்லாத் தடைகள் மற்றும் பணிகள் துறையின் தாராளமயமாக்கல் உள்ளடங்கலாக உள்நாட்டுக் கொள்கைச் சீர்திருத்தங்களினூடாக பண்டங்கள் மற்றும் பணிகளின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டது. உயர்ந்த ஏற்றுமதி வருவாய்களின் உருவாக்கம் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளையில் அதிகரிக்கின்ற வெளிநாட்டுப் பொறுப்புக்களுக்கெதிரான தாங்கிருப்பாக தொழிற்பாட்டு செலாவணி வீதத்தினை ஸ்திரப்படுத்துவதற்கு துணையளிப்பதுடன் நாட்டின் பொருளாதார தாக்குப்பிடிக்கும்


## சிறப்புக்குறிப்பு 02
## தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022

**ஏற்றுமதிகளுக்கான தேசிய உபாயமொன்றுக்கான அவசியம்**

வெளிநாட்டுப் படுகடனின் தீர்ப்பனவிற்கான இயலளவு உட்பட, சென்மதி நிலுவைகள், பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு என்பன உள்ளடங்கலான ஏற்றுமதிகள் பொருளாதாரமொன்றில் முக்கியமானதொரு பங்கினைவகிக்கின்றன. 1977இல் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட போது இலங்கை, ஏற்றுமதியினால் வழிநடத்தப்படும் வளர்ச்சி உபாயமொன்றினைப் பின்பற்றியது. எனினும், ஏற்றுமதி ஊக்குவிப்புக்களுக்காக தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு மத்தியிலும் நாடு ஏற்றுமதிகளில் நிலைத்துநிற்கும் வளர்ச்சியொன்றினை பேணமுடியாமல் இருந்து வருகின்றது. இலங்கையின் ஏற்றுமதிகள், மொ.உ.உற்பத்தியின் பங்கொன்றாக 2000ஆம் ஆண்டில் 33.3 சதவீதத்திலிருந்து 2018இல் 13.4 சதவீதத்திற்கு சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. உண்மையில், இலங்கையின் சராசரி ஏற்றுமதி வளர்ச்சியானது 1977-2000 ஆண்டு காலப்பகுதியில் 10.7 சதவீதத்திலிருந்து 2000-2018 ஆண்டு காலப்பகுதியின் போது 5.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இப்போக்கிற்கமைய, உலக ஏற்றுமதிகளின் பங்கொன்றாக இலங்கையின் ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டில் 0.086 சதவீதத்திலிருந்து 2017இல் 0.064 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 2017 தொடக்கம் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓரளவு மீட்சியடைந்துள்ள போதிலும் உலகின் ஏனைய நாடுகளுடன், குறிப்பாக 2000-2017 காலப்பகுதியின் போது முறையே 18.1 சதவீதம், 14.7 சதவீதம், 13.7 சதவீதம் மற்றும் 11.0 சதவீதம் கொண்ட சராசரி ஏற்றுமதி வளர்ச்சியினைப் பதிவுசெய்துள்ள வியட்நாம், கம்போடியா, இந்தியா, வங்காளதேசம் போன்ற ஒத்த பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை அதன் ஏற்றுமதிச் செயலாற்றத்தில் பின்னடைந்துள்ளது. மோசமான ஏற்றுமதிச் செயலாற்றத்திற்கு ஏற்றுமதிக் கொள்கைகள் மற்றும் உபாயங்கள் போதுமானளவில் ஒருங்கிணைக்கப்படாமையே முக்கிய காரணமாக இருந்து வருகின்றது. இலங்கைக்கான தேசிய ஏற்றுமதி உபாயமொன்றினைத் (தேசிய ஏற்றுமதி உபாயம் 2004-2008) தயாரிப்பதற்கு 2004இல் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டதாயினும் அதன் செயற்றிறனற்ற நடைமுறைப்படுத்தலினால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்றுமதித் துறையினை பொருளாதார வளர்ச்சியின் முக்கிய தூண்டுனராக தோற்றம்பெறச் செய்வதற்கு, அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தி உபாயத்தினுள் ஏற்றுமதித் துறையினைத் தூண்டுவதற்கான உபாயத் திட்டமொன்றினை வகுத்தல் மிக முக்கியமானது என்பது கண்கூடாகும். அதற்கமைய, உபாயத்தில் இனம்காணப்பட்ட ஏற்றுமதி இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு நிலைத்துநிற்கும் காலப்பகுதியின் போது நடைமுறைப்படுத்தக்கூடிய தேசிய ஏற்றுமதி உபாயமொன்றிற்கான தேவையினை ஏற்றுமதித் துறை ஆர்வலர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இலங்கை மத்திய வங்கியும் 2016 இற்கான அதன் ஆண்டறிக்கையில் இலங்கைக்கான தேசிய ஏற்றுமதி உபாயமொன்றின் முக்கியத்துவத்தினை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது. *(சிறப்புக் குறிப்பு 07: ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்கான தேசிய உபாயம்)*

இப்பின்னணிக்கெதிராக, அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பவற்றின் முயற்சியின் கீழ் அரசாங்கமானது ஆர்வலர்களின் விரிவான ஆலோசனையைத் தொடர்ந்து 2018 யூலையில் தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022 இனை வடிவமைத்து தொடங்கிவைத்தது. தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022 இனை வடிவமைப்பதில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிதியளிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை வர்த்தகத் தொடர்பு உதவிச் செயற்றிட்டத்தின் கட்டமைப்பினுள் பன்னாட்டு வர்த்தக நிலையத்திடமிருந்து தொழில்நுட்ப உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது.

வரைபடம் சி.கு. 2.1
தேசிய ஏற்றுமதி உபாயக் கட்டமைப்பு (2018-2022)




மூலம் : ஏற்றுமதி அபிவிருத்தி சபை

**ஒரே பார்வையில் தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022**

தேசிய ஏற்றுமதி உபாயம் என்பது அரசாங்கத்தின் தொலைநோக்கு 2025 கொள்கை ஆவணம் மற்றும் புதிய வர்த்தகக் கொள்கை என்பவற்றில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கு நாட்டின் இயலளவுகளையும் மூலவளங்களையும் பயன்படுத்தி

1

இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சியினை விரைவுபடுத்துவதற்கு 2018-2022 ஆண்டுக்கான காலப்பகுதியில் 5 வருட காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட திட்டவரைவொன்றாகும். வரைபடம் சி.கு 2.1இல் எடுத்துக்காட்டப்பட்டவாறு, நான்கு உபாயக் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்கம் மற்றும் முதலீடு மூலம் தூண்டப்பட்ட ஏற்றுமதிக் கேந்திர நிலையமொன்றாக இலங்கையினை மாற்றமடையச் செய்யும் நோக்குடன் தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022 வடிவமைக்கப்பட்டது. இதற்குமேலதிகமாக, நான்கு பாரம்பரியமாக சுயாதீனமான வர்த்தக ஆதரவுத் தொழிற்பாடுகளை ஒன்றிணைப்பதனை அடிப்படையாகக் கொண்டு அனைத்து ஏற்றுமதித் துறைகளுக்குமான வியாபாரச்சூழல் ஒன்றினை மேம்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வர்த்தக ஆதரவுத் தொழிற்பாடுகள் ஏற்பாட்டுச் சேவைகள், வர்த்தக தகவல் மற்றும் ஊக்குவிப்பு, தேசியத் தர உட்கட்டமைப்பு மற்றும் புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இனங்காணப்பட்ட வர்த்தக ஆதரவுத் தொழிற்பாடுகளை அபிவிருத்தி செய்தலானது இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு தரமான மற்றும் ஆதரவுச் சேவைகளை வழங்குவதில் உள்ள பிரதான சவால்களைத் தீர்ப்பதற்கு உதவியளிக்கும். அதேவேளை, தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022 புத்தாக்கத்திற்கும் ஏற்றுமதி பன்முகப்படுத்தலுக்குமென தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார செயன்முறைப்படுத்தல் முகாமைத்துவம், ஆரோக்கியச் சுற்றுலா, படகு கட்டுதல், மின்வலு மற்றும் இலத்திரனியல் கூறுகள், பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் அத்துடன் உலர்த்திய உணவுப் பண்டங்கள் போன்ற ஆறு மையத்துறைகளை, எடுத்துக்காட்டிய அதேவேளை பாரம்பரியமான ஏற்றுமதி, கைத்தொழில்களின் வளர்ச்சிக்கும் துணையளிக்கின்றது.

அட்டவணை சி.கு. 2.1
தேசிய உபாயத்தின் 6 முக்கிய கவனத்துறைகள் (2018-2022)

| கவனத்துறை | கைத்தொழிலின் வகை | வளர்ச்சிப் போக்கு | 2018இல் பங்களிப்பு |
|---|---|---|---|
| 1. தகவல் தொழில்நுட்பம் - வியாபார செயன்முறைப் படுத்தல் முகாமைத்துவம் | பணிகள் | முதிர்ச்சியடைந்த | ஐ.அ.டொலர் 848 மில்லியன், (பணிகள் ஏற்றுமதிகளின்'.) |
| 2. ஆரோக்கியச் சுற்றுலா | பணிகள் | வளர்ந்துவரும | 'சுற்றுலாப் பயணிகள், (மொத்த வருகைகளில்'.) |
| 3. வாசனைத் திரவியங்கள் மற்றும் உலர்ந்த உணவுப் பண்டங்கள் | வேளாண்மை | முதிர்ச்சியடைந்த | ஐ.அ.டொலர் 360 மில்லியன |
| 4. பதனிடப்பட்ட உணவுகளும் குடிபானங்களும் | வேளாண்மை | வளர்ந்துவரும் | ஐ.அ.டொலர் 462 மில்லியன், (வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் 4%) |
| 5. படகு கட்டும் கைத்தொழில் | தயாரித்தல் | தூரநோக்கு | ஐ.அ.டொலர் 27 மில்லியன், (வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் 0.2%) |
| 6. இலத்திரனியல் மற்றும் மின்சாரக் ஆக்கக்கூறுகள் | தயாரித்தல் | தூரநோக்கு | ஐ.அ.டொலர் 278 மில்லியன், (வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் 2%) ஏற்றுமதிகளின் 4%) |

மூலங்கள்: ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

கவனத்திற்குரிய ஆறு துறைகளும் ஹாவாட் பல்கலைக்கழகத்தின் வழிகாட்டலின் கீழ் பொதுநலவாய செயலகம், மெக்கின்சி கன்சல்டன்ஸ், உலக வங்கி மற்றும் சர்வதேச வர்த்தக நிலையம் என்பவற்றின் கூட்டிணைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் முதலீட்டுச் சபை ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட ஏற்றுமதி சாத்திய மதிப்பீடுகளில் இருந்து பெறுவிக்கப்பட்ட அளவுசார் மற்றும் தரம் வழியலகுகளை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட்டன. கவனத்திற்குரிய துறைகள் அனைத்து முக்கிய பொருளாதார துறைகளையும் அதாவது, கைத்தொழில், வேளாண்மை மற்றும் பணிகள் துறைகளையும் உள்ளடக்குவதுடன் அவற்றின் வளர்ச்சிப் போக்குகள் வளர்ந்துவருகின்ற, முதிர்ச்சியடைகின்ற மற்றும் தூரநோக்குள்ளவையாக வகைப்படுத்தப்பட்டுள்ள வேறுபட்ட வளர்ச்சி மட்டங்களில் காணப்படுகின்றன. (அட்டவணை சி.கு 2.1) தகவல் தொழில்நுட்பம் - வியாபார செயன்முறைப்படுத்தல் முகாமைத்துவம், வாசனைத் திரவியங்கள் மற்றும் உலாத்திய உணவுப் பண்டங்கள் போன்ற துறைகள் தொடர்புடைய கைத்தொழில்களில் ஏற்றுமதி வருவாய்க்கான உயர்வான வாய்ப்பினைக் கொண்டிருக்கின்ற முதிர்ச்சியடைந்த துறையாக கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 2018இல் இலங்கையின் மொத்தப் பணிகள் ஏற்றுமதியின் 10.1 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்து தகவல் தொழில்நுட்ப - வியாபார செயன்முறைப்படுத்தல் முகாமைத்துவத் துறையில் ஏறக்குறைய 80,000 தொழில்சார் வல்லுனர்கள் தொழில்பெற்றிருந்தனர். மேலும், தனித்துவமிக்க தரத்தின் காரணமாக அதன் வாசனைத் திரவியங்கள் மற்றும் சாறுகளுக்கு அல்லது உலர்த்தப்பட்ட உணவுப் பண்டங்களுக்கு இலங்கை நன்கு அறியப்பட்ட நாடாகும், இருந்தபோதும் உலக கறுவா ஏற்றுமதிகளின் 30 சதவீத சந்தைப் பங்குடன் இலங்கை பாரிய உலக கறுவா வழங்குனராக விளங்குகின்றமைக்கு மத்தியிலும் 2018இன் மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிக்கு இத்துறை வெறும் 3 சதவீதத்திற்கு மாத்திரம் பங்களிப்புச் செய்தது. வளர்ந்து வருகின்ற ஆயுர்வேத மருத்துவப் பணிகள் மற்றும் தனித்துவமான இலங்கை வாசனைத் திரவியங்களுடன் கலந்த உணவு மற்றும் குடிபானங்கள் என்பன இலங்கைக்கு ஏற்றுமதி வருவாய் வாய்ப்புகளுக்கு பாரிய சாத்தியமொன்றினை தோற்றுவிக்கும் என்பதால் ஆரோக்கியச் சுற்றுலா மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் அத்துடன் குடிபானங்கள் என்பன வளர்ந்துவருகின்ற கவனத் துறைகளாக இனங்காணப்பட்டன. இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தில் இருந்து நன்மையளிக்கக்கூடிய அதேவேளை உற்பத்தி பகிர்கின்ற வலையமைப்பில் பங்கேற்பதற்கு நாட்டின் வாய்ப்பினை அதிகரிக்கின்ற தூர நோக்குள்ள கவனத் துறைகளாக படகு கட்டும் கைத்தொழில் மற்றும் இலத்திரனியல், மின்வலு ஆக்கக்கூறுகள் துறைகள் கருத்திற்கொள்ளப்பட்டன. அனைத்து ஆறு கவனம்

செலுத்தும் துறைகளும் அதன் தனித்துவமிக்க அமைவிடம், தேர்ச்சி பெற்ற தொழிற்படை, நீண்ட வரலாறு, செழிப்புமிக்க கலாசாரம் மற்றும் உயிரியல் பல்லினத்தன்மை மற்றும் வேளாண்மைத் தளம் என்பவற்றுக்கு ஊட்டமளிக்கின்ற வெப்பக் காலநிலை என்பவற்றின் ஊடாக இலங்கைக்கு போட்டி அநுகூலத்தினை வழங்குகின்றன.

**நடவடிக்கைகள் திட்டமும் தேசிய ஏற்றுமதி உபாய நடைமுறைப்படுத்தலின் செயல்திறன்மிக்க கண்காணிப்பும்**

தேசிய ஏற்றுமதி உபாயமானது 2018-2022 காலப்பகுதியின் போது நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னுரிமைகளை நடவடிக்கைகளாக மாற்றுகின்ற அனைத்தையுமுள்ளடக்கிய நடவடிக்கைகள் திட்டமொன்றினை உள்ளடக்குகின்றது. நடவடிக்கைகள் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பு தலைமை வகிக்கின்ற நிறுவனங்களாகவும் துணையளிக்கின்ற நிறுவனங்களாகவும் இனங்காணப்பட்ட தேசிய நிறுவனங்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளன. இங்கு தலைமை தாங்கும் நிறுவனங்கள் துணையளிக்கும் நிறுவனங்களின் உதவியுடன் நடவடிக்கைகள் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலினை ஒருங்கிணைக்கும். முன்னைய தேசிய ஏற்றுமதி உபாயத்தின் அனுபவத்தினைக் கருத்திற்கொண்டு நடவடிக்கைகள் திட்டத்தின் செயல்திறன்மிக்க நடைமுறைப்படுத்தலானது தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இன் வெற்றிக்கு முக்கியமானதாக விளங்குகின்றது. எனவே தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022 இன் வெற்றியானது பொதுவான தேசிய குறிக்கோள் ஒன்றினை நோக்கி பங்களித்து, நடவடிக்கைகள் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்து, இணைந்து செயலாற்றி, உரிமையாக்கிச் செலுத்துவதற்கான அனைத்து ஆர்வலர்களினதும் அர்ப்பணிப்பு, விருப்பம் மற்றும் இயலளவு என்பவற்றினைச் சார்ந்திருக்கும். தனியார் மற்றும் அரசாங்க துறைப் பிரதிநிதிகளுடன் கூடிய பல்வேறு ஆலோசனைக் குழுக்கள் மற்றும் நடவடிக்கைகள் திட்டத்தினை மேற்கொள்ளுவதற்கு பல்வேறு நிறுவனங்களுடன் மேற்பார்வை செய்து ஒருங்கிணைப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட முகாமைத்துவ அலகு என்பவற்றை உள்ளடக்கிய முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைப்புப் பொறிமுறையொன்று உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் கீழ் தேசிய ஏற்றுமதிகள் உபாயம் 2018-2022இன் உள்ளேயே உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இன் அதிகார வரம்பிற்குக் கீழ் வருகின்ற அனைத்து முக்கிய துறைகளையும் உள்ளடக்குகின்ற 16 புதிய ஆலோசனைக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் நடவடிக்கைகள் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் பற்றிய முன்னேற்ற மீளாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022இன் எதிர்பார்க்கைகள்**

தேசிய ஏற்றுமதி உபாயம் எதிர்பார்க்கை அனைத்து இலங்கையர்களுக்கும் நன்மையளிப்பதற்கு ஏற்றுமதிகளில் உறுதியான மற்றும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியினை தோற்றுவிப்பதாகும். தேசிய ஏற்றுமதி உபாயம், புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குகின்ற அதேவேளை, உலக பெறுமதிச் சங்கிலிகளிலும் உற்பத்தியை பகிர்ந்துகொள்கின்ற வலையமைப்புகளிலும் அதிகரித்த பங்கேற்பினூடாக பெறுமதி கூட்டலினை வசதிப்படுத்தி வளர்ச்சியடைந்து வருகின்ற ஏற்றுமதித் துறைகளுக்கு வாய்ப்புகளை திறந்துவிடும். வர்த்தக துணைத் தொழிற்பாடுகள், விசேடமாக சிறிய மற்றும் நடுத்தர தொழல்முயற்சிகள் ஏற்றுமதித் துறையினுள் நுழைவதற்கு காணப்படும் ஆரம்பத் தடைகளை எளிதாக்கும் அதேவேளை, சட்ட மற்றும் நிருவாக ரீதியாக நடைமுறைகளை சீரமைப்பதன் மூலம் புதிய முதலீடுகளை கவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக தேசிய ஏற்றுமதி உபாயம் நடுத்தர காலத்தில் நிலையானதொரு அடிப்படையில் ஏற்றுமதியினால் வழிநடத்தப்படும் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும். பெருமளவு படுகடன் தீர்ப்பனவுச் சுமையினை தீர்ப்பனவு செய்யவும் அதேவேளையில் நாட்டின் இறக்குமதித் தேவைப்பாடுகளுக்கு ஆதரவளிப்பதும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் கொடுகடன் வழங்குவோருக்கும் போதுமான நம்பிக்கையினை வழங்கும் வெளிநாட்டு ஒதுக்குகளைப் பேணுவதற்கும் ஏற்றுமதி செயலாற்றத்தினை மாற்றியமைப்பது இன்றியமையாததாகும்.

முடிவாக, தேசிய ஏற்றுமதிகள் உபாயம் 2018-2022, நீடித்துநிலைத்திருக்கும் விதமொன்றில் இலங்கையின் போட்டித்தன்மையினை உயர்த்துவதற்கு இலங்கையின் பின்தங்கிய ஏற்றுமதி துறையின் தேவைகளை பூர்த்திசெய்வதற்கு பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக வடிவமைக்கப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய தேசிய உபாயமொன்றாக விளங்குகின்றது. உபாயத்தின் வெற்றி குறித்துரைக்கப்பட்ட காலவரையறைக்குள் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதன் மீது தங்கியுள்ளது. எனவே, நாட்டின் நன்மைக்காக உத்தேசிக்கப்பட்ட நன்மைகளை அறுவடை செய்வதற்கு இத்தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உபாயத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியொன்று அவசியமாகும்.

---

உசாத்துணை:

இலங்கைத் தேசிய ஏற்றுமதி உபாயம் 2018-2022 (2018) அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு, கொழும்பு

1

தன்மையினை மேம்படுத்துவதற்கு பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கும் ஆதரவளிக்கும். வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் புதிய தொழில்நுட்பத்தின் உட்பாய்ச்சல், உயர்ந்த பெறுமதியுடைய தொழில்வாய்ப்புக்களின் உருவாக்கம், அளவுச் சிக்கனத்தின் அதிகரிப்பு மற்றும் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்தல் போன்ற பல்வேறு நன்மைகளையும் ஏற்றுமதிகளின் வளர்ச்சியையும் ஏற்படுத்தும்.

**இலங்கையின் அதியுயர்ந்த வெளிநாட்டு செலாவணி உழைப்பாளராக சுற்றுலாக் கைத்தொழில் வருவாய்க்கான உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் அதன் மேலதிக வளர்ச்சிக்கான தடைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் ஆதரவளிக்கப்படவேண்டும்.** சுற்றுலாப் பயணிகளின் வருகை 2000-2009 வரையான காலப்பகுதியின் ஒரு சதவீத வளர்ச்சியினை விடத் தாழ்ந்த ஆண்டுச் சராசரி வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து போருக்குப் பின்னரான காலப்பகுதியில் 20 சதவீதத்திற்கு மேலாகவிருந்து இலங்கை பிராந்தியத்தின் சிறந்த சுற்றுலா சேரிடமாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. மேலும், போருக்குப் பின்னரான காலப்பகுதியில் சராசரி தங்கியிருத்தல் காலம் அதிகரித்த அதேவேளையில் சுற்றுலாப் பயணிகளில் நாளொன்றுக்கான சராசரி செலவிடலும் கணிசமானளவு அதிகரித்தது. இத்தகைய அண்மைக்கால அபிவிருத்திகளுக்கு மாறாக, தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து இலங்கை அதன் உள்ளார்ந்த ஆற்றலினை அடைந்து கொள்ளவில்லை. 2020ஆம் ஆண்டளவில் ஐ.அ.டொலர்கள் 7 பில்லியன் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களுக்கான நடுத்தர கால இலக்கினை அடைவதனை நோக்கிய பிரச்சனைகள் மற்றும் கொள்கை சீர்திருத்தங்களை அடையாளம் கண்டு அரசாங்கம் ஒரு அனைத்தையுமுள்ளடக்கிய சுற்றுலா உபாயத்திட்டம் 2017-2020இனை அறிமுகம் செய்தது. எனினும், சுற்றுலாத்துறையின் நிலைத்திருக்கும் தன்மையை அதிகரிப்பதற்கும் வருவாய்களை மேம்படுத்துவதற்கும் மேலும் தூண்டுதல்கள் தேவைப்படுகின்றன. இலங்கைத் தீவு முழுவதிலும் பரந்துள்ள பலவிதமான கவருமிடங்களைக் கொண்டிருக்கின்றதனாலும் அவற்றிற்கு சம நிலையான அல்லது சுமூகமான பார்வையாளர்களது பாய்ச்சல் காணப்படாமையானது அக் கவர்ச்சிகளுக்கும் பார்வையாளர்களிற்கும் தொல்லையாகவிருக்கின்றது. எனவே, சுற்றுலாப் பணி வழங்குநர் மற்றும் தொடர்புபட்ட நிறுவனங்களுக்கிடையில் பார்வையாளர்களின் கவருமிடங்களுக்கான வருகைகள் மற்றும் காலங்களினை பரப்பீடு செய்வதில் ஒரு ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படுகின்றது. நெரிசல்மிக்க மற்றும் நெரிசலற்ற கால விலையிடலுடன் முன்கூட்டிய இணையத்தளப் பிரிவு, நெரிசல் அழுத்தங்கள் மற்றும் பொது மக்கள் போக்குவரத்து முறைமை மீதான இணையத்தள தகவல் போன்ற வசதிகளினை வழங்குவது தற்பொழுது அதிக நெரிசல் காணப்படும் கவருமிடங்களான சிகிரியா மற்றும் ஹோர்ட்டன் பிலேன், யால மற்றும் உடவலவ போன்ற தேசிய பூங்காக்கள் மீதான அழுத்தங்களை இலகுபடுத்தும். வசதிகளினை மேம்படுத்தல், கவருமிடங்களில் பொதுவான அணுகக்கூடிய நேரத்தை அதிகரித்தல் மற்றும் இரவு நேர வருகையை இயலச் செய்தல், சுற்றுலாத்துறைக்கு ஆதரவளிக்கும். மிருகங்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கு இரைச்சல் மிக்க எரிபொருளினால் வலுவிடப்படுகின்ற ஜீப் வண்டிகளுக்குப் பதிலாக மின்சாரத்தினால் வலுவிடப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியங்கள் ஆராயப்பட முடியும். கம்பி வட ஊர்திகள், கருப்பொருள் பூங்கா, சுற்றுலாப் பயணக்கப்பல் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட சுற்றுலா வலயங்கள் போன்ற பாரியளவிலான எண்ணிக்கையற்ற சுற்றுலாப் பயணிகளை கையாளுவதற்கான கவருமிடங்கள் மற்றும் சுற்றுலா வசதிகளை இலங்கை கொண்டிருக்கவில்லை. உலக இருப்பிட முறைமை இயலுமைப்படுத்தப்பட்ட சுய வழிகாட்டல் பன்மொழி சேரிடக் கருவிகள் முக்கிய சுற்றுலாக் கவருமிடங்களான அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் சிகிரியா அது போன்று கொழும்பு நகர உலா போன்றவற்றில் வழங்கப்பட முடியும். இதற்கு மேலதிகமாக, கொழும்புத் துறைமுக நகரச் செயற்றிட்டம் அபிவிருத்தி செய்யப்படுகையில் குறுங்காலப் பயணத் திட்டங்களினைக் கொண்ட வியாபார மற்றும் கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள், மாநாடு மற்றும் கண்காட்சிக்கான பார்வையாளர்களில் மிகையான அதிகரிப்பு எதிர்பார்க்கப்படக் கூடுமென்பதனால் அத்தகைய சுற்றுலாப்பயணிகளின் விசேட தேவைகள் முன்கூட்டிய திட்டமிடலினூடாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். மேலும், சுற்றுலாப்பயணிகள் நாட்டினைப் பற்றிய தமது முதல் அபிப்பிராயத்தினை நுழைவிடத்தில் உருவாக்குவதனால் இலங்கை அரசு வானூர்தி நிலையங்களின் இயலளவினையும் தரத்தினையும் அதிகரிக்க வேண்டியது அவசியம். அதேநேரத்தில் சுற்றுலாக் கப்பல் கம்பனிகளிற்கு வசதியளிப்பதற்காக இறங்குதுறைகளை அபிவிருத்தி செய்வதும் இன்றியமையாததாகும். மேலும், வானூர்தி நிலையங்களிலும் இறங்குதுறைகளிலும் இலங்கையில் ஒரு குறுங்கால தங்குதலினை மேற்கொள்வதற்காக கடந்து செல்லும் பிரயாணிகளைக் கவர்வதற்கு இடைத்தங்கல் பொதிகள் வடிவமைக்கப்படக்கூடும். இலங்கையின் பசுமை, வாயுவின் தரம் மற்றும் பல்லின உயிரினங்களை மேம்படுத்துவது மேலும், சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும். தனித்துவம் வாய்ந்த வேளாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்களின் பல்வேறு வகைகள் இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளதனால் நாடுமுழுவதிலும் பரவிக் காணப்படுகின்ற அரசாங்க விவசாயம் பண்ணைகள் வேளாண்மைசார் சுற்றுலாவிற்காகப் பயன்படுத்தப்படலாம். சுற்றுலாத்துறையின் முழுமையாகப் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த ஆற்றலினை அடைந்து கொள்வதற்கு அனுமதியளிப்பதற்கு சுற்றுலாவினை ஊக்குவித்தலுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச-தனியார் பங்குடமைகளினூடாக தனியார் துறையின்

பங்கேற்பு ஊக்குவிக்கப்பட முடியும்.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படும் போது ஆதரவளிக்கக் கூடிய அத்தகைய உட்பாய்ச்சல் நிலைத்து நிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உற்பத்தித் திறன் வாய்ந்த துறைகளிற்கு வழிநடத்தப்படுவது அவசியமாகும்.** அண்மைக் காலங்களில் நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்களில் உயர்வடைந்துவருகின்ற போதிலும் இவ்வுட்பாய்ச்சல்கள் பெருமளவில் வர்த்தகம் செய்யமுடியாத துறைகளின் ஒருமித்திருப்பதனால் ஏற்றுமதியின் போட்டித்தன்மையினை உயர்த்துவதிலும் பொருளாதார வளர்ச்சியை தூண்டுவதிலும் மிகச் சிறியளவில் பங்பளிப்புச் செய்துள்ளன. குறிப்பாக உயர் தொழில்நுட்ப தயாரிப்புக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட தொழில்நுட்ப செய்முறை நுண்ணறிவினை இணைத்துக் கொண்டுவரக்கூடிய ஆசியப் பிராந்தியத்திலுள்ள வியட்நாம் போன்ற ஏனைய உலக உற்பத்தி வலையமைப்பில் உயர்ந்த பெறுமதி கூட்டலுடன் ஒருங்கிணைவதற்கு தயாரிப்பாளர்களினை இயலச் செய்கின்ற துறைகளில் நேரடி முதலீடுகளினைக் கவர்வதில் இலங்கை அதன் பிராந்திய இணைத்தரப்பு நாடுகளிடமிருந்து பின்தங்கியிருக்கின்றது. மாறாக ஆசியப் பிராந்தியத்திலுள்ள வியட்நாம் போன்ற ஏனைய தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்கள் பல ஆண்டுகளாக மெச்சத்தக்க மட்டங்களில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளினை கவர்வதில் மிகவும் வெற்றிகரமாகவிருந்ததுடன், அத்தகைய முதலீடுகள் வியட்நாமின் கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதியில் அரைப்பகுதிக்கு வகை கூறுகின்ற செய்முறைப்படுத்தல் மற்றும் தயாரித்தல் கைத்தொழில்களால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், வியட்நாமின் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உபாயம், ஊழியம் முனைப்பான துறைகளினை விட அதிகரித்த உயர் தொழில்நுட்பக் கைத்தொழில்களினை மையமாகக் கொண்டிருக்கின்றன. வியட்நாமின் வெற்றிக்கு நாட்டின் சமூக அரசியல் உறுதித்தன்மை, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமானதும் நியாயமானதுமான வியாபாரச் சூழலை உருவாக்குவதில் அரசாங்கத்தின் கடப்பாட்டினையும் அதேவேளை, அதன் சட்டக் கட்டமைப்பினையும் வியாபாரம் மற்றும் முதலீட்டுடன் தொடர்புடைய நிறுவனங்களையும் காரணப்படுத்த முடியும். வியட்நாம் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட முதலீட்டு சூழ்நிலையை மேம்படுத்துவதற்கான சீர்திருத்தங்கள் உலக வங்கியினால் வெளியிடப்படுகின்ற 'வியாபாரம் செய்யுங்கள் வரிசைப்படுத்தல் 2019இல்' 69ஆவது நிலைக்கு இட்டுச் சென்றுள்ள போது இலங்கை கடந்த ஆண்டிலிருந்து ஒரு மேம்பாட்டினை பதிவுசெய்ததாயினும் 190 நாடுகளில் 100ஆவதாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இது முக்கியமாக வியாபார ஆரம்பித்தல் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதல், ஆதனங்களினைப் பதிவுசெய்தல், வரிகளினைச் செலுத்தல் மற்றும் கொடுகடனைப் பெற்றுக்கொள்ளல் போன்றவை தொடர்புபட்ட சிக்கலான வியாபார ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு மேலும் பலவீனமானதொரு நிறுவனச் சூழல், நெகிழ்ச்சியற்ற தொழிலாளர் சந்தை மற்றும் அபிவிருத்தியடையாத உட்கட்டமைப்புக்கள் உலக பொருளாதார மாற்றத்தினால் வெளியிடப்பட்ட 'உலகப் போட்டித்தன்மைச் சுட்டெண் 2018இல்' இலங்கை கடந்த ஆண்டிலிருந்த வரிசைப்படுத்தலிலிருந்து 140 நாடுகளுக்கிடையில் 85ஆவது இடத்திற்கு 4 படிகளால் நழுவியது. எனவே, முதலீட்டாளர் சினேகபூர்வமான சூழலினை வலுவற்றதாக்குகின்ற இத்தகைய கரிசனைகளை வெற்றிகொள்வதற்கு வலுவான கொள்கை முயற்சிகள் நிறைவேற்றப்பட வேண்டும். மேலும், நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு வினைத்திறனை வேண்டுகின்ற வெளிநாட்டு நேரடி முதலீடுகளை எவ்வாறு நன்கு கவர்ந்து கொள்வது மற்றும் இலங்கை உயர்ந்த போட்டித்தன்மை நன்மைகளைக் கொண்டுள்ள ஏற்றுமதியினை நோக்கிய கைத்தொழில்களில் சந்தையை வேண்டுகின்ற முதலீடுகளை உயர்த்துவதற்கும் நன்கு தீர்க்கமானதும் ஒத்திசைவானதுமான முதலீட்டுக் கொள்கையை இலங்கை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவையுள்ளது. மூலதனத்தை மாத்திரமன்றி நாட்டின் இயற்கை வளங்களையும் தேர்ச்சிபெற்ற தொழிலாளரின் குழாத்தினையும் பயன்படுத்துவதன் மூலம் உள்நாட்டுத் தயாரிப்புத் துறைக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை, தமது நன்கு ஸ்திரமாக்கப்பட்ட வலையமைப்பின் ஊடாக உலகப் பெறுமதிச் சங்கிலியில் நாட்டினை ஒருங்கிணைப்பதற்கும் ஆதரவளிக்கின்ற வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்வதற்கு ஒரு இலக்கிடப்பட்ட அணுகுமுறை தேவைப்படுகின்றது. மேலும், ஊழலினை இல்லாதொழித்தல், நிறுவன ஒத்திசைவினை உயர்த்துதல் மற்றும் அரச நிறுவனங்களுக்கிடையில் இணைப்பினை உருவாக்குவதன் மூலமான ஒழுங்குபடுத்தல் ஒத்திசைவு வர்த்தக வசதிப்படுத்தலிற்காக அளவுப் பொருத்தங்களை மேம்படுத்துதல் மற்றும் முதலீட்டின் நம்பிக்கையை வளர்ப்பதற்காக தொழிற்சந்தை சீர்திருத்தங்களை விரைவுபடுத்தல் போன்ற வெற்றி வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மிக முக்கியமாக இலங்கையின் பலவீனமான வெளிநாட்டுத் துறையை நிவர்த்தி செய்யவும் வெளிநாட்டு பாதிப்படையக் கூடிய தன்மைக்கெதிராக தாக்குப்பிடிக்கும் தன்மையை உயர்த்துவதற்கும் கடனை உருவாக்காத வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வடிவில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியிடுவது ஒரு இன்றியமையாத நிலைத்து நிற்கும் தீர்வாகும்.

**கடனை உருவாக்காத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை கவருவதன் மூலம் வெளிநாட்டுத்துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுக்கின்ற அதேவேளை, முக்கிய பேரண்டப் பொருளாதார இடர்பாடுகளை தீர்த்துக்கொள்ள வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் ஒன்றுதிரட்டலினை வெற்றி கொள்வதற்கான நடுத்தரகால சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.** வெளிநாட்டுப் படுகடன்கள் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் கொடுப்பனவுகள் கடந்த

1

தசாப்தத்தில் நாட்டின் வெளிநாட்டுத் துறை சமமின்மைக்கு பங்களிப்புச் செய்யும் ஒரு முக்கிய பங்களிப்பாளராகவிருந்தன. சராசரியாக ஆண்டிற்கான வெளிநாட்டுப் படுகடன் மீள்கொடுப்பனவு கடப்பாடுகள் ஐ.அ.டொலர் 5 பில்லியனை விட விஞ்சியதாகவிருப்பதுடன் இலங்கை உயர்வடைந்த மீள்நிதியிடல் இடர்நேர்விற்கு முகம் கொடுக்கின்றது. இலங்கையின் நடுத்தர வருமானப் பொருளாதாரமெனும் நிலைமாற்றத்தனைத் தொடர்ந்து சலுகையடிப்படையிலான வெளிநாட்டு நிதியிடலின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவினால் இந்த நிலைமை மேலும் மோசமாகியது. இது சந்தையை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு கடன்பாடுகளின் மீது நாட்டின் அதிகரித்த தங்கியிருத்தலிற்கு இட்டுச் சென்றதுடன், அத்தகைய கடன்பாடுகள் உலக நிதியியல் நிலைப்பாடுகளின் இறுக்கமடைதலிற்கு நாட்டின் அதிகரித்த வெளிப்பாடு மற்றும் பாதிப்படையக் கூடிய தன்மையினை அதிகரித்துள்ளன. மேலும், இலங்கை விடாப்பிடியான உயர்ந்த வரவுசெலவுத்திட்ட மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளுடன் ஒரு இரட்டைப் பற்றாக்குறை நாடாகவிருந்து இத்தகைய பற்றாக்குறைகளிற்கு நிதியிடுவதற்கு காலங்காலமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடுகளில் தங்கியிருக்கின்றது. பாரிய இறைப் பற்றாக்குறைகள் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பின் குவிதலுக்கு வழிவகுத்தன. இதற்கு மேலதிகமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் விரிவடைதலும் இத்தகைய பற்றாக்குறைகளுக்கு நிதியிடுவதற்கு நிலைத்துநிற்க முடியாத மட்டங்களில் வெளிநாட்டுப் படுகடன்களின் அதிகரித்த தங்கியிருத்தலுக்கு வழிவகுத்தது. இத்தகைய கடன்பாடுகள் அதனுடன் தொடர்புபட்ட வட்டிக் கொடுப்பனவுகளை அதிகரித்து அதன் மூலம் ஒரு நச்சு வட்டத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை விரிவடையச் செய்வதில் பங்களிப்புச் செய்யும். மறுபக்கத்தில், அதிகரித்த வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் வெளிநாட்டு அதிர்வுகளிற்கான தாங்கியிருப்பாக பணியாற்றும் நாட்டின் பன்னாட்டு ஒதுக்கங்களை வற்றிப் போகச் செய்யும். காத்திரமான பொறுப்பு முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் தொடர்கின்ற இறைத் திரட்சியுடனும் கூடிய வெளிநாட்டுத் துறையின் விடாப்பிடியான பிரச்சனைகளினை நிவர்த்தி செய்வதற்கான தீர்வு உற்பத்திப் பொருளாதாரத்தினை ஊக்குவித்தல் மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதி போன்றவற்றினூடாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு தீர்வு காணுகின்ற அதேவேளையில், உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களைக் கவர்வதற்கு முதலீட்டாளர் சினேகபூர்வ சூழலினை உருவாக்குவதிலிருக்கின்றது.

**இறைத்திரட்சிச் செய்முறை மற்றும் இறைச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும் பொது நிதியிலுள்ள நாட்பட்ட கரிசனைகளைத் தீர்த்துக் கொள்வது அவசியமாகும்.** இலங்கையின் இறைத் தொழிற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்டதை விடத் தாழ்வான அரசிறைச் சேகரிப்பு நீடித்த பிரச்சனையொன்றாகும். உண்ணாட்டரசிறைச் சட்டம் மற்றும் வருவாய் முகாமைத்துவத்திற்கான இலத்திரனியல் முறைமையின் அறிமுகம் அரசிறையை உயர்த்துவதில் துணைபுரியக் கூடுமெனினும் எதிர்பார்க்கப்பட்ட இறை இலக்குகள் அடையப்பட வேண்டுமாயின் அரசிறையை மேம்படுத்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதிலான தாமதங்கள் மற்றும் வரி ஏய்ப்பு மற்றும் வரித் தவிர்ப்பு காரணத்தினாலான கசிவுகள் தீர்க்கப்பட வேண்டும். கடந்த அண்மைக்காலத்தில் உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தில் வரிக் கோப்புக்களின் எண்ணிக்கையிலான ஒரு கணிசமான அதிகரிப்பிற்குப் புறம்பாக அந்த அதிகரிப்பு வருமான வரி சேகரிப்பிலான ஒரு அதிகரிப்பிற்கு மாற்றப்படவில்லையாதலால் நேரடி வரிக்கும் மறைமுக வரிக்குமான விகிதாசாரம் தொடர்ந்தும் தாழ்ந்ததாகவேயிருக்கின்றது. வரி அரசிறை மேம்படுத்தல் வழிமுறைகளின் சரியான நடைமுறைப்படுத்தல், இணங்குவித்தலினை வினைத்திறனுடன் கண்காணித்தல், வரிக் கட்டமைப்பின் இலகுபடுத்தலும் ஒழுங்குமுறைப்படுத்தலும் வரிக்கடப்பாடு தொடர்பாக பொதுமக்கள் விழிப்புணர்வையும் வரி செலுத்துகின்ற நடைமுறையினையும் மேம்படுத்தல் போன்றவை இந்தவகையில் தாமதமின்றி மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகளில் உள்ளடங்குகின்றன. இதேவேளை, மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளி மற்றும் இறைத்திரட்சிப் பாதையுடன் தொடர்ந்துமிருப்பதற்கான தேவையின் பிரதிபலிப்பாகப் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புடன் முனைப்பாகத் தொடர்புபட்ட மூலதனச் செலவினத்திலான ஒரு குறைவும் அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டது. இது உற்பத்திக்கெதிரானதாகவும் நடுத்தர மற்றும் நீண்டகாலத்தில் பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும் விசேடமாக போதிய நம்பிக்கைத்தன்மை தனியார் துறையின் மூலதன முதலீட்டினை தொடர்ச்சியாக மட்டுப்படுத்துகின்ற சூழலில் அளவுக்கு மிஞ்சிய மீண்டெழும் செலவினங்களை ஈடுசெய்வதற்கு மிகவும் தேவைப்படுகின்ற அரச மூலதன செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதும் தாமதப்படுத்துவதும் விரும்பத்தக்கதாகாது. மேலும், உயர்வடையும் படுகடன் மட்டங்கள் மற்றும் படுகடன் பணித் தேவைப்பாடுகளிற்கு மத்தியில் குறிப்பாக மீண்டெழுந்தன்மை கொண்ட விரிவாக்கமுடைய இறைத்தொழிற்பாடுகள் அவை பேரண்டப் பொருளாதார சமமின்மைகளினை விரிவாக்குமென்பதனால் தவிர்க்கப்பட வேண்டியது அவசியம். இந்தப் பின்னணியில் சட்ட ரீதியாக பிணிக்கும் இறை விதிகளின் நடைமுறைப்படுத்தல் மற்றும் உட்கவரக்கூடிய இயலளவுடன் ஒத்திசைவான முதலீட்டுச் செலவுகளினைப் பேணுவதற்கு அனுமதியளிக்கின்ற இறைத் திரட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான கடப்பாடு போன்றவை இலங்கையின் இறை நிலைத்திருக்கும் தன்மையை மீள வலியுறுத்துவதில் இன்றியமையாதது.

**வளர்ச்சிக்கான மிதமிஞ்சிய முட்டுக்கட்டைகளினைத்**

**தடுப்பதற்கு நாட்டின் வலு உட்கட்டமைப்பு எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிப் பாதையின் பின் இணைந்ததாக முன்னேற்றமடைவது தேவையாகின்றது.** நகரமயமாக்கல், அதிகரித்த பொருளாதார செயற்பாடு மற்றும் துறைமுக நகரம், கைத்தொழில் வலயங்கள் மற்றும் மேற்குப் பிராந்திய பெருநகர் செயற்திட்டம் போன்ற திட்டமிடப்பட்ட பாரிய செயற்றிட்டங்களின் நோக்கில் நாட்டின் வலுத் தேவைப்பாடுகள் விரைவாக வளர்ச்சியடையும். இது கடந்த தசாப்த காலப்பகுதியில் உயர்வடைகின்ற கேள்வியினைப் பூர்த்திசெய்வதற்கு 50 சதவீதத்திற்கு மேலாக அதிகரித்த மின்சார உருவாக்கத்தினாலும் அதேவேளையில் நாட்டினால் 99 சதவீத மின்னூட்டல் அடையப்பட்டதனாலும் சான்றுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், உயர்வடைந்துவரும் கேள்விக்கு மத்தியில் விரைவாக அதிகரிக்கும் ஆண்டுக்கான பெற்றோலியக் கட்டணத் தொகையினூடாக பிரதிபலிக்கப்பட்டவாறு வெளிநாட்டு மூலங்களில் அதிகரித்த தங்கியிருத்தல் பின்னணியில் வலுவிற்கான செலவு உயர்ந்திருக்கின்றது. மேலும், இத்தகைய பயன்பாடுகளினை வழங்கிய முக்கிய அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் நட்டங்களினை ஏற்படுத்தியுள்ளமையும் ஒரு கடுமையான கரிசனைக்குரிய விடயமாகும். இத்தகைய நட்டங்கள் செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் பொறிமுறையினூடாக தீர்க்கப்பட வேண்டிய தேவையுள்ள அதேவேளையில் உள்நாட்டு வர்த்தகம் செய்யக்கூடிய துறைகளின் போட்டித்தன்மை மீது பளுவினை ஏற்படுத்தும் வாழ்க்கைச் செலவினத்தை அதிகரிப்பதுமான உயர்வடைந்து வரும் மின்சாரத்திற்கான வளர்ந்துவரும் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு வலுத் துறையினை மேம்படுத்துவதன் மூலம் முன்கூட்டியே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதேநேரம் தற்போதுள்ள உருவாக்க இயலளவின் செயற்றிறனான பயன்பாடு ஊக்குவிக்கப்பட வேண்டிய வேளையில் சூரிய ஒளி மற்றும் காற்று வலு போன்ற நாட்டில் தாராளமாகக் கிடைக்கக்கூடிய புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களைப் பயன்படுத்துவதற்கான வழிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். உலகிலுள்ள பல நாடுகள் புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களினை முற்றுமுழுதாகப் பயன்படுத்துவதில் மெச்சத்தக்களவில் அமைந்துள்ளன. சீனா போன்ற நாடுகள் மாசடைகின்ற வலு மூலங்களில் அவை தங்கியிருப்பதனை தடை செய்வதற்கானதும் தூய்மையான வலு முயற்சிகளினை நோக்கிய நிலைமாற்றத்தின் செய்முறையிலுள்ளன. பசுமையான வலுப்பயன்பாட்டிற்கு வழியமைப்பதற்காக அடுத்துவரும் 10-20 வருட காலப்பகுதிக்கிடையில் எரிபொருளினால் வலுவிடப்படுகின்ற வாகனங்களிற்கான தடைகளை அறிவித்துள்ளன. நாட்டிற்கான நீண்டகால வலு உருவாக்கத் திட்டத்தில் குறிப்பிட்டதனைப் போன்று பசுமையான மின்சார மூலங்களை ஊக்குவிப்பது தொடர்பில் இலங்கை நகர்ந்ததாயினும் ஐக்கிய நாடுகள் சபையின் பொருத்தமான நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தேவையான மட்டங்களை விட எதிர்பார்க்கப்பட்ட மட்டங்கள் தாழ்ந்ததாகவிருந்தது. இத்தகைய முயற்சிகள் உயர்த்தப்பட வேண்டியதன் தேவையினைச் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, இலங்கை தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் வீட்டலகுகளை புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களில் முதலீடு செய்வதற்கு ஊக்குவித்து அதன் மூலம் அரச துறையின் சுமையினைக் குறைக்க வேண்டியிருக்கின்றது. மேலும், உயர்ந்த தரமிக்க செயற்றிறன் வாய்ந்த பொதுப் போக்குவரத்து முறைமை அமைக்கப்பட வேண்டிய அதேவேளையில், மின்சார வாகனங்களை மின்னூட்டுதற்கான வலையமைப்பினை உருவாக்குவது நாட்டின் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு வழிவகுக்கும். பசுமையானதும் செலவுச் சிக்கனம் வாய்ந்ததுமான வலு மூலங்களை நோக்கிய இயக்கத்தினை ஊக்குவிக்கும் இத்தகைய வழிமுறைகள் நாட்டின் ஒட்டுமொத்த செயற்றிறனையும் போட்டித்தன்மையினையும் அதிகரிப்பதில் பங்களிப்புச் செய்வதன் மூலம் விரைவாக அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரத்தின் வலுத் தேவைகளினை தாழ்ந்த செலவில் பூர்த்தி செய்வதில் பங்களிப்புச் செய்யும்.

**உதவுத் தொகைகளுக்கும் ஏனைய வகைகளிலான பாதுகாப்புகளிற்கும் வேளாண்மைத் துறை அரசாங்கத்தில் அதிகமாகத் தங்கியிருப்பது நீண்டகால பொருளாதார செலவுகளை கருத்திற்கொண்டு ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது.** உணவுப் பாதுகாப்பு மற்றும் சனத்தொகையின் பாரியளவான எண்ணிக்கையினர் இறைத்துறையில் தங்கியிருப்பதனால் நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்க உதவு தொகைகளின் கணிசமானளவு பகுதியினை வேளாண்மைத் துறை பெற்றுக்கொள்கின்றது. எனினும், அத்தகைய உதவுதொகைகள் மற்றும் விலை ஆதரவுத் திட்டங்கள் வளங்களின் பகிர்ந்தளிப்பின் செயற்றிறனைக் குறைப்பதுடன் உற்பத்தித்திறன் குறைந்த பயிர்ச்செய்கை பிரயோகங்களை ஊக்குவிக்கும் ஏறத்தாழ இரண்டு மில்லியன் மக்கள் அல்லது தொழிற்படையின் காற்பங்கு வேளாண்மைத் துறையில் தொழிலிலுள்ள அதேவேளையில் மொத்த உள்நாட்டு உற்பத்தித் துறையில் இதன் பங்கு 7-8 சதவீதமாகவுள்ளது. பாரம்பரியமானதும் தொழிலாளர் சார்ந்ததுமான தொழில்நுட்பங்கள் பயிர்ச்செய்கையில் தொடருதல் வேளாண்மை நிலத்தின் விரைவான துண்டாக்கலின் சூழ்நிலையில் வேளாண்மைத் துறையின் தாழ்ந்த உற்பத்தித்திறனுக்கும் வேளாண் சமூகத்தின் தாழ்ந்த வருமானங்களிற்கும் இட்டுச் சென்றுள்ளது. இத்துறைக்கு வழங்கப்படுகின்ற மிதமிஞ்சிய பாதுகாப்பு தொழிலாளர் பற்றாக்குறைகளை அனுபவிக்கின்ற தயாரிப்பு மற்றும் பொழுதுபோக்குத்துறை போன்ற அதிகளவான உற்பத்தித்திறன் வாய்ந்த துறைகளிற்கான தொழிற்படையின் சாத்தியமான நகர்வினை ஊக்கமிழக்கச் செய்கின்றது. இலங்கை தன்னை ஒரு வினைத்திறனால் உந்தப்பட்ட பொருளாதாரமாக மாற்றுவதற்கு முற்படுவதனால் வேளாண்மைத்துறையில் தற்பொழுதுள்ள விளைச்சலொன்றினை தீர்ப்பதற்கான நேரகாலத்துடனான வழிமுறைகள் தேவைப்படுகின்றன. உயர் தேர்ச்சியடைதல், பொறிமுறைக்கட்டுப்படுத்தல் மற்றும் தொழில்முயற்சியாண்மை கலாச்சாரத்தை ஆழப்பதிய வைத்தல்

1

போன்றவற்றின் ஊடாக வேளாண்மை அல்லது பயிச்செய்கைப் பிரிவுகள் இலாபம் தேடுகின்ற வியாபார விரிவுகளாக மாற்றப்பட வேண்டுமென்பதுடன் இது இத்துறையில் உயர்ந்த வருமானத்தை உருவாக்குவதற்குத் துணைபுரியும். இந்த போக்கில் இத்தகைய தனிப்பட்ட இலாபம் தேடுகின்ற வியாபாரப் பிரிவுகளை பாரிய பயிச்செய்கை நிறுவனங்களாக ஒருங்கிணைப்பதற்கான தடைகள் விலக்கப்பட வேண்டும். உயர்ந்த பொருளாதார மற்றும் சமூக செலவில் அரசாங்கத்தில் மிதமிஞ்சியளவில் தங்கியிருப்பதற்குப் பதிலாக அதிகரித்த உற்பத்தித்திறன், தீவிரப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அதிகம் இலாபமீட்டும் வேளாண்மை உற்பத்திகளினை பயிர்செய்வதனூடாக பன்முகப்படுத்தல் போன்றவற்றினூடாக போட்டித்தன்மையைத் தீவிரப்படுத்துவதற்கான முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டியதுடன் காலநிலை மாற்றத்திலிருந்து எழும் சவால்களை வெற்றி கொள்வதும் சிறந்த வேளாண்மை பிரயோகங்களிலிருந்தான நன்மைகளை பெற்றுக்கொள்ளவும் வேண்டும். வேளாண்மைத் துறையை சுயாதீனமாகவும் உற்பத்தித்திறன் வாய்ந்ததாகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாகவும் உருவாக்குவதற்கான இத்தகைய முயற்சிகள் எதிர்வரும் காலங்களில் நாட்டின் வளர்ச்சி உத்வேகத்தினை நோக்கி அதன் நேர்க்கணியப் பங்களிப்பினை உறுதிப்படுத்துவதில் துணைபுரியும்.

**பன்முகப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகள் முதலீட்டின் ஊடாக தயாரிப்புத் துறையினை வலுப்படுத்துவதன் மூலம் இலங்கையின் கைத்தொழில் துறையின் முழுமையாகப் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த ஆற்றலினை முற்று முழுதாக அடையவேண்டும்.** இலங்கையின் கைத்தொழில் துறை பணிகளிற்கு பின்னர் பொருளாதாரத்தின் இரண்டாவது பாரியளவான துறையாகவிருப்பதுடன் கைத்தொழில் துறையில் தயாரிப்புத் துறை 2018ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 15.5 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. எனினும், இலங்கையின் தயாரிப்புத் துறை அதன் பிராந்திய இணைத்தரப்புக்களான சீனா (ஏறத்தாழ 29 சதவீதம்), தாய்லாந்து (ஏறத்தாழ 27 சதவீதம்), மலேசியா (ஏறத்தாழ 22 சதவீதம்) மற்றும் வங்காளதேசம் (ஏறத்தாழ 17 சதவீதம்) ஒப்பிடுமிடத்து ஒப்பீட்டளவில் சிறியதாகவுள்ளது. அதையொத்ததாக தயாரிப்புத் துறையில் நடுத்தர மற்றும் உயர்ந்த தொழில்நுட்ப கைத்தொழில் உற்பத்தியின் பங்கு 2015இல் உலக வங்கியின் மூலங்களின்படி சிங்கப்பூர் (80 சதவீதம்), பிலிப்பைன்ஸ் (46 சதவீதம்), மலேசியா (43 சதவீதம்), சீனா (41 சதவீதம்), தாய்லாந்து (41 சதவீதம்), வியட்நாம் (40 சதவீதம்), இந்தியா (38 சதவீதம்), பாகிஸ்தான் (25 சதவீதம்) மற்றும் வங்காளதேசம் (9 சதவீதம்) போன்றவற்றுடன் ஒப்பிடுமிடத்து இலங்கையில் குறிப்பிடத்தக்களவு தாழ்ந்ததாக ஏறத்தாழ 7 சதவீதமாகவிருக்கிறது. இது நடுத்தர மற்றும் உயர்ந்த தொழில்நுட்ப உற்பத்திகளின் தயாரிப்பில் இலங்கை அதன் சக பிராந்திய நாடுகளிலிருந்து பின்தங்கியிருப்பதனைக் காட்டுகின்றது. தயாரிப்புத் துறையிலுள்ள மற்றையதொரு பிரச்சனை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியிலான தாழ்ந்த செலவினமாகும். இது புத்தாக்கத்தினைக் குறைத்து அதன் மூலம் போட்டித்தன்மையினைக் குறைக்கின்றது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் இலங்கையின் முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.1 சதவீதமாகவிருந்து பிராந்தியத்தில் அதிதாழ்ந்ததாகவிருந்த வேளையில் உலக வங்கியின் மிகவும் அண்மைய தரவுகளின் கிடைப்பனவின்படி சிங்கப்பூர் (2.2 சதவீதம்), சீனா (2.1 சதவீதம்), மலேசியா (1.3 சதவீதம்), இந்தியா (0.6 சதவீதம்), மற்றும் வியட்நாம் (0.4 சதவீதம்) என்பதாக உயர்வாகவிருக்கின்றது. இலங்கை மில்லியனில் 100 மக்கள் மாத்திரம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகக் காணப்படுகின்ற வேளையில் பிராந்தியத்திலுள்ள சகாக்கள் பாகிஸ்தானில் மில்லியனில் 294 மக்களிலிருந்து சிங்கப்பூரில் 6,730 மக்களாக ஒரு கணிசமானளவு உயர்ந்த எண்ணிக்கையிலான மக்களை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் தொழிலகமர்த்தியுள்ளன. எனவே, நீண்ட காலத்தில் கைத்தொழில் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கு குறிப்பாக, தொழில்நுட்ப மாற்றல் மற்றும் பிரயோகக் கைத்தொழில், ஆராய்ச்சி போன்ற வடிவங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை உயர்த்துவதில் இலங்கை அதிகளவில் முனைப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இதேவேளை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியிலான முதலீடு மற்றும் தொழில் நிலையை உள்ளடக்கிக் கொள்வதற்கான அளவீடுகள் இத்தகைய செயற்பாடுகளில் பொது மற்றும் தனியார் துறையின் ஈடுபாடு பற்றிய முழுமையான உள்ளடக்கத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக வலுப்படுத்தப்பட வேண்டும்.

**இலங்கையின் தொழில்முயற்சியாண்மையாளர்கள் குறுகிய சந்தைகளை இலக்காகக் கொண்ட சிறியளவு உற்பத்தியிலிருந்து பொருளாதார அளவுச் சிக்கனங்களிலிருந்து நன்மையடைவதற்கு பாரியளவு தொழிற்பாடுகளிற்கு நிலைமாறுவதற்கு ஆதரவளிக்கப்பட வேண்டும்.** இலங்கையில் பெரும்பாலான பொருளாதாரச் செயற்பாடுகள் நுண்பாக மற்றும் சிறியளவிலான தொழிற்பாட்டாளர்களால் தொழிற்படுத்தப்படுகின்றது. அத்தகைய சிறியளவு தொழிற்பாடுகளில் சிலவேளைகளில் சிறப்பு காணப்படக்கூடுமெனினும் பொருளாதார அளவுச் சிக்கனத்தின் நன்மை நாட்டிற்கு உரித்தாவதில்லை. இதன்படி, உயர்ந்த உற்பத்திச் செலவினமும் தாழ்ந்த தரமுமுள்ள உற்பத்திகளும் பணிகளும் இலங்கையிலுள்ள அநேகமான உள்ளூர் உற்பத்தியாளர்களினாலும் நுகர்வோரினாலும் முகங்கொடுக்கப்படும் முக்கிய பிரச்சனைகளாகும். உயர்ந்த உள்நாட்டு உற்பத்திச் செலவுகள் உள்நாட்டு விலைகளை தாழ்ந்த இறக்குமதி விலைகளுடன் ஒப்பிடுமிடத்து உயர்வாகவிருப்பதற்கு வழிவகுப்பதுடன் உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்கு அடிக்கடி வரிகளை விதிப்பதற்கும் திருத்துவதற்கும் அரசாங்கத்தினை வற்புறுத்துகின்றன. வரி வடிவில் அரசாங்கம் அரசிறையினை

பெற்றுக்கொள்கின்றதாயினும் இந்த நடைமுறைச் சந்தை செயற்பாட்டினை விரிவுபடுத்தி உயர்ந்த சந்தை விலைகளுக்கு வழிவகுப்பதனால் இறுதி நுகர்வோரினை அசௌகரியமாக்கும். மேலும், அநேகமான ஏற்றுமதியினை நோக்காகக் கொண்ட தோற்றம் பெற்றுவரும் சந்தைகள் பொருளாதார அளவுச் சிக்கனத்தினை மூலதனமாக்கிக் கொள்வது கணிசமான இலாபங்களை அடைவதற்கு அவற்றிற்கு இயலச் செய்கின்றது. எடுத்துக்காட்டாக இலங்கையில் உயர்ந்த சதவீதத்திலான சிறியளவுடைய நெல் வயல்களிலுள்ள மாவட்டங்களில் ஒரு ஹெக்டேயர் ஒன்றிற்கான விளைச்சல் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்ட அதேவேளை, ஒப்பீட்டளவில் பாரிய நெல் வயல்களைக் கொண்ட மாவட்டங்கள் ஒரு உயர்ந்த சராசரி விளைச்சலினையும் பதிவுசெய்து பொருளாதார அளவுச் சிக்கனம் பிரசன்னமாகயிருப்பதனைக் குறித்து நிற்கின்றது. மேலும், நிலப்பரப்பு பெரிதாகவிருக்கும் போது இயந்திரங்களின் பயன்பாடு அதிக உற்பத்தித்திறனாகவிருக்கும். நிலங்களை வேளாண்மை சமூகங்களாகச் சேர்ப்பதற்கும் அதிகளவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கும் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கும் அனுமதிப்பதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களிற்கு அதிகாரமளிக்கவும் சேர்க்கப்பட்ட பரப்புக்களை அடிப்படையாகக் கொண்டு இலாபத்தினைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஊக்குவிப்பது ஒரு சாத்தியமான தீர்வாகவிருக்கும். மேலும், அத்தகைய சமுதாயங்கள் உயர்வான பேரம்பேசும் ஆற்றலினையும் நன்மையடையும் இதையொத்த சிறியளவிலான வியாபாரப் பிரிவுகள் பணிகள் துறையிலும் ஒரு பொதுவான பிரச்சனையாகவிருக்கின்றது. உதாரணமாக ஒரு தனியாகத் தொழிற்படுகின்ற பேருந்து அல்லது வாடகைக் கார் ஒரு தனியான பிரிவாகவிருந்து தனிப்பட்ட இலாபத்தினை உச்சப்படுத்துவது தவிர்ந்த வேறேதும் இலக்கின்றித் தொழிற்படுத்தப்படும். இத்தகைய தொழிற்பாடுகளின் காரணமாக தொடர்புபட்ட ஒன்றிற்கு மேற்பட்ட கம்பனிகளை இணைக்கப்படுவதும் இழக்கப்படுவதுடன் தனிப்பட்ட இலாபங்களின் குறைவிற்கும் அடிக்கடி வழிவகுக்கின்றன. அரசிற்கும் தனியாருக்கும் சொந்தமான ஊர்திகள் பயன்படுத்தக்கூடிய ஒரு பிராந்தியத்தின் போக்குவரத்துத் தொழிற்பாடுகள் தொடர்பில் தீர்மானமெடுக்கும் ஆற்றலுடன் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் இந்த நிலைமை மேம்படுத்தப்பட முடியும். இந்த நிறுவனம் ஊர்தியின் தொடரினை முகாமை செய்தல், செயற்றிறன் வாய்ந்த பராமரிப்பு, அனைத்தையுமுள்ளடக்கிய நேர அட்டவணையைத் தயாரித்தல், தாழ்ந்த இலாபம் கொண்ட நேரகாலத்தினையும் தாழ்ந்த பாதைகளையும் சமநிலைப்படுத்துதல் போன்றவற்றிற்குப் பொறுப்பாகவிருக்கும். அவ்வாறான முறைமை வழங்கப்படுகின்ற பணிகளின் செயற்றிறன் மற்றும் தாக்கத்தினை அதிகரிக்கின்ற வேளையில் பொதுப் போக்குவரத்தினை அதிகளவில் கவர்ச்சிமிக்கதாக்கும். எனவே, சிறியளவிலான துண்டாக்கப்பட்ட நிறுவனங்களைப் பாரியளவில் வியாபார முயற்சிகளாக நிலைமாற்றி அத்தகைய தொழிற்பாடுகள் பொருளாதார அளவுச் சிக்கனங்களிலிருந்து நன்மையடைவதுடன் பொருளாதாரத்தின் வளர்ச்சி இலக்குகளை நோக்கி பங்களிப்பதனை இயலச்செய்கின்ற அதேவேளை சமூகத்தின் ஒட்டுமொத்த நலன்களையும் உயர்த்துவதில் கொள்கை முனைப்பாக இருக்க வேண்டும். கைத்தொழில்களைப் பொறுத்தவரையில் நாட்டின் முழுமையாகப் பயன்படுத்தப்படாத ஏற்றுமதி உள்ளார்ந்த ஆற்றலினை அடைந்து கொள்வதிலும் இந்த நிலைமாற்றம் துணைபுரியும்.

**கடந்த பல ஆண்டுகளாக நாட்டின் தொழிலின்மை வீதம் தொடர்ந்தும் தாழ்ந்ததாகவிருந்த வேளையில் முன்னோக்கிச் செல்கையில் பொருளாதார வளர்ச்சியை நோக்கி தொழிலாளர் வளங்களினது பங்களிப்பினை மேம்படுத்துவதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் மறுசீரமைப்புக்கள் தேவைப்படுகின்றன.** ஒரு உயர்ந்த நடுத்தர நாடொன்றாக இலங்கை முன்னேற்றமடைவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு தொழிற்படையினை உயர் தேர்ச்சிக்குட்படுத்துவது இன்றியமையாததாகும். கடந்த பல ஆண்டுகளாக இலங்கையின் தொழிலின்மை வீதம் தாழ்ந்த வீதத்தில் அவதானிக்கப்பட்டு தொழிலாளர் வளங்களின் உற்பத்தித்திறன் வாய்ந்த பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் உள்ளார்ந்த ஆற்றலினை உயர்த்துவதற்கும் நன்கு ஆலோசிக்கப்பட்ட தொழிற்சந்தை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. தொழிற்சந்தையின் ஒரு முதன்மையான கரிசனையாகவிருப்பது பெண்களின் தாழ்ந்த தொழிற்படைப் பங்கேற்பாகும். பெண்களுக்கிடையிலான பல்கலைக்கழக அனுமதி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த போதிலும் குழந்தை மற்றும் முதியோர் பராமரிப்பு வசதிகள் போதாமை, விரிவடைகின்றமை பால் அடிப்படையிலான சம்பள இடைவெளிக்கு இட்டுச்செல்கின்ற வேலைத்தளத்திலான பாரபட்சம், நெகிழ்ச்சியற்ற வேலை நேரங்கள், இறுக்கமான தொழில் சட்டங்கள் மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தின் பற்றாக்குறை போன்றவை தொழில் சந்தையில் பெண்களின் பலயீனமான பங்குபற்றலுக்கு வழிவகுத்தன. தனியார் துறை குறிப்பாக, வெளிநாட்டுக் கம்பனிகளினால் கோடிட்டுக் காணப்பட்ட முக்கிய கரிசனையாக இலங்கைத் தொழிலாளர்களின் ஆங்கிலமொழித் தேர்ச்சியின்மை மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆற்றல்கள் அவர்களின் தொழிலாற்றலைச் சவாலாக்கியுள்ளது. அதேவேளை, நாட்டினை ஒரு கவர்ச்சிகரமற்ற முதலீட்டுச் சேரிடமாகவும் உருவாக்கியுள்ளது. ஈ.எவ். ஆங்கிலப் புலமைச் சுட்டெண் 2018இன்படி பிராந்திய இணைத்தரப்பு நாடுகளான சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், மலேசியா, இந்தியா மற்றும் வியட்நாம் போன்றவை உயர்ந்த மற்றும் நடுத்தர புலமையினை வெளிப்படுத்துகின்றதுடன் ஒப்பிடுமிடத்து இலங்கை பலயீனமான ஆங்கில புலமை கொண்ட நாடொன்றாக அடையாளம் காணப்பட்டுள்ள வேளையில் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின்படி 2018இன் முதலரைப்பகுதியில் கணனி

அறிவு தொடர்ந்தும் கடுமையான தாழ்ந்தமட்டத்திலுள்ளது. தயாரிப்புத்துறை மற்றும் ஏற்றுமதி வேளாண்மைத் துறைகளின் தாழ்ந்த மற்றும் நடுத்தர தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களது தட்டுப்பாடு தொழிலாளர்களுக்கான செலவினத்தின் அதிகரிப்பிற்கும் வழிவகுத்து ஏற்றுமதி செய்யக்கூடிய உற்பத்திகளின் போட்டித்தன்மையினைப் பாதிக்கின்றது. இத்தகைய பிரச்சனைகள் பொருளாதார வளர்ச்சிக்கு அமைப்பியல் தடங்கல்களை உருவாக்குகின்ற வேளையில் சிறந்த பல்கலைக்கழக மற்றும் தொழில்கல்வி மீதான சந்தர்ப்பங்களை வழங்குவதனூடாக தொழிற்படையினை உயர்ந்த தேர்ச்சிக்குரியதாக்குவதன் மூலம் மனித மூலதனத்தை உயர்த்துதல் மற்றும் பெண்களின் உயர்வான தொழிற்படை பங்கேற்பினை ஊக்குவித்தல் போன்றவை தொடர்பில் பல்வேறு கொள்கை முயற்சிகள் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ளன. நம்பிக்கைக்குரியதும் செலவிடக்கூடியதுமான ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் குழந்தை நலக் காப்பகங்களை உருவாக்கி அதன் மூலம் தாய்மார் வேலைக்குத் திரும்புவதனை இயலச்செய்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், வேலைத்தளத்திலும் பொதுப் போக்குவரத்திலும் பெண்களின் மீதான பாலியல் துன்புறுத்தல்களினைத் தடுப்பதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பூச்சிய சகிப்புத்தன்மையை ஊக்குவிப்பதற்கான கடுமையான ஒழுங்குவிதிகள் போன்றவை அறிமுகப்படுத்தப்படுகின்ற அதேவேளை, கல்விகற்ற ஆனால் பெருமளவில் முழுமையாகப் பயன்படுத்தப்படாத பெண்களின் ஊழியப் படையினை கவர்ந்துகொள்வதற்கு பகுதிநேர மற்றும் நெகிழ்ச்சியான வேலைநேரங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் தொழிற்சந்தையின் வளர்ந்துவரும் தேவையுடன் கல்வி முறைமை இணைக்கப்படவேண்டியதுடன் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகப் பாடவிதானங்கள் கிரமமாக இற்றைப்படுத்துவதன் மூலம் கல்வியின் தரம் மேம்படுத்தப்படவேண்டிய அதேவேளை, பட்டதாரிப் பயிற்சியினூடாக தொழிற்சந்தையில் குறிப்பாக தனியார் துறை தேவைப்பாடுகளுடன் இணைந்ததாக மாணவர்கள் அதிகளவு தயார்படுத்தப்படவேண்டும். ஆங்கிலம் மற்றும் தகவல்தொழில்நுட்ப ஆற்றல்கள் மற்றும் தற்போதைய நாட்களில் தொழில்தருநர்களினால் உயர்ந்தளவு எதிர்பார்க்கப்படுகின்ற குழுக்களாகப் பணிபுரிதல் மற்றும் பொறுப்புக்கூறுவதாகவிருத்தல் போன்ற ஏனைய இலகுதேர்ச்சிகளை மேம்படுத்துவதில் விசேட அக்கறை செலுத்தப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நிபுணர்களையும் தொழிலில் நடுத்தரமட்டத்திலுள்ள தொழில் வல்லுனர்களையும் வெளிப்படைத் தன்மையான அடிப்படையைக் கவர்வதன் மூலம் இலங்கையின் தொழிற்சந்தைக்கு வெளிநாட்டு ஆற்றல்களை அனுமதிப்பதற்கான வழிமுறைகளும் எடுக்கப்படக்கூடுமென்பதுடன் இது அறிவினைப் பகிர்ந்துகொள்வதனை உயர்த்துகின்ற வேளையில் தொழிற்சந்தையில் போட்டியினை அதிகரித்து சிறந்த உற்பத்தித் திறனுக்கு வழிவகுக்கும். மேலும், பின்தங்கிய பிரதேசங்களிலுள்ளோருக்கு நிதியின் கிடைப்பனவினை மேம்படுத்துவது தொழில்முயற்சியாண்மை அம்சங்களினை மேம்படுத்தும். ஒட்டுமொத்தமாக வயதடைந்துவரும் குடித்தொகையின் பின்னணியில் இத்தகைய முயற்சிகள் தொழில்சந்தைக்கு அதிக தொழிலாளர்களை கவர்ந்திழுப்பது மட்டுமன்றி அதிகரித்த தொழிலாளர் உற்பத்தித்திறனின் ஊடாக நாட்டின் வளர்ச்சிச் செய்முறையில் தொழிற்படையின் பங்களிப்பினை உயர்த்தும். இத்தகைய வழிமுறைகள் இறுதியாக தொழிலாளர்களாலும் அவர்களது தங்கியிருப்போரினதும் வாழ்வாதாரங்களையும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துகின்ற அதேவேளை, சமத்துவத்தினை உயர்த்துவதுடன் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வறுமையினைக் குறைக்கும்.

**பொருளாதாரத்தின் வளர்ச்சியின் உள்ளார்ந்த ஆற்றலினை அதிகரிப்பதற்கு பொதுக்கல்வி மற்றும் உயர்கல்வியினை சீர்திருத்துவதற்கான பொருத்தமான சீர்திருத்தங்கள் இன்றியமையாதவை.** வயதுசார்ந்த குடித்தொகையின் நன்மைகள் மற்றும் தாழ்ந்த கூலி பிராந்தியத்தின் போட்டித்தன்மை நன்மைகள் அருகிவருகின்றதுடன் பொருளாதார வளர்ச்சிக்கான அடுத்தகட்டம் கல்வியினூடாக நாட்டின் மனித மூலதனத்தின் தரத்தினை தரமுயர்த்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். கல்வித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட எண்ணற்ற வழிமுறைகள் ஆரம்பம் மற்றும் இரண்டாந்தரக் கல்வியில் மாணவர்களின் நுழைவு மற்றும் பால் ரீதியான சமத்துவம் போன்ற நியதிகளில் வரவேற்கத்தக்க சாதனைகளை அடைந்துகொள்வதற்கு இலங்கைக்கு இயலச்செய்த போதிலும் குறிப்பாக கற்றலின் விளைவுகளின் நியதிகளில் அதன் பிராந்திய சகாக்களின் சாதனைகளை அதிகரிக்க கல்விமுறைமை தவறியுள்ளது. விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் மற்றும் தொழிற்கல்வி பாடப்பரப்புகளில் மாணவர்களின் குறைந்த ஈடுபாடு தொழில்நுட்ப ஆற்றல் கொண்ட நுழைவோருக்கான தொழிலாளர்களுக்கான கேள்வி பூர்த்திசெய்யப்படாமலிருப்பதற்கு வழிகோரியுள்ளது. இந்தவகையில் ‘13 ஆண்டுகளுக்கான உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வித் திட்டம்’, ‘அண்மிய பாடசாலையே சிறந்த பாடசாலை’ போன்ற முயற்சிகள் மற்றும் கலைசார்ந்த பாடங்களுக்கும் விரிவாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதக்கல்வியின் அறிமுகம் போன்ற முயற்சிகளினூடாக கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் காணப்படுகின்றன. எனினும், தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் மற்றும் வசதிகளின் நியதிகளில் பற்றாக்குறையான வளங்கள் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதப் பாடவிதானத்தில் மாணவர்களது ஈடுபாட்டினை மட்டுப்படுத்தி இத்தகைய பாடப்பரப்புகளில் நுழைவோரினை ஊக்கமிழக்கச் செய்கின்றது. தொழிற்சந்தையின் அதிகரித்துவரும் கேள்விகளினைப் பூர்த்திசெய்வதற்காக கல்வி முறையினை மீளவடிவமைப்பதன் மீதான முதலீட்டின் தாமதங்கள்

## சிறப்புக்குறிப்பு 03

## வேகமான முதியோர் குடித்தொகைக்கு மத்தியில் நாடளாவிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றிற்கான அவசியம்


**மாற்றமடைந்துவரும் குடித்தொகையியல் அமைப்பு**

சமூகக் குறிகாட்டிகளின் நியதிகளில், இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான முன்னேற்றம் அதன் பொருளாதார குறிகாட்டிகளுடன் தொடர்பான முன்னேற்றங்களுடன் ஒப்பிடுகையில் மிகத் திருப்திகரமானதாக காணப்படுகிறது. இது, இலங்கையின் குடித்தொகைப் பண்பு மற்றும் நோய்களின் பரவும் தன்மை என்பன அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களுக்குச் சமமான நிலைக்கு மிக நெருக்கமாகக் காணப்படுவதற்கான காரணங்களிலொன்றாகும். அதிகரித்துச் செல்கின்ற வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் மற்றும் புலம்பெயர்தல் என்பனவற்றுடன் சேர்ந்து பிறப்பு மற்றும் இறப்பு வீதங்கள் வீழ்ச்சியடைந்து வருகின்றமையின் காரணமாக, கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் நாட்டின் குடித்தொகையின் பிரமிட் அமைப்பு குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடைந்திருக்கிறது[1]. இதன்விளைவாக, பிறப்பு வீத மட்டம் மிகக் குறைந்தளவில் பதிவுசெய்யப்பட்டிருக்கும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களில் முதல் நாடுகளிலொன்றாக இலங்கை விளங்குவதனால் அதன் குடித்தொகை மிகக்குறுகிய எதிர்காலத்தில் வயது முதிர்ந்தவர்களை உயர்ந்தளவிற்கு செறிவாகக் கொண்ட ஒரு அமைப்பிற்கு விரைவாக மாற்றமடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் வயது முதிர்ந்த குடித்தொகையினரின் பங்கு 2021 அளவில் 16.7 சதவீதத்திற்கும் 2041 அளவில் மேலும் 24.8 சதவீதத்திற்கும் (த சில்லா 2015) உயர்வடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இது, அடுத்த இரண்டு தசாப்தங்களுக்குள் ஒவ்வொரு நான்கு ஆட்களுக்குமொருவர் 60 வயதினைக் கொண்டவராக அல்லது அதற்கு மேற்பட்ட வயதினராக இருப்பார் என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

வரைபடம் சி.கு 3.1

**வயதுரீதியான சனத்தொகையின் சதவீதப் பரம்பல்**

**1971 – 2041**




மூலம் : டிசில்வா (2015), தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நீண்ட ஆயுளைக் கொண்ட குடித்தொகை, சுதந்திரத்திற்குப் பின்னரான யுகத்தில் நாடு சமூக உட்கட்டமைப்பில் செய்துகொண்ட முதலீடுகளின் நன்மைகளை எடுத்துக்காட்டுவதுடன் (பார்க்க, மேற்கோள் ஒஸ்மானி 1993) குடித்தொகை முதிர்ச்சியடைவது பரந்தளவிலான சவால்களைக் கொண்டு வருகின்றது. இப்பின்னணியில், அத்தகைய சமூக-பொருளாதார சவால்களைப் பகுப்பாய்வு செய்வதும் உலகளாவிய அனுபவங்களின் அடிப்படையில் சாத்தியமான தீர்வுகளை அடையாளம் காண்பதும் இன்றியமையாதனவாகும். அனைவருக்கும் நலனோம்புகையினை உறுதிப்படுத்துகின்ற வேளையில் வயது முதிர்ந்த குடித்தொகையின் இறைச் சுமையினை குறைப்பதற்காக, பரந்தளவு அபிவிருத்தி உபாயமொன்றிற்குள் வயது முதிர்ந்த குடித்தொகையினருக்கு ஆதரவளிக்கும் சூழலொன்றினை இயலுமைப்படுத்தும் விதத்தில் தேசியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்க இது உதவும்.

**வயது முதிர்வின் சமூக, நலக்கவனிப்பு மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள்**

பரிணாமம் வளர்ச்சியடைந்து வருகின்றபோதும், இலங்கையரின் கலாச்சாரம் வயது முதிர்ந்தவர்களைக் கவனத்தில் கொள்கின்றமை உள்ளிட்ட குடும்பப் பெறுமானங்களைச் சுற்றியே கணிசமானளவிற்கு காணப்படுகிறது. இதன்படி, குடும்பத்திலுள்ள வயது முதிர்ந்தவர்களைப் பேணுவது இளம் தலைமுறையினரின் முக்கிய பொறுப்பு என கருதப்பட்டு வருகிறது. குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகைமதிப்பு - 2012, 99.0 சதவீதமான வயது முதிர்ந்தோர் வீடுகளில் வசிக்கின்ற வேளையில் 1.0 சதவீதமானோர் வயோதிபர் இல்லங்களில் வசிப்பதனை எடுத்துக்காட்டுகின்றது. இருப்பினும்கூட, விரைவாக மாற்றமடைந்துவரும் வாழ்க்கைமுறை, நகரமயமாதல் மற்றும் குடித்தொகையின் நிலைமாறும் தன்மை என்பன இப்பாரம்பரிய சமூகப் பாதுகாப்பு முறையில் அழுத்தத்தினைத் தோற்றுவித்துள்ளன. மிகக்குறிப்பாக, சிறிதாகிவரும் குடும்ப அளவு, கிராமப்புறங்களிலிருந்து நகரப்புறங்களுக்கான உள்ளக குடிப்பெயர்வு அல்லது சிறந்த பொருளாதார வாய்ப்புக்களைத் தேடி வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்வதன் காரணமாக விரிவான குடும்பங்களின் வகிபாகம் குறைவடைந்து போகின்றதன்மை அதேபோன்று வயது முதிர்ந்தவர்களை கவனித்துக்கொள்வது மற்றும் ஆதரவளிப்பது தொடர்பான மனோபாவங்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் என்பன இந்நிகழ்விற்குப் பெருமளவிற்கு பங்களிக்கின்றன. எனினும், இம்மாற்றத்தினை உள்ளடக்குகின்ற விதத்தில், ஓய்வூகால நன்மைகள் உட்பட, வயது முதிர்ந்தோர் நலக் கவனிப்பு வசதிகளும் ஏனைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும் போதுமானளவிற்கு விரிவடையவில்லை. எனவே, வயது முதிர்ந்த குடித்தொகையினர், வயது முதிர்ந்தவருகின்ற அவர்களின் குடும்ப உறுப்பினர்களிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கின்றனர். இச்சமூக ரீதியான சவால், உயர்வடைந்துவரும் தங்கியிருப்பு விகிதங்களினால் மேலும் தீவிரமடையும் போல்தோன்றுவது, பாரம்பரியமான குடும்பத்தினை அடிப்படையாகக் கொண்ட நலமுறைகளுக்கு ஆதரவும் துணையுமாக அமையக்கூடிய வயது முதிர்ந்தோர் நலக் கவனிப்பிற்கான தேவையினை துலாம்பரப்படுத்துகின்றது.

நாட்டில் இடம்பெற்று வருகின்ற குடித்தொகை பண்பு மாற்றங்களுக்குப் புறம்பாக, வயது முதிர்ந்த குடித்தொகையினரின் சுகாதார தோற்றப்பாடும் மாற்றடைந்திருக்கின்றது. பரவக்கூடிய அல்லது கிருமித்தொற்று நோய்கள் குறைவடைந்திருப்பதுடன்,

1 இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2012இன் சிறப்புக்குறிப்பு 07: குடித்தொகையின் வயது அமைப்பு மாற்றத்தின் பொருளாதார விளைவுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2015இன் சிறப்புக்குறிப்பு 09: வயது முதிர்ந்தோர் குடித்தொகை: சவால்களும் முன்னோக்கிய பாதையும் ஆகியவற்றைப் பார்க்கவும்.

1

உயர்வடைந்துவரும் வாழ்க்கைத் தரம், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் போன்றவற்றின் காரணமாக தொற்றாநோய்களின் நிகழ்வு வயது முதிர்ந்தோரை முக்கியமாக பாதித்துவருகிறது. இந்நிலைமாற்றுத் தன்மைகளின் நியதிகளில் வயது முதிர்ந்த குடித்தொகையினரின் தேவைகளைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரக் கவனிப்பு முறைமைகள் இன்னமும் குறிப்பிடத்தக்களவிற்கு பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன. இலங்கையில் வயது முதிர்ந்த ஆட்களின் கணிசமான எண்ணிக்கையினர் மார்பு தொடர்பான நோய்கள், புற்றுநோய், நீரிழிவு, மூட்டு வாதம், மனஅழுத்தம் மற்றும் ஞாபகசக்தி இழப்பு போன்ற தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்நோய்களைக் கட்டுப்படுத்துவது வயது முதிர்ந்தோரின் நலனோம்புகைகளையும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்தும். எனினும், வயது முதிர்ந்த குடித்தொகையினருக்கு சிறந்த தரமான நலக்கவனிப்புப் பணிகளை வழங்குவது சவால்மிக்க பணியேயாகும். பெரும்பான்மையான குடித்தொகையினருக்கு, புற்றுநோய் மற்றும் இருதய நோய்களுக்கான அவசர நலக் கவனிப்புக்களுக்கான உள்ளக சிகிச்சைகளுக்காக அரசாங்கம் பெருமளவு நிதியினை வழங்குகின்றவிடத்து, தொற்றா நோய்களுக்காக கவனிப்பில் கணிசமான விகிதம் தனியார் துறையினால் வழங்கப்படும் பணிகளுக்காக நோயாளர்களினால் நிதியிடப்படுகிறது. இது வயது முதிர்ந்த குடித்தொகையினரின் தேவைப்பாடுகளுக்கு பொருந்தத்தக்க விதத்தில் அரச, தனியார் நலக்கவனிப்புப் பணிகள் விரிவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தினைக் காட்டுவதுடன் அரச நலக்கவனிப்புப் பணிகளை வழங்குவதுடன் இணைந்து காணப்படும் அதிகரித்துவரும் இறைச்சுமையினையும் எடுத்துக்காட்டுகிறது.

மேலும், தொழிற்படையின் அளவு மற்றும் உள்ளமைப்பில் வயது முதிர்ந்தவர்களின் தாக்கம், பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான தாக்கங்களைக் கொண்டிருக்கும். பிறப்பு வீதம் குறைவாகவும் குறைவடைந்து வருவதன் காரணமாக, இலங்கை தொழிற்படையில் குறைவான வளர்ச்சியை அல்லது வீழ்ச்சியை எதிர்நோக்கும். நாடு, உயர்ந்த தொழிற்படைப் பங்கேற்பினை ஊக்குவிப்பதன் மூலம் அல்லது வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு திறந்துவிட்டாலொழிய, தொழிற்படையில் ஏற்படும் வீழ்ச்சி பொருளாதார வளர்ச்சியின் மீது எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். பொருளாதார வளர்ச்சி குறைவடைந்து வரும் பொழுது, சுருங்கிவரும் தொழிற்படையின் மீது தங்கியிருக்க வேண்டியிருக்கும் அதிகரித்துவரும் வயது முதிர்ந்தோரின் தேவைகளை நிறைவேற்றுவது கூடியளவு சவால்மிக்கதாக அமைந்து அரசாங்கத்திற்கு மேலும் சுமைகளை தோற்றுவிக்கும். தொழிற்படை வயது முதிர்ந்ததாக மாறிவருகையில் அதன் அளவும் சுருங்குவது பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வினைத்திறனின் மீது தாக்கமொன்றினை கொண்டிருக்கக்கூடும். தொழிலாளர் சந்தையில் ஏற்படும் மாற்றங்களைத் தவிர, வயது முதிர்ந்துவரும் குடித்தொகை நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள் போன்ற மற்றைய வழிகளினூடாக பொருளாதார நடவடிக்கைகளையும் வளர்ச்சி செயலாற்றத்தினையும்கூட பாதிக்கும். வயதுடன் சேர்ந்து வருமான மட்டங்கள் வீழ்ச்சியடையும் பொழுது நுகர்வு மட்டங்களும் வீழ்ச்சியடைவதுடன் குறைந்த நுகர்வின் காரணமாக பொருளாதார வளர்ச்சியும் எதிர்மறையாக பாதிக்கப்படக்கூடும். அதேபோன்று வயதுடன் இணைந்து சேமிப்பு ஆற்றலும் குறைவடையும். இது சேமிப்பு மட்டங்களின் தாக்கங்களை விளைவித்து அதன் மூலம் முதலீட்டின் மீது தாக்கங்களைக் கொண்டிருக்கச் செய்யும்.


**இலங்கையில் வயது முதிர்ந்தோருக்கான சமூகப் பாதுகாப்பு**

இலங்கையில் வயது முதிர்ந்த குடித்தொகை அதிகரித்துவருவது, வயது வந்தவர்கள் தரமான வாழ்க்கையினையும் கௌரவத்தினையும் பற்றிப் பிடித்துக்கொள்ளக்கூடிய பாதுகாப்பான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான தேவையினை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இலங்கையில் முறைசார்ந்த துறை வேலையாட்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை தொழில்நிலை வகையின் அடிப்படையில் பரந்தளவிற்கு வகைப்படுத்த முடியும். அரச ஊழியர்களுக்கும் அரசதுறை ஓய்வூதியத் திட்டம் ஆயுதப் படையினருக்கான ஓய்வூதியத் திட்டம், விதவைகள், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் அரச ஊழியர் சேம நிதியம் என்பனவும் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. அரச துறை ஓய்வூதியத் திட்டம் பங்களிப்புச் செலுத்தப்படாததொரு திட்டமாகும். இத்திட்டம் அரச துறை ஊழியர்கள் அவர்களுடைய ஆயுள்காலம் முழுவதிலும் அரசாங்கத்திடமிருந்து மாதந்தோறும் வருமானமொன்றினை பெறுவதனை உறுதிப்படுத்துகின்றது. எனினும், விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் பங்களிப்புத் தொகையைக் கொண்டதாக இருப்பதுடன் ஊழியர்கள் இறந்ததன் பின்னர் வாழ்க்கைத் துணை, 18 வயதிற்குட்பட்ட தங்கியிருக்கும் பிள்ளைகள் அல்லது வயதினைக் கருத்திற்கொள்ளாது உடல் ஊனமுற்ற பிள்ளைகளுக்கும் வழங்கப்படுகிறது. முறைசார்ந்த தனியார் துறை ஊழியர்கள் அவர்கள் ஓய்வுபெறும் வேளையில் ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றின்கீழ் நன்மைபெற உரித்துடையவர்களாவர். ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஊழியர் மற்றும் தொழில்தருநர் இருவரினாலும் பங்களிக்கின்ற திட்டமாக இருக்கின்ற வேளையில் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில்தருநர் மட்டும் பங்களிக்கின்றார். ஊழியர் ஓய்வின் போது இந்நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முழுத்தொகையினையும் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடையவராக இருப்பதுடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், வாழ்க்கைச் செலவின்பொருட்டு மாதாந்த வட்டியை உழைத்துக் கொள்வதற்காக தவணை வைப்புக்களில் முதலீடு செய்யப்படுகிறது. அரசாங்கமும் முறைசாராத் துறையிலுள்ள வேளாண்மையாளர்கள், மீனவர்கள் மற்றும் சுயதொழில் புரிவோருக்காக ஓய்வூதியத் திட்டங்களை அறிமுகப்படுத்தியதெனினும் இத்திட்டங்களின் பிரபல்யம் மிகக் குறைவேயாகும். அதேவேளை, அரச உதவி மாதாந்தப்படியும் வயது முதிர்ந்தோர் உதவி நிகழ்ச்சித்திட்டமும் இலங்கையின் வருமானம் குறைந்த வயது முதிர்ந்தோருக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ளன. 2017இல் அரசாங்கம் 100 வயதிற்கு மேற்பட்ட பிரசைகளுக்கு அத்தகைய தனிப்பட்டவர்களின் பாதுகாப்பினையும நலன்புரிகளையும் உறுதிப்படுத்தும் நோக்குடன் ரூ.5,000 மாதாந்தப் படியினை வழங்குவதற்கு ஒப்புதலளித்தது. இலங்கையில் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் ஏறத்தாழ 50 சதவீதமாக இருப்பதனால் (2018ஆம் ஆண்டுக்கான இலங்கை தொழிற்படை அளவீட்டின் 4ஆம் காலாண்டு அறிக்கையின்படி 52.2 சதவீதம்) குடித்தொகையின் கணிசமான எண்ணிக்கையினர் மேலே குறிப்பிடப்பட்ட ஓய்வூதிய நன்மைகளுக்கு வெளியேயே காணப்படுகின்றனர். மேலும் தொழிற்படையில் ஏறத்தாழ 60 சதவீதத்தினர் முறைசாரா துறையைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன் (இலங்கை தொழிற்படை அளவீட்டின் காலாண்டு அறிக்கையின் படி 2017இல் 58.0 சதவீதம்) வரையறுக்கப்பட்ட

அளவினரே வயது முதிர்ந்தவர்களுக்கான நன்மையினை பெறக்கூடிய வழிவகையினைக் கொண்டிருந்தனர். ஆகவே, வயது முதிர்ந்த குடித்தொகையினரில் பெரும்பான்மையானோர் எந்தவொரு திட்டத்தினாலும் உள்ளடக்கப்பட்டிருக்காத வேளையில் பெறப்படுகின்ற நன்மைகளும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உறுதிப்படுத்த போதுமானதாக இல்லை.

வரைபடம் சி.கு 3.2

**இலங்கையின் 60 வயதும் அதற்கு மேற்பட்டதுமான சனத்தொகையின் ஓய்வூதிய வரம்புகள் (2012)**




*மூலம்* : அருணதிலக (2015)

மேலும், தற்போதைய ஓய்வூதியக் கட்டமைப்பு பங்களிப்பற்ற திட்டமொன்றாக இருப்பதனால் ஏற்கனவே மட்டுப்படுத்தப்பட்டுள்ள இறை மூலங்களின் மீது கணிசமான சுமைகளை ஏற்படுத்துகிறது. ஓய்வூதியத்தின் மீதான அரசாங்கத்தின் செலவினம் தொடர்ந்தும் அதிகரித்து 2018இல் ரூ. 194.5 பில்லியனாக விளங்கியது. இது அரசாங்கத்தின் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 9.3 சதவீதத்திற்கு வகைகூறியது. 2019 பெப்புருவரி அளவில், ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 623,417 ஆக காணப்பட்டது. இவர்கள் மொத்தக் குடித்தொகையில் 2.9 சதவீதத்தினர்களாவர். எனவே அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தின் ஏறத்தாழ 10 சதவீதம் மொத்த குடித்தொகையில் 3 சதவீதத்தினருக்கு குறைவானவர்களுக்கு நேடியாக செலவிடப்படுகின்றது. இது விரைந்து வயது முதிர்ச்சியடைந்து வருபவர்களைக் கவனத்தின் கொள்கையில் வலுவான முறையொன்றல்ல. 2016இல் நடாத்தப்பட்ட அரச மற்றும் அரசுசார் துறையிலுள்ள ஊழியர்களின் தொகைமதிப்பீட்டின் படி, ஆயுதப்படையினர் நீங்கலாக 84,084, (மொத்த ஊழியர்களின் 7.6 சதவீதத்தினர்) அரச மற்றும் அரசுசார் துறை ஊழியர்கள் 56 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருந்ததுடன் 854,300 பேர் (77.4 சதவீதத்தினர்) 30 தொடக்கம் 55 வயதிற்கிடைப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். இது 2020 அளவில் 80,000 இற்கு மேற்பட்டவர்கள் ஓய்வூதியம் பெறுவோர்களுடன் சேர்ந்துகொள்வதனால் அரசாங்கம் அவர்களின் ஓய்வூதியத்தினையும் சுமக்கவேண்டியிருப்பதுடன் இனிவரும் 30 ஆண்டு காலப்பகுதியில் 800,000 இற்கு மேற்பட்ட மேலதிக ஓய்வூதியகாரர்களையும் சுமக்கவேண்டியிருக்கும். அரசதுறை ஓய்வூதியத் திட்டம் கட்டாய நன்மைகளுடன் கூடிய பங்களிக்கப்படாத திட்டமொன்றாக இருப்பதனால் அரச செலவினம் மீதான சுமை இனிவரும் ஆண்டுகளில் உயர்வடையும். இறுக்கமான இறை நிலைமையினைக் கருத்திற்கொள்கையில், அரச துறையிலிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களை மாத்திரமின்றி, முறைசார்ந்த மற்றும் முறைசாரா தனியார் துறையிலுள்ள வயது முதிர்ந்த குடித்தொகையினரின் சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஆற்றல்வாய்ந்த கொள்கைகளும் உபாயங்களும் பின்பற்றப்படுவது இன்றியமையாததாகும்.

அநேகர் தனியார் துறையிலும் பார்க்க அரச துறை தொழில்களுக்கு முன்னுரிமையளிப்பதனால் தற்போதுள்ள அரச பணிகள் ஓய்வூதியத்திட்டம் ‘சிறந்த தொழில்’, “கூடாத தொழில்” என்பனவற்றிடையே வேறுபாடொன்றினை உருவாக்குவதன் மூலம் தொழில்புரியும் வயதினைக் கொண்ட குடித்தொகையினரிடையே சாதகமற்ற ஊக்குவிப்புக்களை உருவாக்கியிருக்கிறது. இது அரச துறைகளிலிருந்து தனியார் துறைக்கு அல்லது மறுதலையாக தொழில்வாய்ப்பினை மாற்றிக்கொள்ளும் பொழுது ஒன்றுதிரண்ட ஓய்வூதியங்களை முன்கொண்டு செல்ல முடியாமல் இருப்பதன் காரணமாக ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாறுவது தொழில் சந்தையில் வினைத்திறனற்ற தன்மைக்கு வழிவகுப்பதுடன் தொழிற்படையில் ஊக்குவிப்புக்களையும் இல்லாமல் செய்துவிடுகின்றது.

இக்கரிசனைகள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையினை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இதனை அரச, தனியார் மற்றும் முறைசாரா துறைகளை உள்ளடக்கி நாடுமுழுவதும் தொழிற்படுத்தல் வேண்டும். அத்தகைய, ஓய்வூதியத் திட்டங்களுக்கான ஊழியர்களின் பங்களிப்பு ஏற்கனவே உருவாகியுள்ள அரச துறை ஊழியர்களின் நியாயமற்ற ஊக்குவிப்புக்களை சமநிலைப்படுத்திக்கொள்ள உதவக்கூடும். அத்தகைய திட்டமொன்று தொழில்புரிகின்ற குடித்தொகையினர் மற்றும் தொழிலின் தன்மையினைக் கருத்திற்கொள்ளாது அரசதுறை, தனியார் துறை அல்லது முறைசாராத் துறை எதிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களும் அவர்களது ஓய்வின் போது ஏதேனும் வடிவத்தில் சமூகப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதனை உறுதிப்படுத்தும். அத்தகைய பொறிமுறையொன்று நடைமுறையிலிருக்குமிடத்து, தற்போது தொழிற்பாட்டிலுள்ள சமூக நலன்புரித் திட்டங்களை நாடளாவிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றின் மூலம் அகற்றுவதனால் இறைச் சுமையினை இது தளர்த்தும். இது, நலக் கவனிப்பின் மீது அரசாங்கத்தின் செலவிடல் விரிவடைவதனை தேவையான விதத்தில் கட்டுப்படுத்துவதற்கும் உதவும்.

### முன்னோக்கிய பாதை

மாற்றமடைந்துவரும் குடித்தொகை இயக்கவாற்றல் மற்றும் உயர்வடைந்துவரும் இறைச்சுமை என்பவற்றுடன் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவது, அரச மற்றும் தனியார் துறை இரண்டையும் உள்ளடக்கிய பங்களிக்கின்ற நாடளாவிய ஓய்வூதியத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் ஓரளவிற்கு தங்கியுள்ளது. அத்தகைய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமானது ஓய்வூதியத்திற்கான கொடுப்பனவுகளில் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்வதற்கு ஊழியர்கள் தொழில்தருநர் அதேபோன்று அரசாங்கம் என்பனவற்றை ஒரு புள்ளியில் கொண்டு வருமிடத்து, வெற்றிகரமானதாக அமையும். இதில் தொழில்தருநர் மற்றும் ஊழியர்கள் மாதமொன்றிற்கான வருவாய்களின் அடிப்படையில் கட்டாய சதவீதங்களைப் பங்களிக்கின்றவிடத்து அரசாங்கம் பணவீக்கத்துடன் இணைக்கப்பட்ட சுட்டெண்ணின் கட்டாய

நன்மைகளைப் பங்களிக்கும். இப்பங்களிப்புகள் அரச பிணையங்கள் உள்ளிட்ட நிதியியல் சந்தைகளில் முதலீடு செய்யப்படும். ஊழியர்கள் ஓய்வூதிய வயதினை அடையும்பொழுது அவர்களது நன்மைகள் ஆண்டு ஓய்வூதியத் தொகை வடிவில் மீளச்செலுத்தப்படும். அத்தகைய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்களை செயற்படுத்துகின்ற பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகள் அதேபோன்று அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து கற்கைகள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் ஊழியர்களின் ஓய்வுபெறும் காலத்தில் அவை ஆண்டு ஓய்வூதியத் தொகை வடிவில் நன்மைகள் மாற்றப்படும். எனினும் அத்தகைய நாடளாவிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு, ஆர்வலர்களின் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் பரிசீலனையில் கொள்ளும்பொருட்டு அனைத்து ஆர்வலர்களினதும் ஆலோசனைகளும் தேவைப்படுத்தப்படுகின்ற வேளையில் ஒரு அரசாங்கத்திடமிருந்து மற்றொன்றுக்கு கொள்கைகள் மாறுகின்ற தன்மையும் தவிர்க்கப்படுகின்றது. காத்திரமான ஒழுங்கு விதிகளுடன் கூடிய நாடளாவிய ஓய்வூதியத் திட்டம் அவற்றின் உறுதிப்பாட்டுத் தன்மை நியதிகளில், தற்போது தொழிற்பாட்டிலுள்ள உடைந்துவிடக்கூடிய ஓய்வூதியத் திட்டங்களின் பிரச்சனைகளை கட்டுப்படுத்துவதற்கும் அதேபோன்று துறைகளுக்கிடையே தொழிற்படை நகரக்கூடிய தன்மையினையும் இயலுமைப்படுத்தும். மேலும், இது அரசாங்கததின் மீதான தற்போதைய மற்றும் எறிவு செய்யப்பட்ட செலவினச் சுமையினையும் தளர்த்தும். நாடளாவிய இப்பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்துடன் சேர்ந்து தேர்வொன்றினை தெரிவுசெய்வதற்காக விருப்பார்வமும் கிடைக்கச்செய்யப்படல் வேண்டும். இதன்மூலம் தமது மருத்துவச் சிகிச்சைக்கான கொடுப்பனவுகளை செலுத்தமுடியாத வயது முதிர்ந்த குடித்தொகையினருக்கு தாங்கக்கூடிய நலக் கவனிப்பு வழங்கப்படுகின்ற வேளையில் குறுங்காலத்தில் வறிய மக்களின் நுகர்வு மட்டங்களை உயர்த்துவதற்கும் வறுமை மட்டங்களிலிருந்து அவர்களது வருமான உருவாக்க இயலளவினை உயர்த்துவதற்குமாக சமுர்த்தி/ திவிநெகும போன்ற வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் கூடியளவிற்கு இலக்கிடப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டவிதத்தில் பேணப்பட்டு வருகின்றன.

வரைபடம் சி.கு 3.3
ஓய்வூதியம் மீதான அரச செலவினம்




மூலம் : நிதி அமைச்சு

வயது முதிர்ந்த குடித்தொகையினர் தொடர்பில் இலங்கை எதிர்நோக்கவேண்டியிருக்கும் வளர்ந்துவரும் சவால்களை அரசாங்கம் அடையாளம் கண்டிருப்பதன் காரணமாக அது 2019 வரவுசெலவுத் திட்டத்தில் உறுதித்தன்மைவாய்ந்த நிதியியல் அமைப்புடன் கூடிய தேசிய ஓய்வூதியத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழிந்துள்ளது. இதேபோன்ற முன்மொழிவுகள் முன்னைய அரசாங்கங்களினாலும் மேற்கொள்ளப்பட்டன என்பதனை கவனிக்கையில் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து அத்தகைய திட்டங்களின் அவசியம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையானது இதயத்தினைத் தொடுமொரு விடயமாகும். விரைவடைந்துவரும் வயது முதிர்ந்த குடித்தொகையின் அதிகரித்து வரும் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொள்கையில் அத்தகைய நாடளாவிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை தாமதமின்றி வடிவமைத்து நடைமுறைப்படுத்துவது மிக இன்றியமையாததாகும்.

**உசாத்துணைகள்**

Arunatilake, N. 2015. “Eliminating Pension Anomalies – Reaching Beyond Public Servants.” Institute of Policy Studies of Sri Lanka, Colombo.

Arunatilake, N. and Samarakoon, S. 2015. “Extending Adequate Pensions for all in Sri Lanka – Where are the Gaps?” Institute of Policy Studies of Sri Lanka, Colombo.

Central Bank of Sri Lanka. 2012. “Economic Implications of the Age Structure Transition of the Population.” Annual Report.

Central Bank of Sri Lanka. 2015. “Population Ageing: Challenges and the Way Forward.” Annual Report.

Department of Census and Statistics. 2012. “Census of Population and Housing.”

Department of Census and Statistics. 2017. “Preliminary Report: Census of Public and Semi Government Sector Employment – 2016.”

Department of Census and Statistics. 2019. “Quarterly Report of the Sri Lanka Labour Force Survey.”

De Silva, W. I. 2015. “Sri Lanka: Paradigm Shifts in Population.” National Centre for Advanced Studies in Humanities and Social Sciences, Colombo.

De Silva, W. I. 2007. “A Population projection of Sri Lanka for the Millennium, 2001-2101: Trends and Implications”, Institute for Health Policy, Colombo.

Osmani, S.R. 1993. “Is There a Conflict between Growth and Welfarism? The Tale of Sri Lanka.” World Institute for Development Economics Research, The United Nations University, Finland.

Perera, E. L. Sunethra J. 2017. “Ageing Population of Sri Lanka: Emerging Issues, Needs and Policy Implications.” United Nations Population Fund, Sri Lanka.

United Nations. 2002. “Political Declaration and Madrid International Plan of Action on Ageing.” Second World Assembly on Ageing, Spain.

இலங்கையின் போட்டித்தன்மையினை மேலும் தேய்வடையச் செய்யுமென்பதனால் பாடசாலை பாடவிதானத்திலும் தொழில்நுட்பம் மற்றும் முறைசாராப் பாடங்களை கற்பிப்பதனை வலுவாக்குவதற்கான வழிமுறைகள் காத்திரமாக நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும், 2018 காலப்பகுதியின் ஏறத்தாழ 160,000 மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவிற்கு தகுதிபெற்றிருந்த போதிலும் ஐந்தில் ஒரு பங்கினரே அரசாங்கப் பல்கலைக்கழக முறையினுள் உள்வாங்கப்பட்டனர். உயர்கல்வியில் மாணவர்களுக்கான ஈடுபாட்டில் போதுமான சந்தர்ப்பம் இன்மைக்கு மேலதிகமாக கணிசமான பங்கினர் பட்டப்படிப்பின்பின் பொருத்தமான வேலையில் அமர்த்தப்படுவதில் பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்து திறன்களிலான பொருத்தப்பாடின்மையைக் குறித்து நின்றன. மேலும், தொழில் வல்லுனர் சார்ந்த தகைமை வழங்குவதனை அதிகளவில் நோக்காகக் கொண்டு கணியம் மற்றும் தரநியதிகளில் அரசாங்க இரண்டாம்நிலைக் கல்வித் துறை உயர்த்தப்படவேண்டும். கல்விப் பணிகளுக்கான பொருத்தமான தரநிர்ணயக் கட்டமைப்பினை உருவாக்குவதன் ஊடாக இது இணைக்கப்பட வேண்டியுள்ள அதேவேளையில் இத்தகைய பணிகளை வழங்குவதில் தனியார் துறையின் பங்கேற்பினை மேலும் ஊக்குவிக்க வேண்டும்.

**தொற்றாநோய்களின் உயர்வடைந்துவரும் போக்கு நலத்துறையின் சாதனைகளை தக்கவைத்துக் கொள்வதனை அச்சுறுத்துகின்றன.** இலங்கையில் இளவயது மரணங்களின் ஒரு பாரிய பங்கு உயர் குருதி அழுத்தம், உயர் குருதி கொழுப்பிணி மற்றும் நீரிழிவு, நாட்பட்ட சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் போன்ற தொற்றாநோய்களின் காரணமானதென நலப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. புகையிலை மற்றும் மதுபானத்திற்கு அடிமையாதல் ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள், உடல் ரீதியாக இயக்கமின்மை மற்றும் வளி மாசடைதல், தொற்றாநோய்களினைத் தோற்றுவிக்கின்ற முக்கிய இடர்நேர்வுக் காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தொற்றாநோய்களில் உயர்வடைந்துவரும் ஒரு அச்சுறுத்தலாக புற்றுநோய் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைகளில் பிரதான காரணமாக வயது வந்தோரும் இளைஞர்களும் பாதிக்கப்படுகின்றனர். தொற்றாநோய்கள் அவற்றின் நிரந்தர தன்மை காரணமாக தொற்றுநோய்களைவிட பாரியளவான பொருளாதாரச் சுமையினைக் கொண்டிருக்கின்றன. தொற்றாநோய்களின் செலவுகள் நோயைக் கண்டறிதல் மற்றும் மருந்துகள் போன்ற நேரடிச் செலவுகளையும் நோயினாலான வருவாய் இழப்பு மோசமான ஆரோக்கிய நிலைப்பாடுகளில் விளைவான சமூகமளித்தமை மற்றும் தாழ்ந்த உற்பத்தித்திறன் போன்ற பொருளாதாரத்தின் மீதான மறைமுக செலவுகளையும் உள்ளடக்குகின்றன. இதேவேளை, நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்படக்கூடிய முதியோர் சனத்தொகையுடன் இலங்கை ஒரு குடித்தொகை நிலைமாற்றத்திற்கு முகம்கொடுத்து வருகின்றது. இந்நிகழ்வு மருத்துவம் மற்றும் நலன்புரிச் செலவினங்கள் மீது அதிகரித்த இறைச் சுமையினை மேலும், அதிகரிக்கின்ற சாத்தியமுள்ளது. மேலும், அதிகரித்துவரும் நலப் பணிகளுக்கான கேள்வியினை நேரகாலத்துடன் பூர்த்திசெய்வதற்கு பொதுநல வசதிகளின் திறனின்மை காரணமாக பாதிப்படையக்கூடிய வீட்டலகுகள் தொற்றா நோய்களுக்கு தனியார் நலத் துறையினை நாடுபவர்களாகவிருந்தால் பேரிழப்புடன் கூடிய நலச்செலவினங்களினால் பாதிப்படையக்கூடிய தன்மையினால் 'மருத்துவ வறுமை' எனும் சுழற்சியினை உருவாக்குகின்ற சாத்தியம் உள்ளது. இந்தப்பின்னணியில் நலத்துறையின் சாதனைகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அச்சுறுத்துகின்ற தொற்றாநோய்களிலிருந்து எழுகின்ற பிரச்சனைகளுக்கு முகம்கொடுப்பதற்கு விரைவான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும். இத்தகைய வழிமுறைகள் தொற்றாநோய்களினைத் தடுப்பதற்கான வாழ்க்கை முறைகள் பற்றிய பொதுமக்களுக்கான விழிப்புணர்வூட்டல் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான அறிவினை மேம்படுத்தல் போன்றவற்றையும் அதேவேளையில் தனியார் துறையின் ஆதரவுடன் தேவைப்படுகின்ற மருந்துகளையும் வசதிகளையும் தாங்கக்கூடிய விலைகளில் கிடைக்கச் செய்வதனையும் உள்ளடக்குகின்றது. குறிப்பாகத் தடுக்கக்கூடிய புற்றுநோய்கள் நிகழ்வதனை குறைப்பதற்கானதும் அதேவேளையில் தொடக்கத்திலேயே கண்டறிதலினை உறுதிப்படுத்துதல் மற்றும் முற்றுமுழுதானதும் கிடைக்கக்கூடியதுமான புற்றுநோய்க் கவனிப்பினை வழங்குதல் என்பவற்றின் மூலம் புற்றுநோயினை தீர்மானிக்கின்ற காரணிகளை கட்டுப்படுத்தலுக்கும் இல்லாதொழிப்பதற்குமான முன்கூட்டிய வழிமுறைகளை எடுப்பது அவசியமாகின்றது. மேலும், தனிப்பட்ட அடிப்படையிலான நடைமுறைகளுக்கு மேலதிகமாக தொற்றாநோய்களினைத் தடுப்பதற்கு புத்தாக்கத்துடனான சமூகம் சார்ந்த நடைமுறைகளும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**கடந்த காலங்களில் அரச துறை தொழில்நிலையில் ஒரு மிதமிஞ்சிய வளர்ச்சிக்குப் புறம்பாக செயற்றிறனின்மை மற்றும் உச்சமல்லாத வளங்களின் பகிர்ந்தளிப்புக்களின் காரணமாக அரச துறையின் பணிகளின் விநியோகம் தேங்கியிருப்பது நவீன தொழில்நுட்பத்தின் அதிகரித்த பயன்பாடு உள்ளடங்கலாக அரச துறையில் கொள்கைச் சீர்திருத்தங்களிற்கான அவசரமான தேவையினை கேட்டுக்காட்டுகின்றது.** அரச உத்தியோகத்தர் ஒருவரினால் பணி வழங்கப்படும் மக்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகள் கணிசமானளவு குறைவடைந்து சனத்தொகை வளர்ச்சியினைவிட அரச துறை தொழில்நிலையில் உயர்ந்த வளர்ச்சியினை நிரூபித்துக்காட்டுகின்றது. எனினும், அரச துறையின் வெளியீடு எதிர்பார்க்கைகளைவிட மிகவும் தாழ்ந்ததாகக் காணப்பட்டு பொதுமக்களின் பொருளாதார மற்றும் சமூக நலன்கள் மீது எதிர்க்கணியமாக பாதிக்கின்றது. அரச பணிகளின் செயற்றிறனின்மை பல வழிகளிலிருந்து எழுகின்றது. அரசியல் இடையீடுகளிலிருந்து சுயாதீனமின்மை மற்றும் கடமைகளை சீராகச் செய்வதற்கான போதுமற்றதான

பாதுகாப்பு போன்றவை முக்கிய குறைபாடுகளாகும். ஆட்சேர்ப்பு நடைமுறைகள், பதவியுயர்வு நடைமுறைகள் மற்றும் செயலாற்றுகை மதிப்பீடுகளிலான பிரச்சனைகளும் அரச பணிகளின் செயற்றிறனைத் குறைப்பதுடன் நன்கு செயற்றிறன் மிக்க தொழிலாளர்கள் வேறு இடங்களில் தொழில்நிலையினைத் தேடுவதனையும் ஊக்குவிக்கின்றன. இதன்விளைவாக அரச பணிகள் நல்ல தரமான ஊழியர்களினை கவர்வதிலும் தக்கவைத்துக் கொள்வதிலும் தடைகளுக்கு முகங்கொடுக்கின்றது. மேலும், தமது பணிகளை வேண்டுகின்ற மக்கள் மீதான அரச பணியாளர்களின் பொதுவான எதிர்க்கணிய மனப்பாங்கு மற்றும் பெரும்பாலான அரச பணியாளர்கள் சமூகத்தினை நோக்கிய தமது கடப்பாடுகளினைவிட தமது உரிமைகளைக் கவனத்தில்கொள்வதும் தீர்வுகாணப்படவேண்டிய முக்கிய பிரச்சனைகளாகும். பொது நிர்வாகத்தின் செயலாட்சியின் மிக முக்கிய பதவிகளினை நிரப்புவதற்கு தற்காலிக மற்றும் வெளியக நியமன நடைமுறைகளும் அத்தகைய நியமனம் பெறுபவர்கள் தமது செயற்பாடுகளுக்குப் பின்னர் பொறுப்புக்கூறவேண்டி எதிர்பார்க்கப்படாததனால் அரச துறையின் சராசரியினைவிட குறைந்த செயலாற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தன. இத்தகைய பிரச்சனைகளில் பல நன்கு ஆலோசிக்கப்பட்ட அரச துறை சீர்திருத்தங்களினூடாக தீர்க்கப்படவேண்டியுள்ள வேளையில் அரச துறைப் பணிகளின் விநியோகத்தின் செயற்றிறனை அதிகரிப்பதற்கான குறுங்காலத் தீர்வுகள் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஊடாக அறிமுகப்படுத்தப்படவேண்டியது அவசியமாகும். முக்கிய முறைமைகள் தன்னியக்கமயமாக்கப்பட்டுள்ளதெனினும் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு பொது வெளியிலுள்ள மேலும், பல முறைமைகள் விரைவான தன்னியக்கமயமாக்கலினை வேண்டி நிற்கின்றன. தனிநபர் அடையாளம் காணல் மற்றும் அரசிறை சேகரிப்பு போன்றவற்றுக்கான மையப்படுத்தப்பட்ட முறைமைகளின் உருவாக்கத்தினை விரைவாக்குவது இன்றியமையாததாகவிருப்பதுடன் சட்டம் மற்றும் ஒழுங்கு, நலம், கல்வி மற்றும் வருவாய் மீள்பகிர்வு போன்றவற்றுக்கான முகவராண்மைகளை உள்ளடக்குவதற்கு இது விரிவாக்கப்படக்கூடும்.

**இலங்கை 2020 அளவில் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினைப் பின்பற்றுவதுடன் பணவீக்கத்தை நடுஒற்றை இலக்க மட்டங்களில் பேணுவதற்கு எத்தனிக்கின்றமையுடன் பொருளாதாரத்தின் ஆர்வலர்கள் எதிர்காலத்தில் நியாயமான உண்மை வருவாய்களுடன் நிதியியல் உற்பத்திகளின் தாழ்ந்த பெயரளவு வீதங்களுக்கு பழக்கப்படவேண்டும்.** இலங்கை கடந்தகாலத்தில் பெயரளவு மற்றும் உண்மை நியதிகளில் சந்தை வட்டி வீதங்களில் பாரிய ஊசலாட்டத்தினை அனுபவித்துள்ளதுடன் பணவீக்கத்தினை நடுஒற்றை இலக்க மட்டங்களில் இலக்கிடுகின்ற நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலின் நடைமுறைப்படுத்தலுடன் பெயரளவு வட்டி வீதங்களில் தற்போதைய உயர்ந்த மட்டங்களிலிருந்து ஒரு படிப்படியான வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலைமாற்றத்திற்குப் பின்னரும் நேர்க்கணிய உண்மை வருவாய்கள் எதிர்பார்க்கப்படுவதனால் சேமிப்பாளர்கள் பாதுகாக்கப்படுவார்களாயினும் குறிப்பாக வட்டி வருவாயில் தங்கியிருக்கும் மூத்த பிரசைகள் போன்ற சில சேமிப்பாளர்கள் மீது தாக்கம் செலுத்தமுடியும். இது மூத்த பிரசைகள் உட்பட சேமிப்பாளர்களுக்கு பாதுகாப்பானதும் கவர்ச்சிகரமான வருவாய்களை வழங்குகின்ற மாற்றீடான நிதியியல் சாதனங்கள் அறிமுகப்படுத்த வேண்டியதன் தேவையினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. இந்த வகையில் நிதியியல் பணிகளை வழங்குபவர்கள் வைப்பாளர்களினால் பெறப்படுகின்ற முழுமொத்த நன்மைகளை உயர்த்துகின்ற மருத்துவக் காப்புறுதி போன்ற ஏனைய சாதனங்களை வைப்புக்களுடன் இணைப்பதற்கான சாத்தியத்தினை பரிசீலிக்கக்கூடும். மேலும், முதியவர்களின் ஒட்டுமொத்த வங்கித்தொழில் சார்ந்த அனுபவத்தினை உயர்த்துவதற்கு வைப்புக்களின் சிறந்த நடைமுறைகள் மற்றும் மூத்த பிரசைகள் இளைப்பாறுக் காலத்தில் எவ்வாறு தமது நிதியியல் பாய்ச்சலினைத் திட்டமிடக்கூடுமெனும் அறிவுரைகளை வழங்குவதற்கு வயதானவர்களுக்கான நிதியியல் ஆலோசனை வழங்குநர்களின் பணிகளை வழங்குதல் போன்ற பெறுமதிகூட்டப்பட்ட பணிகள் இலகுவாக வழங்கப்படமுடியும். ஒரு நீண்டகாலத் தீர்வாக அரசாங்கம் தனியார் துறையின் ஆதரவுடன் பங்களிப்புச் செய்கின்ற ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத்தொகைத் திட்டங்களை அறிமுகம் செய்யும் அதேவேளையில் இளைப்பாறலின் போது வட்டி வருவாய்களில் முழுமையாக தங்கியிருப்பதனைத் தடுப்பதற்கு தாழ்ந்த வட்டிவீதச் சூழலில் இத்தகைய திட்டங்களுக்கான வளர்ந்துவரும் தேவையினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. மேலும், சாதாரண வைப்புக்களுடன் ஒப்பிடுமிடத்து உயர்ந்த வருவாய்களை வழங்குகின்ற மாற்றீட்டு நிதியியல் சாதனங்களாக கூட்டுநிதிகள் மற்றும் நம்பிக்கைக்கூறுகள் போன்றவற்றின் நன்மைகள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கவேண்டிய தேவையுள்ளது. அடுத்துவரும் காலப்பகுதிகளில் எதிர்பார்க்கப்படுகின்ற தாழ்ந்த பணவீக்கம் மற்றும் தாழ்ந்த வட்டிவீத சூழலில் இத்தகைய நிதியியல் சாதனங்கள் மற்றும் திட்டங்களின் நேரத்துடனான அறிமுகம் நிலையான வருவாய் ஈட்டுகின்ற மூத்த பிரசைகளின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவளிக்கும்.

**கடந்தகாலத்தில் பணத்தினால் ஆட்சி செலுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல் முறைமைகள் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலமான நன்மைகளை அடைந்துகொள்வதற்கு அனுமதிக்கின்ற அதேவேளையில் அத்தகைய அபிவிருத்திகளிலிருந்து எழுகின்ற சவால்கள் முன்கூட்டியே தீர்க்கப்படவேண்டும்.** நாட்டின் தேசியக் கொடுப்பனவுகள் முறைமையில் குறிப்பிடத்தக்களவான மேம்பாடுகள் காணப்பட்ட போதிலும் இலங்கையில் சில்லறைக் கொடுப்பனவு வழிமுறையாக பணம் இன்னமும் மிகப்

பிரபலமாக இருக்கின்றது. வருடாந்தக் கட்டணம் மற்றும் கழிவுகள் தேவைப்படும் உட்கட்டமைப்பின் போதுமற்ற தன்மை மற்றும் வரிவலையினைத் தவிர்த்துக்கொள்ளல் போன்ற தொடர்புபட்ட செலவுகளினால் சில குறிப்பிட்ட கடைகளில் மாத்திரம் அட்டை மூலமான கொடுப்பனவு அல்லது இலத்திரனியல் பணம் ஏற்றுக்கொள்ளப்படுவதனால் பணத்தினை காவிச்செல்கின்ற பழக்கம் ஊக்குவிக்கப்படுகின்றது. எனினும், பணத்தினைக் கையாளுவதற்கான செலவு பணத்தின் பாவனையாளர்களுக்கும், நிதியியல் நிறுவனங்களுக்கும் மத்திய வங்கிக்கும் அதிகரித்தளவில் சவால்மிக்கதாகி வருகின்றது. எனவே, இந்த நடைமுறை படிப்படியாக மிகவும் பாதுகாப்பான பணமற்றக் கொடுப்பனவு ஊடகத்தினால் பிரதியீடு செய்யப்பட்டு ஏனைய பல அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களிலும் தோற்றம்பெற்றுவரும் பொருளாதாரங்களிலும் உள்ளதனைப் போன்று பணமற்ற கொடுக்கல்வாங்கல் பாரம்பரியத்தினை ஊக்குவிக்கவும் பழக்கப்படுத்தப்படவும் வேண்டும். கொடுக்கல்வாங்கல்களுக்கான பணமற்ற முறைகளின் அதிகரித்த பயன்பாடு நிதியியல் பாய்ச்சல்களின் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துவது மாத்திரமன்றி சட்டத்திற்கு மாறான மற்றும் முறைசாராத பொருளாதார செயற்பாட்டினையும் குறைக்கும் இதேவேளை பொதுமக்களால் திறன்பேசி போன்ற செல்லிடத்தொலைபேசியின் அதிகரித்த பாவனை ஒரு இயலச்செய்கின்ற மேடையினை உருவாக்கி அதன்மூலம் இ-வங்கித்தொழில் மற்றும் இ-பணப்பை போன்றவை உள்ளடங்கலாக பணமற்ற கொடுக்கல்வாங்கல்களுக்கான வழிகளின் கிடைப்பனவினை விரிவடையச் செய்துள்ளது. 2018இல் இலங்கையின் செல்லிடத்தொலைபேசி நுழைவு ஏறத்தாழ 150 சதவீதமாகவிருந்ததாயினும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து முழுமொத்த சில்லறைக் கொடுப்பனவுகளின் சதவீதமாக செல்லிடத்தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகள் மிகத் தாழ்ந்ததாகவிருந்தது. இருப்பினும், எண்ணியல் கொடுப்பனவுகள் அண்மைய எதிர்காலத்தில் பாரம்பரிய பணக்கொடுக்கல்வாங்கல்களை பிரதியீடு செய்வதற்கும் இத்தகைய நிலைமாற்றல் காலப்பகுதியில் தொடரேட்டுத் தொழில்நுட்பம் எதிர்வரும் காலத்தில் ஒரு முக்கிய கொடுப்பனவு மேடையாகவிருக்கும். இந்த அடிப்படையில் கொடுப்பனவுத் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்களுடன் இணைந்திருப்பதற்கு குறிப்பாக வங்கிகள், வர்த்தகங்கள் மற்றும் இறுதிப்பாவனையாளர்கள் போன்ற அனைத்து ஆர்வலர்களும் தேவைப்படுகின்ற தொழில்நுட்ப நிபுணத்துவத்தினை நேரகாலத்துடன் பெற்றுக்கொள்வது இன்றியமையாதது. இத்தகைய அபிவிருத்திகள் நாட்டின் நிதியியல் தோற்றப்பாட்டினை மீளவடிவமைப்பதற்கு எதிர்பார்க்கின்ற வேளையில் இது இலங்கையின் நிதியியல் முறைமையின் முழுமொத்த ஸ்திரத்தன்மையினையும் செயற்றிறனையும் உயர்த்தும். மத்திய வங்கியும் ஏனைய நிதியியல் நிறுவனங்களையும் தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பினையும் இத்தகைய தொழில்நுட்பங்களின் அதிகரித்த நுகர்வோர் விழிப்புணர்வையும் வழங்குவதன் மூலம் இணையப்பாதுகாப்பினை உயர்த்துவதற்கான முன்னெச்சரிக்கையான வழிமுறைகளை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**நாடு நிலைத்திருக்கும் செழிப்பினை அடைந்துகொள்வதனை இயலச்செய்யும் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்குடன் நாட்டின் முன்னேற்றத்தினை இணைப்பதனை உறுதிசெய்வதற்கு தேசிய கொள்கை நிகழ்ச்சிநிரல் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட வேண்டும்.** நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் சூழல் பிரச்சனைகளை ஒருமுகப்படுத்தப்பட்ட வலையில் தீர்ப்பதற்கான முக்கியத்துவத்தினை நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்குகள் வலியுறுத்துகின்றன. நிலைத்துநிற்கும் இலக்கின் நிகழ்ச்சித்திட்டம் வறுமையை ஒழிப்பது, பூகோளத்தினைப் பாதுகாப்பது மற்றும் அனைவருக்குமான செழிப்பினை உறுதிப்படுத்துவதற்கான ஒரு செயற்பாட்டுத் திட்டமாகும். இலங்கையின் வறுமை மட்டங்கள் குறைவடைந்தபோதிலும் தீவிரமான ஆங்காங்கே காணப்படும் வறுமைகளும் வருமான ஏற்றத்தாழ்வுகளும் இன்னமும் நாட்டினுள் தொடர்ந்திருக்கின்றன. பொருளாதார ரீதியில் பின்தங்கிய சமூகக்குழுக்கள் முதியோர் மற்றும் அங்கவீனர்களினை விசேடமாகக் கருத்திற்கொண்டு வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சிறப்பாக இலக்கிடப்பட வேண்டியதன் தேவையினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. மேலும், வறுமைக்கோட்டிற்கு சற்று மேலே வசிக்கின்றவர்களையும் பாதகமான பொருளாதார நிலைப்பாடுகளின் போது வறுமைக்குள் மீண்டும் தள்ளப்படுமளவில் பாதிப்படையக்கூடியவர்களையும் ஆதரவளிப்பதற்கான சமூகப் பாதுகாப்பு வலைகளும் வலுப்படுத்தப்பட வேண்டும். இதற்கு மேலதிகமான நீண்டகாலத்தில் அரசாங்க மாற்றல்களில் வறியவர்களின் தங்கியிருத்தலினை குறைப்பதற்காக அவர்களின் வாழ்வாதாரங்கள் நிதியியல் உள்ளடக்கம், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் கல்வி மற்றும் தேர்ச்சியிலான அபிவிருத்தி போன்வற்றினூடாக உயர்த்தப்படலாம். நிதியியல் அறிவினை உயர்த்துதல் மற்றும் நிதியியல் சந்தைகளுக்கான அணுகுதல் போன்றவை இன்றியமையாதவையாகும். கல்வி மற்றும் தேர்ச்சி அபிவிருத்திகள் தொழில்வாய்ப்புத் திறனை மேம்படுத்தி அதன் மூலம் வறுமை மற்றும் வருமான சமமின்மையை ஒழிப்பதன் ஊடாக சனத்தொகையின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் துணைபுரியும் இதேவேளையில், அண்மைய ஆண்டுகளில் பௌதீக உட்கட்டமைப்பில் கணிசமானளவு மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்குப் புறம்பாக நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்குகளுடன் இசைந்து செல்வதாக நீண்டகால சமூகப் பொருளாதார நிலைத்திருக்கும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய முதலீடுகளின் சூழல் தாக்கம் பற்றியும் கொள்கை வகுப்பாளர்கள் கவனத்திற்கொள்வது அவசியம். இந்தவகையில், சூழல் ரீதியாக நிலைத்துநிற்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியினை

இயக்குவதற்கு பசுமை நிதியிடல் முயற்சிகளை ஊக்குவிப்பது முக்கியமாகின்றது. இலங்கை 2030இல் நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டுமாயின் அரசாங்கத்தினால் தலைமைதாங்கப்பட்டு அனைத்து ஆர்வலர்களின் வலுவான கூட்டான முயற்சி தேவைப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, அரசாங்கத்தினால் பின்பற்றப்படுகின்ற கொள்கைகள் நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இலக்குகளின் நிகழ்ச்சித்திட்டதுடன் இசைவுள்ளதாக இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**இலங்கையின் அனர்த்த இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் உபாயங்கள் நேரத்துடனான தகவல் பரப்புதல், நவீன தொழில்நுட்பத்தின் பொருத்தமான பயன்பாடு மற்றும் பொருளாதாரம் பங்குடமைகளிற்கு ஆதரவளித்தல் போன்றவற்றுடன் மேலும் வலுப்படுத்தப்படலாம்.** இலங்கை அண்மைக்காலங்களில் ஒரு தொடரான இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு பொருளாதாரத்தின் மீதும் சமூகத்தின் மீதும் முற்றுமுழுதாக பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. அனர்த்தங்கள் முற்றுமுழுதாக தவிர்க்கப்பட முடியாதாயினும் தரவு சேகரிப்பு மற்றும் அவசரகால பதிலிறுப்புக்கள் போன்றவற்றில் தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் அடையாளம் காணுவதன் மூலமும் அனர்த்த இடர்நேர்வும் அவற்றின் விளைவுகளும் பாரியளவில் மட்டுப்படுத்தப்பட வேண்டும். யப்பான் போன்ற அனர்த்தத்திற்கு முகங்கொடுக்கின்ற நாடுகள் பதிலிறுக்கின்ற மட்டங்களினை உயர்த்துவதற்கும் அனர்த்த இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் டிரோன் புவியியல் தகவல் முறைமைகளின் ஊடான செய்மதித் தோற்றம் மற்றும் உண்மைநேர அனர்த்த மாதிரியிடல் உள்ளடங்கலாக நவீன தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகளவில் தங்கியிருக்கின்றன. மேலும், நவீன வசதிகள் கொண்ட கருவிகளினூடாக உருவாக்கப்பட்ட அதேநேரத் தரவுகள் மேலும் இலக்கிடப்பட்ட அவசரகால தயார்நிலை மற்றும் கண்காணிப்பு உபாயங்கள் உருவாக்குவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிறுவனங்களிற்கு அனுமதிக்கின்றன. திறன்பேசி தொழில்நுட்பத்தின் வருகையுடன் அனர்த்தம் அல்லது வானிலை தொடர்பான மாற்றங்களின் அதேநேர தகவல்கள் தனிநபர்களினால் எச்சரிக்கை செய்யப்படுவதுடன் உலகின் அனர்த்த முகாமைத்துவ உபாயங்களும் மீள்வடிவமைக்கப்படுகின்றன. அனர்த்த காலப்பகுதியில் அவசரகால பதிலிறுப்பு நியதிகளில் சமூக வலையத்தளங்களும் தொழில்நுட்ப உச்சத்தினைக் கொண்டிருந்தது. அவசரகால பதிலிறுத்தல் பணிக்குழுவினை ஒரு குறுகிய நேரத்திற்கிடையில் உயிர்பிழைத்திருப்பவர்களுடன் இணைப்பதற்கு அனுமதிக்கின்றன. மேற்கூறப்பட்டவற்றை கவனத்திற்கொள்கையில் தேவைப்படுகின்ற போது தனியார் துறையின் ஆதரவுடன் அனர்த்த இடர்நேர்வு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவு உருவாக்க முகவராண்மைகள் மற்றும் கொள்கை வகுக்கும் நிறுவனங்களுக்கிடையில் சிறப்பான ஒருங்கிணைப்புடன் இலங்கை இத்தகைய நவீன தொழில்நுட்ப அபிவிருத்திகளினை மூலதனமாக்க வேண்டிய தேவையுள்ளது.

**இலங்கைப் பொருளாதாரத்தின் அண்மைய பலயீனமான செயலாற்றம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட கொள்கை இடைவெளிகள் வளர்ச்சிமிக்க ஆதரவளிக்கின்ற, ஆனாலும் மக்களால் விரும்பப்படாத அமைப்பியல் சீர்திருத்தங்களைத் தாமதப்படுத்துவதன் காரணமாக நாடு முகங்கொடுக்கும் சவால்களைக் கோடிட்டுக்காட்டுகின்றன.** அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் நாட்டினை சீர்திருத்துவதற்கான தமது விருப்பினை எண்ணற்ற கொள்கை ஆவணங்களினூடாக வெளிப்படுத்திய போதிலும் முக்கிய முட்டுக்கட்டையாகவிருப்பது அத்தகைய முன்மொழிவுகளை காத்திரமாக நிறைவேற்றுதலாகும். அதேவேளை தனியார் துறையினால் உந்தப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு வியாபாரம் செய்யுங்கள் நிலைமைகளையும் அரச பணிகளது விநியோகத்தினையும் மேம்படுத்துகின்ற வகையில் அனைத்து ஆர்வலர்களுக்கிடையிலும் ஒன்றிணைப்பினையும் கொள்கை மாறாமையினையும் உறுதிப்படுத்துவது அவசியமாகிறது. எனினும், இலங்கை நடுத்தர காலத்தில் ஒரு உயர்ந்ததும் நிலைத்து நிற்கக்கூடியதுமான வளர்ச்சியை நோக்கி முன்னேறவும் பல தசாப்தங்களிற்கு முன்னர் இலங்கைக்கு பின்னாகலிருந்த நாடுகளினை எட்டிப்பிடிக்கவும் வேண்டுமாயின் நாடு இத்தகைய சீர்திருத்தங்களை மேலும், பிற்போட முடியாது.